# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 25 வெள்ளிக்கிழமை (11.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 350




09 சூறையாடும் திட்டமே அரசுடைமைச் சட்டம்

## மீனவர் மீதான தாக்குதல்: இந்தியா கடும் அதிருப்தி மஹிந்தவிடம் நேரில் வெளியிட்டார் மன்மோகன் சிங்

சென்னை, நவம்பர் 11

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் விவகாரம் குறித்த தமது கடும் அதிருப்தியை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரில் தெரிவித்தார். கடற்படையைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும் வலியுறுத்தினார். மாலை தீவில் நேற்று 17ஆவது சார்க் மாநாடு ஆரம்பமானது. இதில் கலந்துகொள்ள வந்திருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் நேரடிப் பேச்சுகளில் ஈடுபட்டனர். மாலைதீவு அட்டு தீவிலுள்ள ஷாங்கிரிலா ஹோட்டலில் இந்தப் பேச்சு நடைபெற்றது.

இலங்கையின் அமைதி முயற்சிகள் மற்றும் மீள்குடியேற்றத்தின் இப்போதைய நிலைமை குறித்து இந்தச் சந்திப்பின் போது இந்தியப் பிரதமருக்கு நீண்ட விளக்கமொன்றை ஜனாதிபதி மஹிந்த வழங்கினார். அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுவதாகவும், பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து இந்தியாவுக்கு அவ்வப்போது அறிவிக்கப்படுமென்றும் ஜனாதிபதி ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இந்திய - இலங்கை மீனவர்கள் தாக்கப்படும் விவகாரம் குறித்து இந்தப் பேச்சின்போது விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து இங்கு கவலை வெளியிட்டிருக்கும் பிரதமர் மன்மோகன்சிங், இதனால் தமிழக அரசிடமிருந்தும், தமிழக இதர அரசியல் தலைவர்களிடமிருந்தும் தொடர்ந்தும் அழுத்

பக் 27



## சவேந்திர சில்வாவை தூதர் பதவியிலிருந்து தூக்கி வீசுங்கள்

ஐ.நா. செயலாளரிடம் மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்து

கொழும்பு, நவ. 11

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை அந்தப் பதவியில் இருந்து நீக்குமாறு கோரி பத்து அனைத்துலக மனித உரிமைகள் குழுக்கள் ஒன்றிணைந்து ஐ.நா பொதுச்செயலர் பான் கீ - மூனிடம் கோரியுள்ளன. இது தொடர்பில் அவை கடிதம் ஒன்றையும் அவருக்கு அனுப்பி வைத்துள்ளன.

ஐ.நாவுக்கான பிரதித் தூதுவர் பதவிக்காக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சமர்ப்பித்த அறிமுக ஆவணத்தை நிராகரிக்குமாறும் அவை கோரியுள்ளன.

சித்திரவதைகள், நீதிக்குப்புறம்பான படுகொலைகள், பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்கள் போன்ற போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக இவர் மீது அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்பதையும் மனித உரிமைக் குழுக்கள் தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளன.

"போர்க்குற்றவாளி ஒருவரை ஐ.நா தனது பதவித் தரத்தில் வைத்துள்ளது. இது ஒரு உளவியல் மற்றும் சட்ட நடவடிக்கை" என்று அமெரிக்கப் பல்கலைக்கழக வொசிங்டன் சட்டக் கல்லூரியின் மனித

பக் 27

15 எனது மகன் எங்கேயாவது உயிருடன் இருப்பான்



25 சச்சினுக்கு நெருக்கடி கொடுக்காதீர்கள்



போதைப் பொருள் விற்ற சந்தேகநபர், அவர் விற்ற ஹெரோயின் மற்றும் கஞ்சா பீடிகளுடன் காணப்படுகிறார். சரையில் காணப்படும் ஹெரோயின் தூளின் விலை 750 ரூபா.

# ஹெரோயின் பாவனையில் நகரப் பாடசாலை மாணவர்

## யாழ். கல்விச் சமூகம் கடும் அதிர்ச்சி அதிரடி நடவடிக்கையில் ஒருவர் கைது

அலுவலகச் செய்தியாளர் தி.அமுதன்

யாழ்ப்பாணம், நவம்பர் 11

ஹெரோயின் போதைப் பொருளைப் பயன்படுத்தினார்கள் மற்றும் நண்பர்களுக்கு அதனை விற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் யாழ். நகரப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று யாழ். பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சமன் சிகேரா உதயனுக்குத் தெரிவித்தார். இவர்களுக்கு போதைப் பொருளை விநியோகித்த வலைப் பின்னலை முடக்குவதற்கான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அந்த வலைப் பின்னலைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

யாழ். நகரில் மாணவர்கள் மத்தியில் ஹெரோயின் பயன்பாடு குறித்த தகவல் கல்விச் சமூகத்தைக் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது. மாவட்டத்தின் ஒரே சொத்தான கல்வியை அடியோடு பாழாக்கி விடக்கூடிய இந்தப் பழக்கத்தைத் தடுக்க உடனடியாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கல்விச் சமூகத்தினர் வலியுறுத்தி உள்ளனர்.

பாடசாலை மாணவன் ஒருவன் போதைப் பொருள் பயன்படுத்துவதாகக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து பொலிஸார் விரைந்து எடுத்த நடவடிக்கையில் பல மாணவர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் இருந்து, மாணவர்களுக்கு ஹெரோயின், கஞ்சா, அபின் போன்ற போதைப்பொருள்களை விநியோகித்த கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்

பக் 27

### விழிப்புணர்வு நடவடிக்கை அவசர, அவசிய தேவை

யாழ்ப்பாணம், நவ. 11

மாணவர்களிடம் பரவிவரும் இந்தப் போதைப் பொருள் பாவனையைத் தடுத்து நிறுத்த சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் இணைத்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசர, அவசிய தேவையாக உள்ளது என்று யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

"யாழ்ப்பாண மக்களின் சொத்தான கல்வியை அழிப்பதற்காகவே மாணவர்களைப் போதைப் பொருளுக்கு அடிமையாக்குகிறார்கள். இதனைத் தடுப்பதற்கு பொது நிறுவனங்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் முன்வர வேண்டும்" என்று தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறைத்

பக் 27

## தெற்காசிய பிராந்திய அபிவிருத்திக்கு சமாதானமும், பாதுகாப்பும் அவசியம்

மாலைதீவில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ 11

பொருளாதார அபிவிருத்தியின் பயன்களை கீழ்மட்ட மக்களும் பயன்பெறக் கூடியதாக மாற்றுவதற்கு தெற்காசியப் பிராந்தியத்தில் சமாதானமும், பாதுகாப்பும் அத்தியவசியமானதாகும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்க் உச்சி மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு - அத்து நகரில் நேற்று ஆரம்பமான 17ஆவது சார்க் உச்சிமாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு-

எமது மக்களிடம் இயல்பாகவே உள்ள திறன்களும், படைப்பாற்றலும் எமது நாடுகளுக்கு இருக்கும் மாபெரும் சக்தியாகும். ஆகவே நமது பிராந்திய மக்களின் திறமைகளிலிருந்து பயன்பெறுவதற்கு அனுசரணையளிப்பது சார்க் பிராந்திய நாடுகளின் தலைவர்களான எமது தலையாய கடமையாகும்.

இலங்கையில் வாழ்கின்ற நாங்கள் சமூக நகர்வு தொடர்பில் தீவிர நம்பிக்கை வைத்துள்ளோம். எமது மக்களின் அன்றாட வாழ்க்கையில் பொருளாதார நலன்களில் இருந்து பயன்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிப்பதற்கு நாம் கட்டுப்பட்டுள்ளோம்.

மிகச் சிறந்த

பக் 26

## மனோகணேசனுக்கு ஆசனத்தை விட்டுக்கொடுக்கத் தயாரில்லை

நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன்

கொழும்பு, நவ.11

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்காக ஆசனத்தை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்

பக் 27

## நோர்வேயின் விசேட அறிக்கை இன்று

ஒஸ்லோ, நவ.11

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முனைப்புக்கள் குறித்து நோர்வே அறிக்கை வெளியிடவுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக நோர்வே இன்று வெள்ளிக் கிழமை சமாதான முனைப்புக்கள்

பக் 27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
11 நவம்பர் 2011 வெள்ளிக்கிழமை

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்திப்பிரிவுகள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் சாத்தியம் உள்ளது.

# வன்னியில் 38 பாடசாலைகள் அடுத்த ஆண்டில் அபிவிருத்தி

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வன்னியில் ஏழு கல்வி வலயங்களையும் சேர்ந்த 38 பாடசாலைகள் அடுத்த வருடம் அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

வன்னியில் ஏழு கல்வி வலயங்களையும் சேர்ந்த 335 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் அடுத்தவருடம் அபிவிருத்தி செய்வதற்கென 38 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அது போன்று 2013 ஆம் ஆண்டு அபிவிருத்தி செய்வதற்கென ஐந்து பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் அபவிருத்தி செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:

கிளிநொச்சி கல்விவலயத்தில் முழங்காவில் ம.வி, தர்மபுரம் ம.வி, பாரதி வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி சி.சி. பாடசாலை ஆகியனவும் முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் புதுக்குடியிருப்பு சி.சி.த.க பாடசாலை, வித்தியானந்தக்கல்லூரி, முல்லைத்தீவு ம.வி, உடையாளர் கட்டு ம.வி ஆகியனவும்,

துணுக்காய் கல்வி வலயத்தில் பாண்டியன் குளம் ம.வி, யோகபுரம் ம.வி, முத்தையன் கட்டு ஆர்.பி.ஜீ.ரி.எம்.எஸ், மாங்குளம் ம.வி, மல்லாவி சி.சி.த.க பாடசாலை, ஒட்டுசுட்டான் ம.வி ஆகியனவும்,

மன்னார் கல்வி வலயத்தில் முசெலி ம.வி, தலைமன்னார் ஜீ.ரி.எம்.எல், நானாட்டான் ம.வி, மன்னார் பாத்திமா ம.வி, எருக்கலம் பிட்டி மத்திய ம.வி ஆகியனவும்,

மன்னார் மடு வலயத்தில் இலுப்பைக்கடவை ஜீ.ரி.எம்.எஸ், இரணை இலுப்பைக்குளம் ஜீ.ரி.எம்.எஸ், பெரிய பண்டிவிரிச்சான் ம.வி, பெரிய மடு ம.வி ஆகியனவும்,

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் ஓமந்தை மத்திய கல்லூரி, புளியங்குளம் இந்துக்கல்லூரி, தரணிக்குளம் வித்தியாலயம், நெடுங்கேணி ம.வி ஆகியனவும்,

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் பெரிய கோமரசங்குளம் ம.வி, வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், அல் இக்பால் வித்தியாலயம், வவுனியா மடுக்கந்த ம.வி ஆகியனவும் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இது தவிர 2013 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் பரந்தன் இந்து ம.வி, பளை மத்திய கல்லூரி என்பனவும் வவுனியா தெற்கு வலயத்தில் திருஞான சம்பந்தர் பாடசாலை, பூவரசங்குளம் ம.வி, காமினி ம.வி என்பனவும் அபிவிருத்தி செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றார் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர். (த-4)

# அரச அதிபர்களின் இடமாற்றம் அநீதியான செயல்

மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் மன்னார் மாவட்டத்துக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த இடமாற்ற நடவடிக்கையினை இரத்துச் செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் மன்னார் மாவட்டத்துக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை அரச அதிபராக நியமித்தமை தவறான செயற்பாடாகும். இந்த விடயம் தொடர்பிலும் கவனம் செலுத்தி தமிழ் பிரதேசங்களுக்கு தமிழ் பேசும் அரச அதிபர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (த)

# இரவில் வீடு புகுந்து பெண் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ.11

நேற்றுமுன்தினம் இரவு வீட்டுக்குள் அத்துமீறி புகுந்த ஐவர் அடங்கிய குழுவினர் வீட்டில் இருந்த பெண் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது:-

வடமராட்சி கிழக்கு முள்ளியான் பகுதியில் வீட்டுக்குள் பெண் ஒருவர் உறங்கிக் கொண்டிருந்த வேளை ஐவர் அடங்கிய குழுவினர் அந்தப் பெண்ணைக் கண்டபடி தாக்கி விட்டு தப்பிச்சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இச் சம்பவத்தில் கட்டைக்காடு முள்ளியான் பகுதியைச் சேர்ந்த தேவபாலன் அன்சியா (வயது 28) என்பவரே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-319)

# சிறுப்பிட்டி எரிபொருள் நிலையத்தில் திருட்டு

சிறுப்பிட்டியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

நள்ளிரவில் திருடர்கள் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் முன்பக்கக் கதவை உடைத்து உள்ளே நுழைந்து அங்கிருந்த ஒருதொகைப் பணத்தையும் ஒயில் கொள்கலன்களையும் களவாடிச் சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-26)

# கிளிநொச்சியில் மீள்குடியமர்வு முழுமையாகப் பூர்த்தியானது

## அரச அதிபர் ரூபவதி தகவல்

அக்கராயன், நவ.11

மீள்குடியேற்றம் செய்யப்படாத மக்கள் என்று ஒருவரும் எமது மாவட்டத்தில் இல்லையெனக் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மீள்குடியேற்ற நிலைவரம் தொடர்பாக உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நலன்புரி நிலையங்களில் மக்கள் இல்லை. மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மட்டும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். சகல மக்களுக்கும் மீள்குடியேற்றத்துக்குரிய அடிப்படை நிவாரண உதவிகளை வழங்கி வருகிறோம். எமது மாவட்டத்தில் வாழ்கின்ற சமயத்தில் பணக் கொடுப்பனவு, வாழ்வாதார உதவிகள், உலர் உணவு போன்ற உதவிகள் கிடைக்கின்றன.

மாவட்டத்தின் கல்வி நிலைவரத்தைப் பொறுத்தவரை மீள் குடியேற்றம் நடந்தவுடனேயே பாடசாலைகள் அனைத்தும் இயக்கப்பட்டு மாணவர்களின் கல்வி முன்னேற்றமடைந்து வருகிறது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கூட பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்றனர். சில குறைபாடுகள் உள்ளன. நகர்புறப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லாது இருந்தாலும் கிராமப்புறப் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிகிறது. கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெறுகின்றன. எனக் கூற முடியும் - என்றார். (த-410)

# மரக்கிளை கழுத்தைத் தாக்கியதில் காயமுற்றவர் சாவு

வேப்பமரக் கிளை ஒன்றை வெட்டியபோது அது கீழே நின்றிருந்தவரின் கழுத்தைப் பதம் பார்த்ததால் மயங்கிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பயனளிக்காது எட்டாவது நாளான நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மிருசுவில் தெற்கில் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்றது.

சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை மகேந்திரன் (வயது-36) என்பவரே மரக்கிளை விழுந்து கழுத்தில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டிருந்தார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்று அங்கு மரணமானார். கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# நிகழ்வுகள் இன்று

### பரிசளிப்பு விழா

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. பாடசாலை அதிபர் மு.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் நாகலிங்கம் வன்னியசிங்கம் கலந்து கொள்வார். (ம-313)

* * *

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தின் 42 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் முற்பகல் 10.30 மணியளவில் வித்தியாலய அதிபர் ஐ.குகானந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினராகப் பாரம் பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார்.

இதேவேளை ஆசிரிய சேவையில் வெள்ளிவிழா காணும் ஆசிரியர் யோ.அருள்நேசன், ஆசிரியை திருமதி மேரி ஜேசப் அருள், ஆசிரியை திருமதி மேரிதில்லைநாதன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-23-86)

### யோகாசன வகுப்பு

யாழ். சிவானந்த மகரிஷி யோக நிலையத்தின் ஏற்பாட்டில் புதிய யோகாசன வகுப்புக்கள் மாலை 4.30 மணிக்கு எச்சாட்டி ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகில் உள்ள பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந்த வகுப்பில் வயது வேறுபாடின்றி எவரும் பங்கு பற்றலாம். (ம-313)

### சமயதீட்சை வழங்கல்

ஏழாலை இந்து இளைஞர் சபையின் ஏற்பாட்டில் பிரதேச இந்து மக்களுக்கான சமயதீட்சை வழங்கும் நிகழ்வு காலை 8 மணிக்கு ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவா ணேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

### மாதாந்தக் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் உள்ள சமூக சேவை அதிகாரிகள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதக் கூட்டமும் யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் செயலமர்வும் காலை 9 மணிக்கு கோயில் வீதி, நல்லூரில் உள்ள யூ.என்.எச்.சி.ஆர் நிறுவன அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன. (ம-121)

### ஆன்மிக நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு முற்பகல் 10.30 மணிக்கு "மானிட வாழ்வியல் மகத்துவம்" என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும். (ம-236)

### நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம் சாந்திகம் உளவளத் துணை நிலையத்தின் ஏற்பாட்டில் முற்பகல் 10 மணிக்கு நல்லூர் தியாகிகள் அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் உளநலம் சார்ந்த நான்கு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு சாந்திகம் உளவளத்துணை நிலையத் தலைவர் வைத்திய கலாநிதி வி.அனவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் இலங்கையில் உளநலம் மற்றும் உளநலத் தாதியருக்கான அறிமுகம், இலங்கையின் சமூகப் பணிக்கான உளநலம் ஓர் அறிமுகம் என்னும் இரண்டு தமிழ் மொழியிலான நூல்களும் றிப்ளெக்சன் ஒன் மென்ரல் ஹெல்த் அன் வெல்லியிங், [illegible] என்னும் [illegible] நூல்களும் வெளியிடப்படவுள்ளன. இந்த நூல்களின் அறிமுக உரைகளைத் தாதிய அலுவலரும், விரிவுரை உதவியாளருமான எஸ். ஜெயக்குமார், உளநல சமூகவியலாளர் எஸ்.ரவீந்திரன், விரிவுரையாளர் ஆர். இராஜேஸ் கண்ணா, உளநல வைத்திய நிபுணர் எஸ். சிவதாசன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ம-86)

### கருத்தரங்கு

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடகிழக்கு, மத்திய தென்மாகாணங்களைச் சேர்ந்த அருளுரையாளர்களுக்கான கருத்தரங்கு இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் ரிம்மர் மண்டபத்தில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் முன்னாள் தலைவர் பேரருட் திரு தவநேசன் அடிகளார் மற்றும் வடக்குக்கிழக்குத் திரு அவைத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டு அருளுரையாளர்களுக்கு கருத்துரைகளை வழங்குவர். (ம-236)

### கண்காட்சி

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்தக் கண்காட்சியை பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பார்வையிட்டுப்.

பயன்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதை முகாம்கள் வைத்திருந்தோமா? நிரூபித்தால் அரசியலிலிருந்து விலகத் தயார்!

## ஐ.நா.குற்றச்சாட்டுக்கு புளொட் சித்தார்த்தன் மறுப்பு

கொழும்பு, நவ.11

இரகசியத் தடுப்பு முகாம்களையோ, சித்திரவதை நிலையங்களையோ தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) வைத்திருக்கவில்லை. இப்படியான குற்றச்சாட்டுகளை நான் முற்றுமுழுதாக நிராகரிக்கிறேன். இதை யாராவது நிரூபித்தால் அரசியலிலிருந்து முற்றாக ஒதுங்கிவிடவும் தயார்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் புளொட் இயக்கத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தில் புளொட் இயக்கம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்துள்ள சித்தார்த்தன் மேலும் கூறியவை வருமாறு:-

சித்திரவதை மற்றும் தடுத்து வைத்தல் குறித்தான முகாம்கள் எமது அமைப்பிடம் இல்லை; முன்பும் இருந்ததில்லை. அவர்கள் கூறுகின்ற வவுனியா ஹொரொவப்பத்தானை வீதியில் இருக்கின்ற எங்கள் அலுவலகம் மக்கள் வந்து எங்களைச் சந்திக்கின்ற ஒரு அலுவலகமாக முன்னர் இருந்திருக்கின்றது. அங்கு நானும் அடிக்கடி சென்று பணிபுரிந்திருக்கின்றேன்.

நான் செல்லுகின்றபோது அங்குதான் மக்கள் சந்திப்புகளை ஏற்படுத்துவது வழக்கம். யுத்தக்காலத்தில் புலிகள் எங்களைத் தாக்கியபோது தற்பாதுகாப்புக் கருதி எங்களுக்கு இராணுவத்துடன் ஒரு உறவு இருந்தது. யுத்தம் முடிந்த பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் இருந்த இடைத்தங்கல் முகாம்களுக்குக் கூட இராணுவம் எங்களை அனுமதித்திருக்கவில்லை. ஆகவே, இப்படியான குற்றச்சாட்டுகளை முற்றுமுழுதாக நான் நிராகரிக்கின்றேன். இதை யாராவது நிரூபிக்க முடியுமென்றால் நாங்கள் அரசியலில் இருந்துகூட ஒதுங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

யாரும் சொன்னதைக் கேட்டு வைத்துக்கொண்டு அது இந்த அறிக்கையில் உள்வாங்கப்பட்டிருக்கிறது என்றுதான் நான் நினைக்கின்றேன். வவுனியா ஹொரொவப்பத்தானை வீதியில் ஒரு அலுவலகம் இருந்தது. யுத்தம் முடிந்து சொற்ப காலங்களுக்குள் அதை நாங்கள் மூடி உரிமையாளரிடம் கையளித்துவிட்டோம். அவர்கள் அதை வேறு யாருக்கோ வாடகைக்குக் கொடுத்திருக்கின்றார்கள்.

நிச்சயமாக எங்களைத் தாக்க வந்த இடங்களில், சிலவேளைகளில் எங்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் வைத்திருந்த ஆயுதங்களைப் பாவித்து சில தாக்குதல் நடத்தியிருக்கலாம். அதாவது, எங்களைத் தாக்குகின்றபோது தற்காப்புத் தாக்குதல்கள் நடத்தியிருக்கின்றோமே தவிர, இதற்கென்று தேடிப் பிடித்து அவர்களை விசாரிக்கின்ற வேலைகள் எதையும் நாங்கள் செய்யவில்லை. - இவ்வாறு தெரிவித்துள்ளார் புளொட் தலைவர். (த-சி)

## நேபாள அமைதிக்கான இலங்கையின் யோசனைக்குப் பாபு ராம் வரவேற்பு

கொழும்பு, நவ.11

நேபாளத்தின் அமைதி முயற்சிகளுக்காக இலங்கை அளித்து வரும், ஆதரவுக்கும் ஒத்துழைப்பிற்கும் நேபாள பிரதமர் டாக்டர் பாபுராம் பட்டாராய் நன்றி தெரிவித்துள்ளார்.

சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மாலைதீவு சென்றிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார். இரு நாட்டு நட்புறவு மற்றும் பொருளாதார மேம்பாட்டு விடயங்கள் குறித்து இருவரும் பேச்சு நடத்தினர்.

நேபாள அமைதி முயற்சிகளுக்கு இலங்கை அளித்து வரும் ஒத்துழைப்புக்கு மிகுந்த பாராட்டை இதன்போது தெரிவித்த நேபாளப் பிரதமர் அமைதி மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பில் இலங்கை அரசு முன்வைத்த ஏழு அம்ச அரசியல் தீர்வு வரைபு யோசனைகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

அட்டு நகரில் ஷாங்கிரி லா ஹோட்டலில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக நேபாள ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (ஒ-சி)

## புத்தளத்தில் திடீர் சோதனை ஆயுதங்களுடன் 8 பேர் கைது

கொழும்பு, நவ.11

புத்தளத்தின் சில பகுதிகளில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட அதிரடிச் சோதனை நடவடிக்கையின்போது சட்ட விரோத ஆயுதங்களுடன் எட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினர் மற்றும் புத்தளம் பொலிஸார் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்று, 26 ரவைகள் மற்றும் விலங்குகளின் கொம்புகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் குறித்து புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)


## இலங்கை மீனவர்கள் நால்வர் இந்திய கடற்படையால் கைது

கொழும்பு, நவ.11

இந்தியக் கடற்பகுதிக்குள் நுழைந்த இலங்கை மீனவர்கள் 4 பேரை இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் இராமேஸ்வரத்தில் வைத்து கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அவர்கள் இந்திய எல்லைக்குள் நுழைந்தனர் என கடலோரக் காவல் படைத் தளபதி தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்களை இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-சி)



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலைதீவில் சந்தித்துப் பேசியபோது...

## காலிக் கடலில் மூழ்கி மூவர் பலியாகினர்

கொழும்பு, நவ. 11

காலி - கொஸ்கொட கடற்பகுதியில் நேற்று நீரில் மூழ்கி மூவர் பரிதாபமாகப் பலியாகியுள்ளனர்.

அத்துடன், நீரில் மூழ்கிய மேலும் மூவர் காப்பாற்றப்பட்டுள்ளனர். நேற்றுமாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் களுத்துறை - மதுகமகெலின் கந்த பகுதியில் இருந்து சுற்றுலா சென்ற குழுவினரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்களில் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-சி)

# இந்துசமுத்திரப் பாதுகாப்புக் குறித்து கோத்தபாய தலைமையில் மாநாடு

### காலியில் 14ஆம், 15ஆம் திகதிகளில் 17 நாடுகள் பங்கேற்பு

கொழும்பு, நவ.11

இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் எடுக்கும் 'காலி பேச்சு மாநாடு' (கோல் டயலொக்) எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு காலி, லைட்ஹவுஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது எனக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் சுமார் 17 நாடுகளின் கடற்படை அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இந்த மாநாட்டின்போது கடல்மார்க்க போக்குவரத்துகளின் பாதுகாப்பை உறுதிசெய்தல், வர்த்தக கப்பல்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், அதற்கான தீர்வுகளும், கடற்படைகளின் தந்திரோபாய நடவடிக்கைகள், படகு மூலமான ஆள்கடத்தல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

அத்துடன், கடல்மார்க்க வர்த்தக நடவடிக்கைகளுக்கு பெரும் சவாலாக விளங்கும் கடற்கொள்ளையர்கள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படும்.

மேலும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள நாடுகளில் கடற்படை அதிகாரிகள் கடந்த 15 மாதங்களில் எதிர்நோக்கப்பட்ட சவால்கள், பிரச்சினைகள் மற்றும் அதனை வெற்றிபெற்ற அனுபவங்கள் தொடர்பாகக் கருத்துப் பரிமாறிக்கொள்வர் என்றும் கூறப்படுகின்றது.



இதேவேளை, இந்த மாநாட்டின்போது குறிப்பாக இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுமா என கடற்படைப் பேச்சாளரிடம் வினவியபோது அது குறித்து இந்த [illegible] (த-சி)

## 11.11.11 இல் ஐஸ் அம்மா

இன்று 11.11.11. அதிர்ஷ்ட நாள். நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே வரும் இந்த நாள் மிகவும் அதிர்ஷ்டமான - இராசியான நாளாகக் கணிக்கப்படுகிறது.

இந்த நாளில் குழந்தை பெற்றுக்கொள்ள உலகின் பிரபலங்கள் பலர் திட்டமிட்டுள்ளனர். இந்த நாளின் 11 மணி 11 நிமிடம் 11 விநாடியில் பிறக்கும் குழந்தை அதிஷ்டம் செய்திருக்க வேண்டும்.

இந்த அதிர்ஷ்ட நாளான இன்று உலக அழகி ஐஸ்வர்யா ராய், சிசேரியன் மூலம் பிரசவத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்.

உலக அழகி ஐஸ்வர்யா ராய்க்கு இம்மாதம் 2ஆவது வாரத்தில் பிரசவம் இருக்கும் என டாக்டர்கள் கணித்தனர். ஆனால், 11.11.11. என்ற அபூர்வ நாளில் பிரசவம் நடக்க வேண்டும் என்று பச்சன் குடும்பத்தினர் ஆர்வப்படுவதால் சிசேரியன் மூலம் பிரசவத்துக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

இதற்காக அவர்கள் மும்பையில் உள்ள பிரபல வைத்தியசாலை ஒன்றில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டில் 'எண் 1ஐ' அடிப்படையாகக் கொண்டு நான்கு திகதிகள் வருகின்றன. இதில் ஏற்கனவே 1.1.11, 11.1.11, 1.11.11 ஆகிய திகதிகள் முடிந்து விட்டன.

நீங்கள் பிறந்த ஆண்டின் கடைசி இரண்டு இலக்கங்களோடு, வயதைக் கூட்டினால் 111 வரும். அதேபோல இந்த திகதிகளும் வருகின்றன.

ஒன்றை அடிப்படையாக கொண்ட இந்த ஆண்டு அதிர்ஷ்டமானது என்ற எஸ்.எம்.எஸ்களும் வலம் வருகின்றன.

இந்த ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில்தான், 5 சனிக்கிழமைகள், 5 ஞாயிற்றுக்கிழமைகள், 5 திங்கட் கிழமைகள் வந்தன. இது 823 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் அதிசயம். 11.11.1111 என்ற ஆண்டு, 900 ஆண்டுகளுக்கு முன் வந்தது. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபை

## வேலணை 2012 ஆம் ஆண்டுக்கான

## கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள், வாகனத் தரிப்பிடம், சிற்றுண்டிச்சாலை என்பவற்றை 01.01.2012 தொடக்கம் 31.12.2012 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 2011.11.16 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 2011.11.18 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி : 2011.11.18 பிற்பகல் 01.30 மணி

### 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணை

| இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT தவிர) | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் (VAT தவிர) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT தவிர) |
|---|---|---|---|---|
| | மண்டைதீவு உப அலுவலகம் | | | |
| 01 | மண்டைதீவு மீன்சந்தை | 500.00 | 5,000.00 | 11,000.00 |
| | அல்லைப்பிட்டி உப அலுவலகம் | | | |
| 01 | அல்லைப்பிட்டி மீன்சந்தை | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| | வேலணை உப அலுவலகம் | | | |
| 01 | செட்டி புலம் மீன்சந்தை | 500.00 | 5,000.00 | 36,316.50 |
| 02 | துறையூர் மீன்சந்தை | 1,000.00 | 10,000.00 | 135,850.00 |
| 03 | அம்பிகைநகர் மீன்சந்தை | 500.00 | 5,000.00 | 29,700.00 |
| 04 | சரவணை மீன்சந்தை | 500.00 | 5,000.00 | 11,000.00 |
| 05 | சாட்டி சுற்றுலாக்கடற்கரை சிற்றுண்டிச்சாலை | 500.00 | 5,000.00 | 36,000.00 |
| 06 | சாட்டி சுற்றுலாக்கடற்கரை வாகனத் தரிப்பிடம் | 500.00 | 5,000.00 | 150,000.00 |
| | புங்குடுதீவு உப அலுவலகம் | | | |
| 01 | மடத்துவெளி மீன்சந்தை | 1,000.00 | 10,000.00 | 134,200.00 |
| 02 | புங்குடுதீவு மாட்டிறைச்சிக்டை | 1,000.00 | 10,000.00 | 264,110.00 |
| 03 | குறிகாட்டுவான் துறைமுக வாகனத்தரிப்பிடம் | 500.00 | 5000.00 | 1,000,000.00 |
| | நயினாதீவு உப அலுவலகம் | | | |
| 01 | நயினாதீவு வடக்கு மீன்சந்தை | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| 02 | நயினாதீவு தெற்கு மீன்சந்தை | 500.00 | 5,000.00 | 27,500.00 |

* கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வேலணை பிரதேச சபை, வேலணை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப் படல் வேண்டும். இரண் டாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந் திய உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
* கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன், தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப் பித்தல் வேண்டும்.
* உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால், அவரின் கேள் விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
* ஆகக்குறைந்த, கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவது டன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
* கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித்தொகை என்பவற்றுக்கு 12% (VAT) பெறுமதிசேரி வரிசெலுத்தப் படல் வேண்டும்.
* கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் தவிசாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.
* தெரிவு செய்யப்படும் இறைச்சிக் கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியை யும், ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 2011.11.25 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
* கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோசமுகமளிக்கலாம்.
* புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தையில் நயினாதீவிலிருந்து கொண்டுவரும் மீன்களுக்குச் சந்தைவரி தவிர்த்தே அறவிடப்பட வேண்டும்.
* சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்.
* வாகனத் தரிப்பிடங்களில் வேலணை பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களையே பற்றுச் சீட்டு வழங்கி அறவிட வேண்டும். மேலும் இலங்கை போக்குவரத்து சபை, அரச முத்திரை பொறிக்கப் பட்ட வாகனங்கள் தவிர்த்தே வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். (துவிச்சக்கர வண்டி 5/=, மோட்டார் சைக்கிள் 10/=, கார், ஓட்டோ, லான்மாஸ்ரர் 30/=, ஒற்றைக்கதவு சிறிய வாகனம் (லொறி, மினிபஸ், டொல்பின்) 50/=, இருகதவு பெரிய வாகனம் 100/=)
* கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலணை பிரதேச சபை,
வேலணை.
2011.11.09

(சி/5710)(2,3,6,7)

[illegible], தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான

## பாராட்டு விழா 2011

கிளி / இராமநாதபுரம் ம.வி.



இடம் : பாடசாலை மண்டபம்
காலம் : இன்று (11.11.2011) வெள்ளிக்கிழமை மு.ப.10
தலைமை : திரு.சி.முருகானந்தன் (அதிபர்)
பிரதம விருந்தினர் : உயர்திரு. சி.கணேசலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன் நன்நாளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான
1. சி.நிலவன் 169 மாவட்ட நிலை 15 2. வி.மதுஷனன் 160 மாவட்ட நிலை 59
ஆகிய இருவரையும் வாழ்த்துவதுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

(10311)(1,6,7) - பாடசாலைச் சமூகம்

## யாழ்.நகரில் இலவசக் கருத்தரங்கு

கருத்தரங்கில்..

★ யாழ்.நகரில் தொழில் வாய்ப்பு, உள்நாட்டு, வெளிநாட்டு உயர் கல்வி சம்பந்தமான இலவசக் கருத்தரங்கு
★ நீங்களும் ஓர் ஆசிரியர் ஆகலாம்
★ நீங்களாகவே மாதாந்த சுய வருமானத்தைத் தேடிக்கொள்ளலாம்.
★ நீங்களும் கல்வி நிறுவனம் ஒன்றை சுயமாக ஆரம்பிக்கலாம்
★ London, USA, Canada மற்றும் ஏனைய Europe நாடுகளில் உயர்கல்வி
★ கனடா நாட்டின் புதிய வேலை வாய்ப்புகள்

இன்னும் பல சுவாரஸ்யமான விடயங்களை இந்த இலவசக் கருத் தரங்கில் கலந்துகொண்டு பயனடையுங்கள், ஆர்வமுடை யோர், பெற்றோர், மாணவர்கள் அனைவரும் வரலாம்.

இடம்: Green Grass Hotel
Asirwatham Lane, No.33, Hospital Road, Jaffna
காலம்: சனிக்கிழமை 12.11.2011 (இலவசக் கருத்தரங்கு)
ஞாயிற்றுக்கிழமை (நேரடி சந்திப்பு)
நேரம்: காலை 09.30 முதல்

அனுமதி இலவசம்

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் பதிவு. இல: P.V.37191

Greenwich College
No.34, Galle Road, Dehiwala

தொடர்புகளுக்கு:
0775083460, 0771019093

குறைந்த செலவில்

## வீடு/கட்டடம் அமைக்க



தங்களுக்குரிய வீடு/ கட்டடம் ஒன்றை அமைப்பதில் தங்களின் நேரடி யான பங்களிப்பு இருப்பின் 25% வரை செலவினை குறைக்க முடியும் என்பதனை நீங்கள் அறிந்துள்ளீர்களா?

அத்துடன்
முதல் தரமான கட்டடப்பொருள்களின் பாவனை
30 வருட அனுபவமிக்க சகல வேலைக்குமான தொழிலாளர்கள்
மிக மிக குறுகியதான காலப்பகுதி
பொறியியலாளர்களின் தொடர்ச்சியான நேரடியான மேற்பார்வை
★ மிக அவசரமான வேலைகள் உடனடியாகவே செய்து தரப்படும்
கூட்டுறவு/ பொது அமைப்புக்களுக்கு மிகவும் பொருத்தமான முறை

(10277)(2-6-7)

## Green Asia Builders

கட்டுமான மற்றும் ஆலோசனை பொறியியலாளர்கள்

440, A பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். கரணவாய் தெற்கு, கரவெட்டி.
(T.P:0779063025)

## கண்ணீர் அஞ்சலி



எமது வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும்
அரியரட்ணம் தாரங்கன்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் தாதாபிள்ளை அரியரட்ணம்
அவர்கள் 09.11.2011 அன்று இறைபதம்

அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

(சி/5711)(3,6,7)

வலயக்கல்விப் பணிப்பாளரும்,
அனைத்து அலுவலர்களும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தாமதம் கெடுதி தரும்; உடன் செயற்படுங்கள்!

மக்கள் ஆட்சியின் - ஜனநாயகத்தின் - அத்திபாரம் குடி மக்களுக்கு உரிய வாக்குரிமையே. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், பிரதேசங்களிலும் வாழும் மக்களின் வாக்குகளே ஆட்சி நடத்துவது யார் என்பதனைத் தீர்மானிக்கின்றன. அதேபோன்று தங் கள் உரிமைகளுக்காக, ஏனைய நலன்களுக்காக உழைக்கக் கூடியவர்களைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வதற்கும் - மக்கள் தீர்மானிக்கவும் - வகை செய்வதும் வாக்குகளே.

வாக்காளர் இடாப்புகள் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்படுகின்றன. கடந்துசென்ற வருடத்தில் ஏதோ வசதியீனத்தால், வசிப்பிடத்தை மாற்றியதால், தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதற்குத் தவறியவர்கள் அதனைச் சேர்த்துக் கொள்ள வாய்ப்புண்டு. அவ்வாறு செய்வதில் அக்கறை காட்டாதுவிடில் மீண்டும் வாக்குரிமையை இழக்க நேரிடும்.

இத்தகைய நிலை, தமிழ்ப் பிரதேசங்களில் உண்டாகக் கூடாது. ஆகையால், இந்த (2011) வருடத்துக்கான வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்வதில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள், தமிழ்பேசும் மக்கள் அனைவரும் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டுவது மிகவும் இன்றியமையாதது.

2011ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வு செய்யப்பட்டுத் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் (2010இல்) வாக்காளர் இடாப்பில் இருந்து பெயர் நீக்கப்பட்டவர்கள், இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்யாதவர்கள் அதற்கு இப்போது ஏற்பாடு செய்யலாம். அதன் பொருட்டுச் செய்யவேண்டியது எல்லாம் வாக்காளர் உரிமைக் கோரிக்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பிப்பதே ஆகும்.

2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்யத் தவறிய (18 வயதுக்கு மேற்பட்டவர்கள்) அனைவரும், பெயர் நீக்கப்பட்டவர்களும் 2011ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வின்போது பதிவு செய்ய வசதி உண்டு.

எதிர்வரும் முப்பதாம் திகதிக்கு முன்னர் உரிமைக் கோரிக்கைப் படிவத்தைத் தத்தமது பிரிவு கிராம சேவகர்களிடம் இருந்தோ, பிரதேச செயலகங்களில் இருந்தோ பெற்று விண்ணப்பிக்க வேண்டும். படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியாவிட்டால், அந்தந்த மாவட்ட செயலகங்களில் இயங்கும் தேர்தல் திணைக்களக் கிளைகளிலும் பெற்று விண்ணப்பிக்கலாம்.

நாட்டில் வாழ்பவர்களை விட, வெளிநாடுகளில் வதியும், தொழில்புரியும் தமிழ் மக்களும் தமக்கான வாக்குரிமையைப் பெற வசதி செய்யப்பட்டிருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட, விநியோகிக்கப்பட்ட படிவங்களில் இம்மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்துத் தமக்குரிய வாக்குரிமையைப் பேண முடியும்.

இம்மாதம் இரண்டாம் திகதி தொடக்கம் கிராம சேவகர்களின் அலுவலகங்கள், பிரதேச செயலகங்களில் வைக்கப்பட்ட வாக்காளர் பட்டியலைத் தவறாது சென்று பார்வையிடுவது மிக மிக அவசியம் என்பதனை அனைவரும் உய்த்து உணரவேண்டும். மீளாய்வின்போது உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதா என்பதனைக் கண்டறியுங்கள். உங்கள் பெயர் (ஏதோ ஒரு காரணத்துக்காக) நீக்கப்பட்டிருக்கலாம். புலம்பாதீர்கள், புறுபுறுக்காதீர்கள். ''உரிமைக் கோரிக்கை'' படிவத்தைப் பெற்று நிரப்பிக் கொடுங்கள். இதனை உங்களின் அன்றாடம் ஆற்றவேண்டிய அவசர பணிகளில் ஒன்றாக மனதால் உணர்ந்து செயற்படுங்கள். உங்களுக்குரிய ஜனநாயகச் சொத்து என்று மனதில் இருத்துங்கள். வீடுவாசல், இருப்பிடம், வாகனம், நிலபுலம் போன்று, அவற்றை விடவும் பிரதானமானது, முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது என்பதை மனதில் ஆழ இருத்துங்கள்.

தமிழ் மக்களுக்கு உரிய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும், உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கையையும் குறைத்து, தமிழ்ப் பிரதேசங்களின் பன்முக அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கத் தருணம் பார்த்து இருக்கின்றன பல சக்திகள்.

அதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தமது பொன்னான வாக்குரிமையை, பெறுமதிமிக்க வாக்குகளை இழந்துவிடக் கூடாது என்ற மனோதிடத்துடன் செயற்பட வேண்டிய வேளை இது. இதனைச் சகலரும் உளப்பூர்வமாக உய்த்துச் செயற்பட வேண்டும்.

உங்களுக்குத் தெரியுமா, 2010 ஆம் ஆண்டுக்கான யாழ்.தேர்தல் மாவட்டத்துக்குரிய வாக்காளர் இடாப்பில் இருந்து 3 இலட்சத்து 39 ஆயிரத்து 214 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்பது? இடம்பெயர்ந்தவர்கள், வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள், தத்தமது பெயர்களைப் பதிவு செய்வது தமக்குரிய தவிர்க்கக் கூடாத, கடமை என்று உணராது விட்டமை, கவலையீனம் என்பனவே இதற்குப் பிரதான காரணங்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. அந்தவகையில் மட்டும் மூன்று கிராம சேவகர்கள் பிரிவுகளைச் சேர்ந்த 5,000 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படவில்லை!

இத்தகைய காரணங்களும் மற்றும் சிலவும் விளைத்த, விதைத்த வினை யாழ்.தேர்தல் மாவட்டத்தில் மட்டும் தந்த பேரிடியான விளைவு, ஜனநாயகத்தின் முதன்மையான, உரிமையான வாக்குரிமையினை எவ்வளவு அந்தகாரத்துக்குள் தள்ளியுள்ளது என்பது உணர்வுள்ள ஒவ்வொருவரையும் உள்ளத்தால் உலுக்க வைத்துவிடும்!

2011ஆம் ஆண்டுக்கான வாக்காளர் மீளாய்வுக்குரிய BC படிவத்தின் அடிப்படையில் 41 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்கள் இடாப்பில் இருந்து நீக்கப்பட்டு விட்டது!!

இதனை உணர்ந்தாவது, வாக்காளராவதற்குத் தகுதியுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தமது பெயர்களைப் பதிவு செய்வதற்கு, இன்றைக்கு, நாளைக்கு, பின்னர், பிறகு என்று காலத்தைக் கடத்தாது, ஒவ்வொரு மணிநேரத்தையும் தவப்பொழுதாகக் கருதிச் செயற்பட வேண்டும்.

காலம் தாழ்த்தியது போதும் என்று நினைத்து வாக்காளர் ''உரிமைக் கோரிக்கைப் படிவத்தை'' உடனடியாகச் சம்பந்தப்பட்ட பகுதிக்குரிய கிராம சேவகரிடம் பெற்று விரைந்து பூர்த்தி செய்து ஆகக் குறைந்தது இரண்டு நாள்களில் ஒப்படையுங்கள்.

உங்களுக்குரிய ஜனநாயக உரிமையின் முதன்மையான பெறுமதியைத் தக்க வைப்பதில் தாமதம் காட்டினால் உங்களுக்கு மட்டுமன்றி எமது இனத்துக்கே பெரும் கெடுதி தேடிவரும். அதனைத் தவிர்க்க வேண்டும். அதில் தாமதித்தால் நட்டமும் கெடுதியும் எங்களுக்கே. மனங்கொள்ளுங்கள்! உடன் செயற்படுங்கள்!

# இரணைமடு குடிதண்ணீர் திட்டத்தின் வேலைகளைத் துரிதப்படுத்த அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.11

இரணைமடுவில் இருந்து யாழ். மாவட்டத்துக்கும் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் குடிதண்ணீர் வழங்கும் விடயம் உடன் துரிதப்படுத்தப்படவேண்டியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினரும், தேசிய நீர்வழங்கல் அமைச்சும் இந்த விடயம் தொடர்பாகக் கேட்டுள்ளனர். இரணைமடுவில் இருந்து யாழ். தீவகம் வரை நடைபெறவுள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் பிரதேச செயலர்களும் - உள்ளூராட்சிச் சபை செயலாளர்களும் துரிதமாக பங்களிப்புச் செய்ய வேண்டும். இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இரணைமடு குள அபிவிருத்தி மற்றும் குடிதண்ணீர் திட்டம் தொடர்பான ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர்மட்டக் குழு கூட்டம் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்தபோது:

இரணைமடு குள அபிவிருத்தி மற்றும் குடிதண்ணீர் விடயம் தொடர்பாக ஜனாதி பதி அக்கறையுடன் உள்ளார். ஜனாதிபதி செயலகம் மற்றும் தேசிய நீர் வழங்கள் அமைச்சு என்பனவும் இந்தத் திட்டத்தை 2015 ஜூன் மாதத்துக்கு முன்னர் முடிவுறுத்தவேண்டும் என்று கூறுகின்றனர். எனவே தற்போது யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்டப் பணிப்பாளருக்கு உள்ள பெரிய பிரச்சினையாக உள்ள மை தாங்கிகள் அமைப்பதற்கான காணித் தெரிவாகும்.

எனவே பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபை தலைவர், செயலாளர்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டு மென்று தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர்மட்ட முகாமைத்துவ அதிகாரி என். ஏ.பி. சால்காடோ தெரிவிக்கையில்:

யாழ். கிளிநொச்சி குடி தண்ணீர் அபிவிருத்தி திட்ட நகர்வில் இரண்டரை மாதங்கள் பின் தள்ளி நிற்கின்றோம். புதிய உட்புகுத்தல்கள் - நடைமுறைகளை உள்வாங்க வேண்டாம். இரணை மடு குள அபிவிருத்தித் திட்ட நகர்வுகள் குறித்த 164.04 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை உரிய காலத்தில் பயன்படுத்தி அதனை பயனுள்ள வகையில் மக்களுக்கு குடிதண்ணீர் திட்டம் கிடைக்க சகல திணைக்களத் தலைவர்களும் ஒருங்கிணைந்த ரீதியில் செயற்படவேண்டும் என்றார். (ம-302)

# 'இந்திய அண்டை நாட்டுக் கொள்கை' குறித்த விரிவுரை யாழ். பல்கலையில்

'இந்தியாவின் அண்டை நாட்டுக் கொள்கையும் இந்திய- சிறிலங்கா உறவுகளும்' என்ற தலைப்பில் இந்திய ராஜதந்திரியான சியாம் சரண் யாழ்.பல்கலைக்கழகத்தில் உரையொன்றை நிகழ்த்தவிருக்கிறார்.

இலங்கை இந்திய பவுண்டேஷனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இணைந்து இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன. தூதுவர் சியாம் சரண் இந்தியாவின் முன்னாள் வெளியுறவு செயலாளரும் வளரும் நாடுகளுக்கான ஆராய்ச்சி மற்றும் தகவல் மையத்தின் தலைவருமாவார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.2.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கும் நிகழ்வுக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமை வகிப்பார். வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார். (ப)

# சிவனின் பெருமை கூறும் யம சங்காரம்

ஞானக்கதிர்

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் தம்மையே முற்று முழுதாக நம்பிய மார்க்கண்டேயருக்கு அருள் செய்த திருவிளையாடல் நிகழ்வே யம சங்காரம்

மார்க்கண்டேயருக்கு ஆயுட்காலம் பதினாறு வருடங்களே. இதைப் பெற்றோர் மூலம் முன் கூட்டியே அறிந்து கொண்ட மார்க்கண்டேயர் சிவபெருமானிடம் வந்து தம்மைக் காத்தருள் புரியுமாறு வேண்டிக் கொண்டாராம்.

மார்க்கண்டேயருடைய கணக்கு முடிந்து விட்டதனால் அவரது உயிர் கவர வந்தான் யமதர்மராஜன். அவன் பிடியிலிருந்து தப்புவதற்காக மார்க்கண்டேயர் சிவபெருமான் முன்னிலையில் சிவபூசை செய்து வழிபாடியற்றிக் கொண்டிருந்தார். சிவலிங்கத்தை இறுகப் பற்றியபடி '' எல்லாம் சிவன் செயல்'' என்று முற்று முழுதாகத் தம்மை இறைவனிடமே ஒப்புவித்திருந்த மார்க்கண்டேயரை யமனால் நெருங்க முடியவில்லை.

இன்னுயிர் கவர்வதற்காக எருமையிலேறிப் பெருமையாக வந்த யமன் மார்க்கண்டேயரின் உயிரை எப்படியாவது கவர்ந்து விட வேண்டும் என்ற நோக்கில் பாசக் கயிற்றை வீசி எறிந்தான். அந்தக் கயிறு மார்க்கண்டேயர் சிவலிங்கப் பெருமானை இறுகப் பற்றி அணைத்திருந்த நிலையில் சிவலிங்கத்தையும் சேர்த்தே விழுந்தது.

அடுத்த கணம் என்ன நிகழ்ந்தது?

சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்ட சிவபெருமான் காலனுக்கே காலனாக வந்து விட்டார். உடனே சிவபெருமான் தமது காலினாலே யமனை எட்டி உதைத்துத் தள்ளினார். யமன் தடாலென்று கீழே சாய்ந்தான்.யமதர்மராஜனுக்கே யமனாக வந்தார் சிவபெருமான்.யமன் தன் தொழிலைச் செய்யாது விட்டதனால் உலகில் ஜீவராசிகள் இறப்பின்றி வாழ்ந்திருந்தன. அதனால் பூமாதேவி பூபாரந் தாங்க முடியாமல் அவதியுற்றாள். தன்னுடைய குறையைப் பூமாதேவி பிரம்மாவிடம் முறையிட்டாள் '' ஓ பிரம்மதேவரே! நீர் படைப்புத் தொழிலைச் செய்து கொண்டிருப்பதால் பூமியில் உயிர்கள் தோன்றிப் பிறந்து கொண்டேயிருக்கின்றன. யமன் உயிர் எடுக்காது விட்டதனால் இறப்பேயின்றி உயிர்கள் வாழ்வதால் எனக்குப் பூபாரந் தாங்க முடியவில்லை. நீங்கள்தான் இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும்'' என்று அலறி ஓலமிட்டு அழுதாள் பூமாதேவி.

விஷயத்தைப் புரிந்து கொண்டவரான பிரம்மதேவர் சிவபெருமானிடம் சென்று ''யமதர்மராஜனை நீங்கள் சங்காரஞ் செய்துவிட்டபடியால் அவன் தன் வேலையைச் செய்யாமல் விட்டு விட்டான் அதனால் பூமாதேவி பாரந்தாங்க முடியாமல் அவதிப் படுகின்றாள்'' என்று கூறி வைத்தார்.

உடனே சிவபெருமான் யமதர்மராஜனுக்கு மீண்டும் உயிர்ப்பிச்சை கொடுத்து அவனை உயிர்ப்பித்து எழச் செய்தார். யமனும் தான் செய்த பிழையை பெறுத்தருளி மன்னிக்குமாறு கேட்டு வணங்கி நின்றான்.

இந்த வரலாற்று நிகழ்வே இன்றைய யமசங்காரம்.

ஆகவே இந்த யமன் மீண்டும் உயிர்பெற்று எழுந்தபோது '' இனிமேல் சிவன் அடியார்களை நீ நெருங்கக் கூடாது என்று கட்டளையிடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அந்த வகையில் சிவன் அடியார்கள் யம பயமின்றி உலகில் வாழலாம் என்பது நம் முன்னோர் கருத்து. எனவே இன்று சிவன் ஆலயங்களில் நடைபெறுகின்ற யமசங்காரத் திருவிழாவை எல்லோரும் கண்டு தரிசித்து உலகில் உண்மைச் சைவர்களாக வாழத் தலைப்படுவார்களாக.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 நவம்பர் 2011 வெள்ளிக்கிழமை

# போதிய ஆளணி வளங்கள் இன்மையும் இல்லக் குழந்தைகள் இறக்கக் காரணம்

## கைதடி சிறுவர் இல்லத்தைப் பார்வையிட்ட மாகாண உயர் மட்டக்குழு தெரிவிப்பு

தென்மராட்சி, நவ.11
கைதடி சிறுவர் இல்லத்தில் குழந்தைகள் பராமரிக்கப் போதிய ஆளணி பற்றாக்குறை நிலவுவதும் குழந்தைகளின் மரணத்துக்குக் காரணமாக அமையலாம். சிறுவர் இல்லத்துக்குக் குழந்தைகள் பராமரிக்க வெற்றிடமாக உள்ள ஆளணிகளை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வாறு சிறுவர் இல்லத்தைப் பார்வையிட்ட மாகாண உயர்மட்டக் குழு தெரிவித்தது. இந்தக் குழு கடந்த செவ்வாய்க்கிழமை இல்லத்தைப் பார்வையிட்ட போது இதனைக் கூறியுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி.ரமேஸ், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி சி.சிவகரன், யாழ். போதனா வைத்தியசாலை சிறுவர் பிரிவு வைத்திய நிபுணர், சட்ட வைத்திய அதிகாரி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் கொண்ட குழு சிறுவர் இல்லத்தைப் பார்வையிட்ட பின்னர் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.



சிறுவர் இல்லத்தில் உள்ள குழந்தைகளில் 19 குழந்தைகள் ஆறு மாதத்துக்கு உட்பட்டதெனவும் அங்குள்ள அனைத்துக் குழந்தைகளையும் பராமரிக்க இருவரே நிரந்தரப் பணியாளர்களாகப் பணியாற்றுகின்றனர் எனவும் கூறப்பட்டது.

அனைத்துக் குழந்தைகளையும் பராமரிக்க ஆளணி போதாதெனவும் தேவையான ஆளணியினரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ம- 207)

## சுவிஸ் நிதியுதவியில் தென்மராட்சியில் வீடுகள்

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட தென்மராட்சி கிழக்கு கரம்பகம் பகுதி மக்களுக்குச் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினர் வீடுகள் அமைத்துக் கொடுக்கவுள்ளனர். வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் முதல் கட்டப் பட்டியல் பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

தெரிவு தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க விரும்புவோர் ஒரு வாரத்தினுள் அறிவிக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம- 207)

## தென்மராட்சியில் பாத்தீனியம் செடிகள்

தென்மராட்சி, நவ.11
வலிகாமம் பகுதியில் அழிக்க முடியாத நிலையில் காணப்படும் விஷச் செடியான பாதினியம் தென்மராட்சிப் பகுதிக்கும் பரவியுள்ளது.

கைதடி சந்திப் பகுதியில் பெருமளவு பாதீனியச் செடிகள் வளர்ந்துள்ளன.

இந்தச் செடி பூப்பதற்கு முன்னர் அழிப்பதால் இவை மேலும் பரவாமல் தடுக்க முடியும் என்று கூறப்படுகின்றது.

பிரதேச சபையினரும் சுகாதார திணைக்களத்தினரும் இணைந்து இந்தப் பகுதி பொது மக்களின் ஒத்துழைப்புடன் பாதீனியச் செடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என்று மக்கள் கேட்டுள்ளனர். (ம- 207)

## பிட்டுக்குள் நெறிந்தது புழு

யாழ்ப்பாணம், நவ.11
யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் வாங்கிய பிட்டைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது அதனுள் இறந்த புழு அல்லது புழுக்குடம்பி என இனங்காணப்படும் பூச்சியினம் ஒன்று இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து குறித்த ஹோட்டல் உரிமையாளரை யாழ். மாநகர சபை பொதுச் சுகாதாரப் பிரிவினர் யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

விசாரணை மேற்கொண்ட நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொது சுகாதார பரிசோதகர்கள், இது பற்றிய பரிசோதனையில் ஈடுபட்டனர்.

இந்தக் ஹோட்டல் உரிமையாளருக்கு ஏற்கனவே இது போன்றதொரு வழக்கில் அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம- 4)

## வடமராட்சி கிழக்கில் 80 பேருக்கு கடல்தொழில் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், நவ.11
மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 80 கடல் தொழிலாளருக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் திருலிங்கநாதன் தலைமையில் முற்பகல் 10.30 மணிக்கு ஆழியவளை பொதுமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக மீள்குடியேற்ற பிரதிய மைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆழியவளைப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 40 பேருக்கும் வெற்றிலைக்கேணிப் பகுதியைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கும் இவை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம- 319)

## பரு. நவீன சந்தைப் பணி ஜனவரியில் பூர்த்தி

பருத்தித்துறை நவீன சந்தையின் இரண்டாம் கட்ட கட்டடப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் பூர்த்தியடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தையின் தளக் கட்டடம் சுமார் 100 மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டு அதில் கடைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக மாடிக் கட்டட வேலைகள் 'என்றிப்' நிதி உதவியுடன் சுமார் 40 மில்லியன் ரூபா செலவில் மிக வேகமாக இடம் பெற்று வருகின்றன.

இந்தக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததும் எஞ்சியுள்ள கடைகள் வர்த்தகர்களுக்கு வழங்கப்படும் என்று கூறப்பட்டது. அத்துடன் சந்தையும் பாவனைக்குத் திறந்து வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம- 236)

# குற்றச் செய்திகள்

தென்மராட்சி, நவ.11
சாவகச்சேரி கல்வயல் பகுதியில் பெண்ணொருவரைத் தாக்கி அவர் அணிந் திருந்த 63 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெறுமதியான தங்கச் சங் கிலியை களவாட முயன்ற இரு பெண்கள் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த மூவரையும் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்த போது எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சமர்ப்பித்த பிணை மனு தொடர்பாக பொலிஸார் ஆட்சேபனை தெரிவிக்காததால் மூவரையும் தலா ஒருலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல நீதிவான் மா.கணேசராஜா அனுமதித்தார். (ம- 207)

* * *

தென்மராட்சி, நவ.11
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட தென்னிலங்கை வாசிகள் மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நகர்ப் பகுதியில் குழப்பம் விளைவித்த பலாங்கொட, ஹற்றன், வலப்பன ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நபர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் தனித் தனியாக விசாரிக்கப்பட்டு பலாங்கொட வாசிக்கு 4 ஆயிரம் ரூபாவும் ஏனைய இருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகை செலுத்தத் தவறின் முறையே 2 மாதங்கள், தலா ஒரு மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார்.(ம- 207)

* * *

வாகன ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாரால் நீர்வேலி வாசிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்தார். (ம- 207)

* * *

யாழ்ப்பாணம், நவ.11
யாழ்.போதனா வைத்தியசாலையில் கஞ்சா பைக்கற்றுக்களை விற்பனை செய்து வந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த பெண் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். யாழ். நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் விடுதி ஒன்றில் இவ்வாறு விற்பனை செய்த போது யாழ். பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

அவரை நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் பொலிஸார் ஆஜர் படுத்தினர். நீதிவான் அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம- 4)

* * *

யாழ்ப்பாணம், நவ.11
டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் குப்பை கூழங்களைக் கொட்டி வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது ஐவர் கைது செய்யப்பட்டனர்.

கரணவாய் கொற்றாவத்தை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரும் அத்தியடி கம்பர்மலை பகுதியைச் சேர்ந்த இருவரும், சமரபாகு வல்வெட்டித்துறை சமரபாகு பகுதியைச் சேர்ந்த ஒருவரும் வல்வெட்டித்துறை நாச்சிமார் கோயிலடி பகுதியைச் சேர்ந்த ஒருவரும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர்.

இவர்கள் 5 பேரையும் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

**இந்த வழக்கை விசாரணைக்கு** எடுத்துக் கொண்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இவர்கள் ஐவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ம- 319)

* * *

யாழ்ப்பாணம், நவ.11
எச்சரிக்கையின்றி ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வல்வெட்டித்துறை ஆதி கோயிலடியைச் சேர்ந்த ஒருவரையும் இலகடி, உடுப்பிட்டியைச் சேர்ந்த மற்றொரு வரையும் வல்வெட்டித் துறைப் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் இருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ம- 319)

* * *

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் பாரதிபுரம், கம்பர்மலையைச் சேர்ந்த ஒருவர் வல்வெட்டித் துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவரது வழக்கை விசாரணைக்கு எடுத்த பருத்தித்துறை மாவட்ட நீதிவான் 3 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.(ம- 319)

* * *

தென்மராட்சி, நவ.11
கசிப்பு வைத்திருந்த கொடிகாமம், எருவன் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொதுமக்கள் கொடுத்த ரகசியத் தகவலையடுத்து ஸ்தலத்தைச் சுற்றி வளைத்த பொலிஸார் தங்கியிருந்து 15 ஆயிரம் மில்லியன் லீற்றர் கசிப்பைக் கைப்பற்றியதுடன் கசிப்பு வைத்திருந்த நபரையும் கைது செய்தனர்.

நீதிமன்றில் முன்னிலைப் படுத்திய போது வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா இந்த அபராதத்தை விதித்தார். (ம- 207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வங்கியின் நிதியிலான வேலைகள் ஒரு மாத காலத்துள் பூர்த்தியாக வேண்டும்

## இல்லையேல் இரண்டாம் கட்டக்கோரிக்கை ஸ்தம்பிதமாகும் நிலை ஏற்படும்

யாழ்ப்பாணம், நவ. 11

உலக வங்கியின் நிதியில் தற்போது யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் ஒரு மாத காலத்தினுள் முடிவடையாது விட்டால் இரண்டாம் கட்டக் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாமல் போய்விடும்.

இவ்வாறு யாழ். மாவட்டத்துக்கு நேற்று விஜயம் செய்த உலக வங்கிக் குழுவினர் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றகலந்துரையாடலின்போது தெரிவித்தனர்.

உலகவங்கியால் இலங்கைக்கு வழங்கிய கடன்களில் ஒரு பகுதி வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வடக்கின் 5 மாவட்டங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வேலைத் திட்டங்களை நேரடியாகக் கள ஆய்வு செய்யும் பொருட்டு கடந்த 7 ஆம் திகதி முதல் உலக வங்கிக் குழுவினர் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் யாழ். மாவட்டத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்தனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே உலக வங்கிக் குழுவினரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:

உலக வங்கியால் 8 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. அதில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஆயிரத்து 569 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 376 மில்லியன் ரூபா நிதிக்கே வேலைத்திட்டங்கள் முடிவடைந்துள்ளன. எனவே வேலைத் திட்ட முன்னேற்றம் போதாது என்று உலக வங்கிக் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது. இதற்கான காரணம் என்ன என்பது தொடர்பில் கேட்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்கள் அதிலும் குறிப்பாக மாநகரசபையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களுக்கான நிதிகள் உரிய வகையில் ஒப்பந்தகாரர்களைச் சென்றடையவில்லை. இவை உள்ளூராட்சி மன்றங்களின் கீழ்வரும் பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகர சபைகள் என்பவற்றாலேயே இழுத்தடிக்கப்படுகின்றன.

ஒப்பந்தகாரரால் பணச்சிட்டை சமர்ப்பிக்கப்பட்டு 3 வார காலத்தினுள் அவருக்கான பணத்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் வீதிகள் திருத்தி முடிக்கப்பட்ட பின்னர் அந்த வீதிகளுக்கு ஊடாக கனரக வாகனங்கள் செல்வதால் அவை சேதமடைகின்றன. இதனால் அவற்றை மீண்டும் புனரமைக்க வேண்டி ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களில் 80 வீதமானவை மாகாணசபையின் கீழான உள்ளூராட்சி திணைக்களத்தினூடே மேற்கொள்ளப்படுகின்றன.

இவர்களிடம் வடக்கின் துரித மீட்சித்திட்டம் தொடர்பான கேள்விகளை மாவட்ட செலயகத்தால் கேட்கின்றபோது அவர்கள், தாம் மாவட்ட நிர்வாகத்துக்குகீழ் வேலை செய்யவில்லை. வடமாகாண சபையின் கீழேயே வேலை செய்கின்றோம். எனவே நீங்கள் எங்களைக் கேள்வி கேட்க முடியாது என்கின்றனர் என்று தாமதத்துக்கான காரணம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

அதனடிப்படையில் யாழ். மாவட்ட அரச அதிபர், இன்னும் ஒரு மாத காலத்தினுள் மேற்கொள்ளப்படுகின்ற வேலையில் முன்னேற்றம் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒரு மாத காலத்தினுள் வேலைகளை முடிக்காவிட்டால் யாழ். மாவட்ட அரச அதிபரால் சமர்ப்பிக்கப்பட்ட 10 ஆயிரத்து 520 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது போகலாம் என்று உலக வங்கி சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கின் துரித மீட்சித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், யாழ். மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் சி.குகதாஸ், உலக வங்கியைச் சேர்ந்த சதீஸ், மனோகரன், நிஹால் பெர்னாண்டோ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டக் குழுவினரும் பங்குபற்றினர். இந்தக் குழுவினர் நேற்று முற்பகல் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-15-86)



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உலக வங்கிக்குழு

# போக்குவரத்து பிரச்சினைகளை முறையிடலாம்

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களின் போக்குவரத்து தொடர்பில் யாராவது பாதிக்கப்பட்டால் அது தொடர்பாக முறைப்பாடு செய்யும் பட்சத்தில் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மருதங்கேணி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பருத்தித்துறையிலிருந்து கேவில்வரை பயணத்தைமேற்கொண்ட பயணி ஒருவர் கட்டைக்காடு பகுதியில் இறக்கிவிடப்பட்டதாகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிக்கு பணித்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகுறித்து யாழ். சாலை முகாமையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயணிகள் யாராவது ஏதாவது சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டால் அது தொடர்பில் முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும்.

அந்த முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மருதங்கேணி செல்லும் போக்குவரத்துச் சபையின் பஸ்களை கேவில் வரைசேவையில் ஈடுபடுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது.- என்றார். (ம-319)

# நல்லூர் பிரதேசத்தில் அபிவிருத்தி 7 திட்டங்களுக்கு ரூ.4.5 லட்சம்

யாழ்ப்பாணம், நவ.11

2011 ஆம் ஆண்டுக்கான பன்முகப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்திக்கென ஏழு திட்டங்களுக்காக 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாவலடி வைரவர் சுவாமி ஆலய புனரமைப்புக்கென நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி 50 ஆயிரம் ரூபாவும், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் அரியாலை, ஞானவைரவர் கோயில் அபிவிருத்திக்கு ஒரு லட்சம் ரூபாவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வளர்மதி முன்னேற்றக் கழக தளபாடங்கள் கொள்வனவுக்கு 75 ஆயிரம் ரூபாவும், கோண்டாவில் மத்தி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு கணினி கொள்வனவுக்கு 75 ஆயிரம்ரூபாவும் ஒதுக்கியுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மணியம்தோட்டம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் அரியாலை கிழக்குக் கிராம அபிவிருத்திச் சங்க தளபாடம் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் அரியாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க தளபாடம் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டின் நல்லூர் கொண்டலடி, வைரவர் கோயில் புனரமைப்பு வேலைக்கென 50 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இதேவேளை, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சங்கிலியன் மன்றக் கட்டட புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொண்டலடி ஞானவைரவர் சனசமூக முன்பள்ளி நூலகப் புனரமைப் புக்கு 50 ஆயிரம் ரூபாவும், வள்ளுவர் சனசமூக நிலைய கட்டட புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கியுள்ளனர்.

(ம-7)



வடக்கு மாகாண சபையில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் கையளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருமான இ.இளங்கோவன் பட்டதாரி ஒருவருக்கு நியமனக் கடிதத்தை கையளிக்கிறார். (ம-11)

### வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில்

# படையினர் வசமுள்ள வீடுகளை உரியவருக்கு வழங்க நடவடிக்கை

வடமராட்சி, நவ.11

பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவினால் படையினர் வசமுள்ள 115 வீடுகளை உரியவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பருத்தித்துறை கிழக்கு, வல்வெட்டித்துறை, கெருடாவில், அல்வாய் வடக்கு போன்ற இடங்களில் உள்ள 115 வீடுகள் படையினர் வசமுள்ளன.

அவற்றைத் தமக்கு மீட்டுத் தருமாறு வீட்டு உரிமையாளர்கள் 115 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

அவற்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வைத்து அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.

இது குறித்து கட்டளைத் தளபதியுடன் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி அளித்தார். (ம-236)

# இந்திய அரசின் நிதியில் வீடமைப்பு தெல்லிப்பழையில் வேலைகள் கிடப்பில்

இந்திய அரசால் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட வேண்டிய 30 வீடுகளும் அத்திபாரம் இடப்பட்ட நிலையில் கடந்த மூன்று மாத காலமாக எவ்வித முன்னேற்றமும் இன்றி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசால் இலங்கையில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணி கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் முதற்கட்டமாக 150 வீடுகள் அமைக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

யாழ். பிரதேச செயலர் பிரிவில் 40 வீடுகளும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 30 வீடுகளும், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் 30 வீடுகளுமாக யாழ். மாவட்டத்தில் 150 வீடுகள் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் அளவெட்டி வடக்கு (ஜே/215), அளவெட்டி மத்தி (ஜே/216), அளவெட்டி கிழக்கு (ஜே/217) ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலுமே இந்த வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த பகுதிகளில் வீடுகளுக்கான அத்திபாரங்கள் மட்டும் கட்டப்பட்ட நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் வேலைகள் ஒப்பந்தகாரர்களால் நிறுத்தப்பட்டிருந்தன. அதன் பின்னர் மீண்டும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை.

ஏனைய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் 150 வீடுகளும் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் 925 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்

கொழும்பு, நவ.11

உலகில் 925 மில்லியன்கள் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். அதாவது ஏழுபேரில் ஒருவர் பட்டினியால் வாடுகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக சனத்தொகை ஏழு பில்லியன்களை நிறைவு செய்துள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சனத்தொகையில் 32.5 வீதமானோர் போஷாக்குக் குறைவால் அவலமுறுவதோடு இந்த நாடுகளில் பிறக்கும் குழந்தைகள் ஆறில் ஒரு குழந்தை நிறை குறைந்தே பிறப்பதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

வறுமை நிலையைக் கணக்கிடும் தற்காலத்தின் அட்டவணை 1.25 அமெரிக்க டொலர்களை அன்றாட வருவாயாகக் கணித்துள்ளது. இது இலங்கை ரூபாவில் ரூபா 137 ஆகும். இதற்கமைய 20 ஆயிரம் ரூபா மாதாந்த சம்பளத்தைப் பெறும் ஆறுபேர் கொண்ட குடும்பம் ஒன்றின் நாளாந்தச் சம்பளம் 111 ருபாவாகும்.

சர்வதேச அங்கீகரிப்புக்கு அமைய, வறுமையை விரட்ட வேண்டுமானால் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றில் மாதாந்தம் குறைந்த பட்ச சம்பளம் 12 ஆயிரத்து 330 ரூபாவாக இருக்கவேண்டும்.

இந்த நிலையில் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் புள்ளி விவரங்களுக்கு அமைய, உலகில் உற்பத்தி செய்யப்படும் உணவுகளின் அளவுப் பிரமாணம் 1,720 கிலோ கலோரிகளாகும்.

ஆனாலும், வறுமைப்பட்டோருக்கு இந்த உணவு களைப் பெற்றுக் கொள்வதற்கான வளம் இல்லை எனவும் தெரிய வந்துள்ளது.

(ம-22)

# நல்லூர் சிவன்கோயிலில் யமசம்ஹார உற்சவம்



இறைவனின் அட்ட வீரட்டானங்களில் ஒன்றான யமசம்ஹார நிகழ்வு நல்லூர் சிவன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகித் தொடர்ந்து 3.30 மணிக்கு மார்க்கண்டேய பூசை, மிருத் துஞ்சய பூசை, பிரார்த்தனை என்பன இடம்பெற்று இறுதியாக யமசம்ஹார நிகழ்வு நடைபெறும்.

இதேவேளை இறைவனின் எட்டு வீரச்செயல்களும்(அட்ட வீரட்டானங்கள்) நல்லூர் சிவன் கோயிலில் 19ஆம் நூற்றாண்டில் திருவிழாவாக நடைபெற்றன.

அவற்றில் ஒன்றான யமசம்ஹார திருவிழா இன்றுவரையும் இந்த ஆலயத்தில் இடம்பெறுவது சிறப்புக்குரியது. (வ-319)

# பேஸ் புக்கில் இணைந்தது சி.பி.ஐ.

சமூக வலைத்தளமான பேஸ் புக்கில் இந்தியப் புலனாய்வுத் துறையும் இணைந்துள்ளது.

போபால்பிரிவுபுலனாய்வுத்துறையால் சோதனைஅடிப்படையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்குக் கிடைக்கும்வரவேற்பைப்பொறுத்து ஏனைய பிரிவுகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன. மக்கள் தாங்கள் நினைக்கும் எந்த விடயத்தையும் இதன்மூலம் சி.பி.ஐயிடம்பகிர்ந்து கொள்ளலாம். இதன் மூலம் மக்களின் மன நிலையை நாங்கள் தெரிந்து கொள்வோம் என சி.பி.ஐ. உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போபாலைச் சேர்ந்த ஆர்.டி.ஐ. ஆர்வலர் ஷீலா மசூத் கொலை செய்யப்பட்ட விசாரணையில் உதவுமாறு பேஸ்புக்கில் கோரிக்கை விடுக்க உள்ளோம் என மற்றொரு அதிகாரி தெரிவித்தார்.

(வ-சி)

# உலர் உணவுப் பொருள்கள் விநியோகம்

தென்மராட்சி, நவ.11

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாள் தெற்கு பிரிவில் அண்மையில் மீளக்குடியமர்ந்த நலிவுற்ற குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை இல.1 இல் இன்று வெள்ளிக்கிழமை வழங்கப்படும் என்று ப.நோ.கூ.ச. எழுதுமட்டுவாள் கிளைத் தலைவர் இ.தெய்வேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ-207)

# புதுமுக மாணவருக்கு வழிகாட்டல்

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட, விவசாய பீட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இந்த வாரம் முழுவதும் இந்த நிகழ்வு நடைபெறும்.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைப்பிரிவில் 450 பேரும் விவசாய பீடத்தில் 74 பேரும் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கலைப்பீடத்தின் கீழ் உள்ளடங்கும் கலைத்துறை, சட்டத்துறை மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு கைலாசபதி கலையரங்கிலும் விவசாய பீடத்துக்கான வழிகாட்டல் நிகழ்வு விவசாய பீட மண்டபத்திலும் நடைபெறுகின்றன.

இந்தப் பீடங்களுக்கான விரிவுரைகள் கடந்த மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாணவர் பகிஷ்கரிப்பினால் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-4)

# பொலிஸாரின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், நவ 11

வல்வெட்டித்துறை பொலிஸாரின் நடமாடும்சேவை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தேசிய அடையாள அட்டை தவறவிட்டமை, காணிப்பிரச்சினை, கடவுச்சீட்டு தவறவிட்டமை தொடர்பான முறைப்பாடுகளை பொது மக்கள் தெரிவிக்க முடியும் என்று வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-319)

# பஸ்சேவை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம், நவ.11

காரைநகரில் இருந்து இரவு 9 மணிக்குப் புறப்படும் புத்தளம் ஊடான கொழும்பு பஸ் சேவை நேற்று முதல் பிற்பகல் 5.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து சேவையை ஆரம்பித்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (வ)

# நடமாடும் சேவை பிற்போடல்

யாழ்ப்பாணம், நவ.11

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற் பாட்டில் இன்றும் நாளையும் நடை பெறவிருந்த நடமாடும் சேவை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட் டுள்ளது. மேற்படி சேவை இடம்பெறும் மறுதிகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று நம்பிக்கை நிதியத்தின் யாழ். பிராந்திய அலுவலகப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (வ)

# வழக்கு விசாரணை திகதி மாற்றம்

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 7 ஆம் திகதி நடைபெறவிருந்த வழக்குகள் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறும் என்று நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 7 ஏழாம் திகதி பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டதையடுத்து அன்றைய தினம் நடைபெறவிருந்த வழக்குகளே எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-207)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எங்கள் கனவுதனை
நிறைவேற்றி 07.11.2011
அன்று பண்டாரநாயக்க
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
HNDA பட்டம்
பெற்ற எங்கள் செல்வம்
யேசுதாசன் அனற்றொமானி
அவர்களை அன்புடன் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
— குடும்பத்தினர்.
பிளாக் வீதி,
சங்கானை.
(#/5700) (2-6-7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது தேவஸ்தான தலைவர்
காசிப்பிள்ளை கஜன்
அவர்கள் 07.11.2011 அன்று கொழும்பு
BMICH இல் HNDA பட்டம்
பெற்றமையையிட்டு பாராட்டி
வாழ்த்துவதுடன் இவர் மேன்மேலும்
பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ
மனம் மகிழ வாழ்த்துகின்றோம்.
துர்க்காதேவி தேவஸ்தானம் - ஏழாலை
(சீ-2857)(:,6,7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



07.11.2011 திங்கட்கிழமை கொழும்பு
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச
மாநாட்டு மண்டபத்தில் 8 ஆவது பட்டமளிப்பு
விழாவில் உயர்தேசிய கணக்கியல்
டிப்ளோமா
HNDA பட்டம் பெற்ற
செல்வராசா செபிந்தன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்
மேலும் பல சிறப்புக்களைப் பெற்று
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்:
த.பாலசிங்கம் (மாமா) குடும்பத்தினர்
ஜனசக்தி வீதி, சிறுப்பிட்டி மேற்கு,நீர்வேலி.
(10278)(3,6,7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த
சர்வதேச மண்டபத்தில் 07.11.2011 அன்று
உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா
HNDA பட்டம்பெற்ற
செல்வன்
கஜேந்திரன்
உதயகுமார்
அவர்களை மேலும்
பல பட்டங்கள் பெற்று உயர்வு
நிலையை அடையப்பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்
குடும்பத்தினர்.
(10310)(3,6,7)

சிகரம் தொட்டாய் ஒளி வீசு



சின்னஞ்சிறு மழலைகளின் சீரிய நல் கல்விமுதல்
தன்னிலையில் உயர்வான ஆசிரியர் வாண்மையதும்
இன்முகமாய் ஊட்டியேதான் நேசத்தார் மனம்நிறைந்தே
இன்றுமொரு சிகரந்தனை எட்டிவிட்டாய் போற்றியின்றி,
அருமைப் பணிதனை ஆருமே மனமாய் ஆற்ற
உரிமைகளைக்காண, இருளகற்று ஒளிவீசி.
இன்னுமெலாம் பெற்றுமே இறைஅருளால் வாழ்க வென்று
அன்பாலே வாழ்த்துகின்றோம் நீடுழி வாழி! வாழி!!

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக
ஏகமனதாகத் தெரிவாகியுள்ள எமது நண்பனும் கோப்பாய் ஆசிரியகலாசாலை
விரிவுரையாளருமாகிய
திரு.சரா.புவனேஸ்வரன்
அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரிய நண்பர்கள்.
(10309)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னத்தைச்...

## ...சொல்ல?!

### தம்பி நீ வாசி! புத்தகங்களை நிறைய வாசி!

கடந்த வியாழக்கிழமை 3ஆம் திகதி நம் மாணவ சமூகம் எதோ வெறும் புத்தகப்பூச்சிகளாகி, குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓடுபவராகி, வெளி உலகின் தொடர்பையும் நம் தமிழர் தம் வரலாற்றையும் அறியாத மந்த புத்திகொண்டு வாழும் மாணவ சமூகமாகிவிட்டது என்பதை எண்ணிப்பார்த்தால் வேதனை தான் மேலிடுகின்றது. ஏன் இந்தச் "சாபக்கேடு" எம் மாணவ சமூகத்தைக் கவ்விக்கொண்டது-என்று எண்ணிப் பார்த்து தக்க பரிகாரத்தைக் கண்டறிய வேண்டிய, கல்விமான்கள் ஏன் இதைக் கண்டுகொள்ளவில்லை என்பதுதான் வியப்பாக இருக்கின்றது- புலமைப்பரிசில் பாராட்டுக்களை இனி ஆவது நிறுத்துவாராக-

காலை எழுந்ததும் ஒரு சின்ன 'ரியூசன்' பகல் முழுவதும் பாடசாலை. மாலை வீடு வந்ததும் ரியூசன் கொட்டில். பின்னர் ஆறு மணிக்கு வீடுவந்ததும் மீண்டும் படிப்பு. பின்னர் ஒன்பதரைக்குப் படுக்கை. அனேகமாக இதுதான் இன்றைய மாணவ சமூகத்தின் நாளாந்த நேரசூசி.

தமிழ் நாளேடுகள், ஆங்கிலத் தினசரிகள் அவற்றில் காணப்படும் ஆசிரிய தலையங்கங்கள், வார ஆங்கில, தமிழ் வெளியீடுகள், வானொலிச் செய்திகள், பி.பி.ஸி செய்திகள் இவை பற்றி எண்ணிப்பார்க்கவே இந்த மாணவ சமூகத்துக்கு நேரம் ஏது? மூச்செல்லாம், பேச்செல்லாம் ரியூசன் தானே! யாழ்ப்பாணத்தில் உயர்தரம் வரை கற்ற ஒரு மாணவன், அமரரான செனற்றர் நடேசனிடம், தன்னை இங்கிலாந்திற்கு அனுப்பிவைக்க வேண்டினான். அவனுடன் பிரசண்டனும் கூடவே சென்றிருந்தார்.

அந்த மாணவனைப்பார்த்து, நடேசன் கியு.ஸி. தம்பி, லண்டன் பிரதமர் யார் என்று கேட்டார். அவனுக்குத் தெரியவில்லை. இந்திய ஜனாதிபதி பெயரையாவது சொல்லு என்றார். அவன் கிருஷ்ணமேனன் என்றான். ஐ.நா மகாசபை எங்கே உள்ளது என்பது அடுத்த கேள்வி. அவன் லண்டனில் என்றான். நீ கடைசியாக வாசித்த "பேப்பர்" என்ன என்றார்.

அவன் பேப்பரே படித்ததில்லையே! இவற்றைக் கேட்ட நடேசன், நீண்ட பெரு மூச்சைவிட்டு, எது உனது பாடசாலை என்றார். அவன் பிரபலமான பாடசாலைப் பெயரைச் சொன்னான் அங்குமா? கல்வி நிலை இப்படியாச்சு என்றார் நடேசன் கியு. ஸி.

தம்பி இந்த அறிவோடு லண்டனில் என்ன செய்யப் போகிறாய்? பிரேதம் புதைக்கும் கிடங்கு வெட்டவும் ஒரு தராதரம் வேண்டுமே என்றார். உனது தந்தை கல்லூரியில் எனது சக மாணவன். ஆங்கிலப் புலமையால் பெரும் அரச பதவி வகித்தவர். அவரிடம் நான் கற்ற பாடங்களோ பற்பல. உன்னை நான் கைவிடப் போவதில்லை என்றதும் அவன் முகத்தில் புன்சிரிப்பு. அடுத்து செனற்றர் என்ன சொன்னார் தெரியுமா?

தம்பி, "இந்தப் புத்தக அலுமாரியைப் பார். இதில் ஐம்பது அருமையான சிறு நூல்கள் ஆங்கிலத்தில் உள்ளன. எனது மகன் 17 வயது முடியமுன், இதில் எந்தப் புத்தகத்தையும் படிக்கத் தவறியதில்லை. இன்று அவன் பெரிய அப்புக்காத்து என்று நினைவூட்டினார். கேட்டுக் கொண்டிருந்த தொழில்சார் கல்லூரி மாணவனான எனக்கு சலம் சலமாக வேர்த்தது. அடுத்து என் பக்கமும் கேள்விகள் வருமோ என்பது எனது அச்சம்".

தம்பி, போனதெல்லாம் போகட்டும். இப்போது இந்த ஆண்டு 1962, இது புரட்டாதி மாதம்; தைமாதம் உன்னை தக்கதொரு தரமான மாணவனாக ஆக்கி உன்னை மாசிமாதம் லண்டனுக்கு அனுப்பி வைப்பேன் என்றார்.

இனி நான் எழுதுவதை சற்றே கவனித்து வாசியுங்கள்:

தம்பி இனித் தினமும், நீ மாலை 5.30 மணிக்கு இங்கு வந்து 8 மணிக்குத் தான் வீடு போகலாம். அதுவரை நீ என்னோடு தான் என்றார் மூதறிஞர் செனற்றர் நடேசன். அப்படி அங்கு என்ன படிப்பித்தார் தெரியுமா? ஆங்கிலப் பத்திரிகையைக் கொடுத்து அரை மணித்தியாலம் வாசி என்பார். வாசித்து முடிந்ததும், உன்னைக் கவர்ந்த ஒன்றைத் தமிழிலோ; ஆங்கிலத்திலோ எழுதிக்காட்டு-என்பார்.

அவன் தமிழிலே ஏதோ எழுதிக் காட்டுவான். நன்றாயிருக்குதடா தம்பி. இப்போ உனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் அதை எழுதிக்காட்டு என்பார். பாவம் அவன் 'புறோக்கிண்' ஆங்கிலத்தில் எதையோ எழுதிக்காட்டுவான். புன்சிரிப்பை மட்டும் காட்டிவிட்டு, அதைத் திருத்திக் கொடுப்பார். இப்படி இரண்டுவாரம் போனதும் மூன்றாம் வாரத்தில், ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியத் தலையங்கத்தைக் கொடுத்து மூன்று முறை வாசித்துவிட்டு உனக்கு என்ன விளங்குகிறதோ அதை எழுதிக்காட்டு. விரும்பினால் தமிழிலும் எழுதலாம் என்பார். தனக்குத் தெரிந்ததை எழுதிக்காட்டுவான். அடே அப்பா! என்ன முன்னேற்றம். என்னோடு உனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் பேசிப்பார் எனப் பேசவும் வைத்துவிட்டார் அந்த இளைஞனை.

அடுத்த கட்டம், ஆரம்பமாகியது. உன்னைப்பற்றி ஒரு பத்து வசனம் எழுது என்பார். அவன் எழுதுவான். நான் சிறு திருத்தங்களைச் செய்து கொடுப்பேன். தன்னைப்பற்றி எழுதி தன் ஊரைப் பற்றி எழுதி, பின் தன் தாய் நாட்டைப்பற்றி எழுதிய அவன். ஆங்கிலக் புலமையைக் கண்டு நானே திகைத்தேன்; வியந்தேன்.

புத்தகப் பூச்சியாக ஆங்கிலமே எழுத வாசிக்க அஞ்சியவன், என்னோடு சரளமாக ஆங்கிலத்தில் பேசலானான். சில மாதங்களின் பின்னர், நீ ஆங்கிலப் படம் பார்க்கவேண்டும் என்றும் கறண்டி முள்ளு பிடித்துப்பார் என்றும் பகிடி விடுவார்; அதனைத் தூண்டுவார் நடேசன். இன்று செனற்றர் நடேசனோ அமரராகி விட்டார். அவனது நண்பனின் மகன் லண்டன் மாநகருக்கு அனுப்பப்பட்டு M.A பட்டதாரி ஆகி, பணம் மிக உழைத்து செல்வந்தனாகி விட்டான். ஒரு புத்தகப் பூச்சி சிறகு முளைத்துச் சீமைக்குச் செல்ல முடியுமானால் உன்னால் ஆகாதது எது தம்பி! அவர் வந்து என்னைக் கண்டு ஆங்கிலத்தில் பேசியது காதில் இரைகிறது. வெறுமனே பாடப் புத்தகங்களைப் படித்தும் ரியூசனுக்கும் மட்டும் செல்லும் இன்றைய மாணவச் செல்வங்களுக்கு இது ஒரு முன்னுதாரணமாக இருக்கட்டும்.

பிரசண்டன்

# அரசுடைமைச் சட்டமூலம் அரசியல் பழிவாங்கல் அல்ல
# ஜனாதிபதிக்கு நெருக்கமானோர் சொத்தும் சுவீகரிப்பு

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு

கொழும்பு,நவ.11

அரசுடைமையாக்கல் சட்டமூலத்தின் கீழ் தனியார் சொத்துகள் உள்வாங்கப்படவில்லை. முன்னர் அரசு வழங்கியிருந்த சொத்துகளே உள்வாங்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்த நிறுவனங்களில் ஆளுந்தரப்பு நாடாளுமன்றஉறுப்பினர் ஒருவரது இரண்டுகம்பனிகளும், ஜனாதிபதியின் உயிர் நண்பனது கம்பனியும் உள்ளன. அதனால், எவரையும் இச்சட்டமூலத்தின் ஊடாகப் பழிவாங்கவுமில்லை.

- இவ்வாறு விளக்கமளித்தார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செயற்பாடு குறைவாகவுள்ள தொழில் முயற்சிகளுக்கும் மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துகளுக்கும் புத்துயிரளித்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

இந்தச் சட்டமூலத்தில் தனியார் நிறுவனங்கள் உள்வாங்கப்படவில்லை. மாறாக அரச சொத்துகளே உள்வாங்கப்பட்டுள்ளன.

முன்னர் விவசாயக் காணிகள் வழங்கப்பட்டபோது - அதில் குடியிருப்புகளை அமைத்த போது காணிகள் சுவீகரிக்கப்பட்டன. அத்துடன், சுற்றுலா ஹோட்டல் அமைக்க வழங்கப்பட்ட காணிகளில் குடியிருப்பு அமைத்ததால் அவையும் சுவீகரிக்கப்பட்டன.

இந்த நிலையில், கடந்த வரவு - செலவுத்திட்டத்தின் போது நட்டமடைகின்ற மற்றும் மூடப்பட்டிருக்கும் நிறுவனங்கள் பொறுப்பேற்கப்படும் என்று ஜனாதிபதி கூறியிருந்தமைக்கு அமைய நட்டமடைகின்ற இந்த நிறுவனங்கள் மீளப் பொறுப்பேற்கப்படுகின்றன.



இதில் எந்த அரசியல் பழிவாங்கலும் இல்லை- என்றார். (ஒ-சி)

# சொத்துக்களை ஆட்சியாளர் சூறையாடும் திட்டமே அரசுடைமையாக்கல் சட்டம்

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, நவ 11

செயற்பாடு குறைந்த தொழில் முயற்சிகள் மற்றும் குறைந்த பயன்பாட்டையுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளித்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டில் திருட்டு ஆட்சி உத்தியோகபூர்வமாக செயற்படுத்தப்படும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தாவது:

அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள வளங்களையும், மக்களின் சொத்துக்களையும் ஆட்சியாளர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கின்றனர்.



தனியார் நிறுவனங்களை பறிமுதல் செய்வதற்கான சட்டத்தினால் இலங்கையினுள் திருட்டு ஆட்சி உத்தியோகபூர்வமாக நடைமுறைக்கு வரும். செயற்பாடுகள் குறைவாக உள்ள தொழில் முயற்சிகள் மற்றும் குறைவான பயன்பாட்டையுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளித்தல் சட்டம் என்று உண்மையிலேயே இவ்வளவு நீளமாக அதற்கு பெயரிடாமல் ஆட்சியாளரின் தேவைகளுக்காக காணிகளை சூறையாடும் சட்டம் என்று கூறினால் அனைவரினாலும் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்- என்றார். (ச-சி)

# அரசுடைமையாக்கல் சட்டமூலம் 76 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

கொழும்பு, நவ. 11

செயற்பாடுகள் குறைவாக உள்ள தொழில் முயற்சிகள் மற்றும் குறைவான பயன்பாட்டையுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளித்தல் சட்டமூலம் 76 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலம் மீது வாக்கெடுப்பை நடத்துமாறு பதில் எதிர்க்கட்சித் தலைவர் ஜோன் அமரதுங்க வேண்டுகோள் விடுத்தார்.

சபையில் கடும் வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப்படது.

இந்த சட்டத்திற்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்த சட்டமூலத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் வாக்களித்தன. (ச-சி)

# ஈழ அகதிகள் 47 பேர் தாயகம் திரும்பினர்

கொழும்பு,நவ.11

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் தாமாக நாடு திரும்பும் திட்டத்தின் கீழ், இலங்கைத் தமிழ் அகதிகள் 47 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இலங்கையை வந்தடைந்தனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி 37 இலங்கைத் தமிழ் அகதிகள் கப்பல் மூலம் நாடு திரும்பிய பின்னர், இந்த 47 பேரும் இரண்டாம் கட்டமாக நாடு திரும்பினர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்களில் 43 பேர் இலங்கைத் தமிழ் அகதிகள் ஆவர். மற்றும் நான்கு பேர் இந்தியாவில் பிறந்தவர்கள் ஆவார்.

இலங்கை திரும்பிய முதியவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா உதவித்தொகையும் சிறுவர்களுக்கு 7 ஆயிரம் ரூபா உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் இவர்கள் தங்களது முகாமிலிருந்து துறைமுகத்திற்கு செல்வதற்காக 1,200 ரூபாவை முதியவர்களும் 750 ரூபாவை சிறுவர்களும் பயணக் கட்டணமாகப் பெற்றுக்கொண்டனர்.

இவர்களின் கப்பல் பயணத்திற்கான கட்டணம் இலவசமாகும். இந்தக் கட்டணத்தை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகம் வழங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-சி)

# லங்கா ஈ நியூஸ் இணையத்துக்கு தற்காலிகத் தடை

மீண்டும் அறிவிக்கப்படும் வரை லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தை தற்காலிகமாக தடை செய்யுமாறு நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றவியல் வழக்குகள் ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 3412-11 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் இந்த உத்தரவு தொலைத்தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்டவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தான் இந்த உத்தரவை ஊடகத் துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார் என்று பெல்பிட்ட தெரிவித்துள்ளார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் மீளக்குடியமர்ந்த மக்கள் மீது இராணுவம் வன்முறையைப் பிரயோகிக்கின்றது

## துன்பங்களை அனுபவிப்பதாக மக்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு,நவ.11

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த பொது மக்களின் மீது இராணுவத்தினர் வன்முறையைப் பிரயோகித்து வருவதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு மாலை நேரங்களில் வீதிகளில் ஒன்றுகூடும் இளைஞர்கள் முதற்கொண்டு வீதிகளில் பயணிப்போர்களும் படையினரால் தாக்கப்படுவதாகவும் அத்தோடு பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்து வருவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் குறிப்பாக இன்னமும் மீளக்குடியமராத பகுதிகளில் உள்ள இரும்புகள் நாளுக்கு நாள் களவாடப்படுகின்றன. இதனைத் தடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமையாலேயே தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரும்பு வியாபாரிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே படையினர் மக்கள் மீது வன்முறைகளைப் பிரயோகித்து வருவதாகவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வன்னியில் இரும்பு வியாபாரம் சூடுபிடித்துள்ள நிலையில் தமது பகுதிகளில் இருந்து பழைய இரும்புகள் எடுப்பதற்காகப் பலரும் வந்து செல்வதாகவும் இதனாலேயே படையினர் தம்மைத் தாக்க நேரிடுவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

அத்தோடு மாலை நேரங்களிலும் இரவு நேரங்களிலும் வீதிகளில் நிற்போர் மீதும் பயணிப்போர் மீதும் சில தினங்களாகப் படையினர் தாக்குதலுக்கு இலக்காகிப் பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளதாகவும் அச்சத்துடனேயே வாழ வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தங்கியிருந்த வர்த்தக நிலைய உரிமையாளர் மற்றும் அவரது மகன் உட்பட மூவர் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று புதுக்குடியிருப்பு கொக்கிளாய் வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் அத்துமீறி உள்நுழைந்த படையினர் அங்கிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கோம்பாவில் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சென்ற இராணுவத்தினர் வர்த்தக நிலைய உரிமையாளர்களைத் தாக்க முற்பட்டதுடன் கடும் எச்சரிக்கை செய்துள்ளனர். இப்போது பல்வேறு வன்முறைகளைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தாம் அச்சமடைந்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்தவெள்ளிக்கிழமை மருந்து வாங்கக் கடைக்குச் சென்ற ஒருவரையும் படையினர் தாக்கியுள்ளனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக மக்கள் அச்சுறுத்தப்படுவதாலும் தாக்கப்படுவதாலும் அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் காணப் படுகின்றது.

இதனால் தமது அன்றாட வாழ்வை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள்மேலும் தெரிவித்துள்ளனர். (எ)

# கிளிநொச்சியில் புதிய பிரதேச செயலக பிரிவுகளை ஆரம்பிப்பதில் சிக்கல்கள்

கிளிநொச்சி,நவ.11

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக பிரதேச செயலக பிரிவுகள் ஆரம்பிப்பதில் சிக்கல்கள் அதிகரித்துள்ளன.

மாவட்டத்தில் புதிதாக அக்கராயன் குளத்துக்கென ஒரு பிரதேச செயலர்பிரிவும் வட்டக்கச்சியில் ஒரு பிரதேச செயலர் பிரிவும் உருவாக்கப்பட வேண்டும் என இந்தப் பிரதேச மக்களும் பொது அமைப்புகளும் வலியுறுத்தி வந்தவேளை இதற்கான ஆலோசனைகள், முன்மொழிவுகள் அதிகாரிகளால் பெறப்பட்டு வருகின்றன.

அக்கராயன் குளம் பிரிவுக்கான பிரதேச செயலக பிரிவை நிறுவ போதியளவு கிராம அலுவலர் பிரிவுகள் இல்லாமல் உள்ளதுடன் அக்கராயன், ஸ்கந்தபுரம், கண்ணகிபுரம், கோணாவில், ஊற்றுப்புலம், வன்னேரிக்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் இதனுடன் உள்ளடங்கியுள்ள நிலையில் மேலும் நான்கு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்க வேண்டிய நிலையில் உள்ளதாகவும் இந்தப் பிரிவுடன் இணைய வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் எதிர்ப் புக்காட்டி வருவதாகவும் கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் சுப்பையா கவலை தெரிவித்தார்.

அக்கராயனுக்கு தனி பிரதேச செயலகப் பிரிவை உருவாக்க உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் கிழக்கு, சிவநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி எடுக்கப்பட்ட நடவடிக்கை இந்தப் பிரிவு மக்கள் காட்டிய எதிர்ப்பால் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல் கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுடன் உள்ள வட்டக்கச்சிக்குத் தனியான பிரதேச செயலகப் பிரிவை உருவாக்கும் நடவடிக்கை போதிய கிராம அலுவலர் பிரிவுகள் இல்லாத காரணத்தால் கைவிடப்படும் நிலையில் உள்ளது.

எனவே இந்தப் பிரிவு மக்கள் விரும்பின் கண்டாவளை பிரதேச செயலகத்துடன் இணையலாம் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் புதிதாக பிரதேச செயலகப் பிரிவு ஒன்றை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (எ)

## தேசிய நடமாடும் சேவை எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில்

வவுனியா, நவ.11


தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் நடமாடும் சேவை ஒன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை பெறுதல், கடவுச் சீட்டு பெறுதல், புதுப்பித்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட திகதிகளில் அந்தப் பகுதி மக்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(எ-421)

## கவனிப்பார்களா?...



புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் தேவாலயத்தின் நிலை.

# யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் 4 ஆவது ஆராய்ச்சி மாநாடு 18 ஆம் திகதி

வவுனியா,நவ.11

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் நடத்தி வரும் பிரமாண்டமான ஆராய்ச்சி மாநாடு இந்த முறையும் நான்காவது தடவையாக வவுனியாவில் நடைபெறவுள்ளது.

வவுனியா றோயல் காடின் மண்டபத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை இந்த ஆராய்ச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

பிராந்தியங்களின் அபிவிருத்திக்கு மேற்கிளம்பும் வாய்ப்புக்கள் என்ற தொனிப்பொருளில் வவுனியா வளாகத்தின் முதல்வர் ஆர்.நந்தகுமார் தலைமையில் இந்த ஆண்டுக்கான ஆராய்ச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து இந்த மாநாட்டுக்கு வருகை தரவுள்ள ஆய்வாளர்கள் 42 கட்டுரைகள் ஆய்வுக்கு சமர்ப்பிக்கவுள்ளனர். அவை 8 அமர்வுகளில் அறிஞர்களால் விவாதிக்கப்படவுள்ளன.

இந்த ஆராய்ச்சி மாநாட்டில் சிறப்பு நிகழ்வுகளாக களனிப் பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்புப் பீடாதிபதி பேராசிரியர் மனிக் குணசேகரா சிறப்புரையாற்றவுள்ளார். யாழ். பல்கலைக் கழகத்தின் பௌதீகத்துறைத் தலைவர் பேராசிரியர் பி.ரவி ராஜன் விசேட உரையாற்றவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஜி.முகுந்தன் பிரிவுபசார உரையாற்றவுள்ளார்.

இதன்போது கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளதுடன் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் சிறப்பு விருந்தினராக வவுனியா வளாகத்தின் முன்னாள் முதல்வர் முன்னாள் பேராசிரியர் எஸ்.இராஜ துரையும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

# இளைஞர் விருது வழங்கும் விழா 12 இல்

வவுனியா,நவ.11

வவுனியா மாவட்ட இளைஞர் விருது வழங்கும் விழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு றோயல்காடின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விருது வழங்கும் விழா இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா மாவட்ட காரியாலயத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

பல்வேறு வகைகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டிய இளைஞர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாகத் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வவுனியா மாவட்ட காரியாலய உதவிப் பணிப்பாளர் எம்.பி. சரத்சந்திரபால தெரிவித்தார். (எ)

# வவுனியாவில் டெங்கைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் 14 ஆம் திகதி முதல் ஆரம்பம்

வவுனியா,நவ.11

வவுனியா நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவக்கூடிய சூழல் காணப்படுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் நகரசபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா நகரசபையின் உப தலைவர் எம்.எம். ரதன் தெரிவித்தார்.

எதிர்வரும 14 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதிவரை விசேட டெங்கு நோய் ஒழிப்பு நாள்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இந்நாள்களில் நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள 11 வட்டாரங்களிலும் சிரமதானப் பணிகள் மற்றும் குப்பைகளை அகற்றும் பணிகள் நடைபெறுமெனவும் அவர் கூறினார்.

இந்த நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒவ்வொரு நகரசபை உறுப்பினர்கள் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகரசபைக்குரிய உழவு இயந்திரத்தோடு மேலும் 3 உழவு இயந்திரம் பெறப்பட்டுள்ளதுடன் 25 தொழிலாளர்களும் புதிதாக இந்த வேலைத் திட்டத்துக்கு இணைக் கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திக்தி பெரியார்குளம், இறம்பைக் குளம், சகாயமாதாபுரம் ஆகிய பகுதிகளிலும் 15 ஆம் திகதி முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு, சூசைப் பிள்ளையார்குளம், சின்னப்புதுக் குளம் ஆகிய பகுதிகளிலும் 16 ஆம் திகதி கோவில்குளம், வெளிக்குளம், தெற்கு இலுப்பைக் குளம் ஆகிய பகுதிகளிலும் 17 ஆம் திகதி [illegible] [illegible] குளம், தோணிக்கல், கற்குழி ஆகிய பகுதிகளிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும்18 ஆம் திகதி உள் வட்ட வீதி வெளிவட்ட வீதி, வை.எம்.சீ.ஏ. ஒழுங்கை, பூங்கா வீதி, குட்செட் வீதி, கரப்பன் காடு ஆகிய பகுதிகளிலும், 21 ஆம் திகதி வைரபுளியங்குளத்திலும், 22 ஆம் திகதி குருமண் காட்டுப் பகுதியிலும், 23 ஆம் திகதி நகரப் பகுதியிலும், 24 ஆம் திகதி தாண்டிக்குளம், யாழ். வீதி, பத்தினியார் வீதி, மகிழங் குளம், திருநாவற்குளம் ஆகிய பகுதிகளிலும், 25 ஆம் திகதி பட்டைக்காடு, வேப்பங் குளம், பட்டாணிச்சூர் ஆகிய பகுதிகளிலும், 26 ஆம் திக்தி பண்டாரிக்குளம், தட்சநாதன் குளம், உக்கிளாங்குளம் ஆகிய பகுதிகளிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தை சிறப்பாக செயற்படுத்துவதற்குப் பொது மக்கள் தம்மாலான பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் வவுனியா நகர சபையின் உப தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்தொழிலினை மேம்படுத்தும் வகையில் துறைமுகம் ஒன்றினை அமைத்துத் தருக

## முல்லைத்தீவுக் கடல்தொழிலாளர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, நவ.11

முல்லைத்தீவு கடல்தொழிலாளர்கள் தொழில் செய்யக் கூடிய வகையில் கடற்கரையில் துறைமுகம் தேவையென கடல் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு கடல்பகுதி மிகவும் ஆழமான ஒரு கடல் பகுதி ஆகும்.

இந்தக் கடல் பகுதியில் தொழிலினை மேற்கொண்டு படகுகளை கரைக்குக் கொண்டு செல்லக்கூடிய வகையிலும் தரித்து நிற்கக் கூடிய வகையிலும் முல்லைத்தீவு கரையோரப்பகுதியில் துறைமுகம் ஒன்றினை அமைத்துத் தரு மாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடல்தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இந்த துறைமுக வசதியை ஏற்படுத்தித் தரும் போதுதான் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் எனவும் கடல்தொழிலாளர்கள் தெரிவிகின்றனர். (எ-6)



போரின் அழிவில் இருந்து மீளமுடியாமல் இருக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் நுழைவாயில்

## நொச்சிமோட்டையில் சிறுவர் பூங்கா திறப்பு

வவுனியா, நவ.11

வவுனியா நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சிங்கர் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட பூங்காவை வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.தவராஜா திறந்து வைத்தார்.

வித்தியாலயத்தின் அதிபர் கோ.குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிங்கர் நிறுவனத்தின் மாவட்ட உதவி முகாமையாளர் சஜித் மற்றும் கிளைமுகாமையாளர் கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (எ-421)

## முல்லைத்தீவில் 3,765 பரீட்சார்த்திகள் சாதரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவர்

ஜி.சி.ஈ. சாதாரணதர பரீட்சையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் ஆறு இணைப்பு நிலையங்களிலும் மற்றும் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் 4 இணைப்பு நிலையங்களிலும் மொத்தமாக 10 இணைப்பு நிலையங்களில் நடைபெறவுள்ளது என துணுக்காய் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்தார்.

மேற்குறித்த இணைப்பு நிலையங்களின் கீழ் முல்லை கல்வி வலயத்தில் 19 பரீட்சை நிலையங்களிலும் துணுக்காய் கல்வி வலயத்தில் 11 பரீட்சை நிலையங்களிலும் மொத்தமாக 30 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலை பரீட்சார்த்திகளில் ஆண்கள் ஆயிரத்து 260 பேரும், பெண்கள் ஆயிரத்து 473 பேரும் மொத்தமாக 2 ஆயிரத்து 733 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். மேலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆயிரத்து 34 பேரும் தோற்றவுள்ளனர். எனவே இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை பரீட்சார்த்திகள் என மொத்தமாக 3 ஆயிரத்து 765 பேர் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். (எ)

## வன்னேரிக்குள மருத்துவமனையில் எப்போது சிகிச்சை பெற முடியும்?

அக்கராயன், நவ.11

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மருத்துவமனையில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக மருத்துவர் இல்லாமல் இயங்கிவருவதால் நோயாளர்கள் பாதிக்கப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மருத்துவமனையில் 25 ஆண்டுகளாகப் பணிபுரிந்த மருத்துவர் ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்துப் புதிய மருத்துவர் ஒருவரும் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் 7 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் மருத்துவமனையை நாடி அந்தப் பகுதி மக்கள் சென்றனர். கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் இந்த மருத்துவமனையிலும் மருத்துவர் சேவையில் இல்லாததால் கிளிநொச்சி பொது மருத்துவமனையை நாடிச் செல்கின்றனர்.

இப்படியாக மருத்துவ சேவைக்காக அலைந்து திரியும் மக்கள் தமது பகுதியில் உள்ள வன்னேரிக்குள மருத்துவமனையில் ஒரு மருத்துவரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-410)

## புதுக்குடியிருப்பில் மாற்றுவலுவுள்ளோர், விதவைகள் தொடர்பான கணக்கெடுப்பு

நாவற்குழி, நவ.11

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மாற்றுவலுவுள்ளோர், விதவைகள் தொடர்பான கணக் கெடுப்பு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பிரதேச செயலர், வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோரின் வழிகாட்டலில் இந்தப் பணி நடைபெற்று வருகின்றது.

பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அதிகாரி ந.தசரதன் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றார்.

கிராம அலுவலர்களும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இந்தப் பணிக்கு உதவி வருகின்றனர்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாற்று வலுவுள்ளோர், விதவைகள் ஆகியோருக்குப் பொருத்தமான உதவித் திட்டங்களை எதிர்காலத்தில் செய்ய இது உதவியாக இருக்கும் என்ற நோக்கில் இந்தக் கணக்கெடுப்பு நடைபெறுகின்றது.

மீளக்குடியமர்ந்த மக்களில் இத்தகைய தன்மையிலான மக்கள் தொகையைக் கணக்கிடுவதும் இதன் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மாற்றுவலுவுள்ளோர் பெரும் நன்மையடைவார்களெனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-121)

# ஆசிய வங்கியின் நிதி உதவியில் கிளிநொச்சியில் கட்டுமானங்கள்

நாவற்குழி, நவ.11

கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பல கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினது நிதி உதவியால் பல கட்டுமானப் பணிகள் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் கட்டடங்களுக்கான நீர்கசிவுத் தடுப்பு அவசர வேலைகள் செய்யப்படவுள்ளது.

பூநகரி பல்லவராயன்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடப் புனர்நிர்மாண வேலைகள், முழங்காவில் மகா வித்தியாலய ஆசிரியர் விடுதிகள் புனர்நிர்மாண வேலைகள்.

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்காக மலசல கூடங்கள் புனரமைப்பு, பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இரணைமாதா நகர், மட்டுவில் நாடு மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை புனரமைப்பு, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் புளியம்பொக்கணை கமநல சேவை நிலைய கட்டடம் புனர்நிர்மாணம், பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் 800 சதுர அடியில் ஆசிரியர் விடுதி புனர்நிர்மாணம், கிளிநொச்சி தொழில் திணைக்களக் கட்டடம் புனரமைப்பு. கண்டாவளையில் இராமநாதபுரம் கமநல சேவை நிலையக் கட்டடம் புனரமைப்பு வேலைகள் என்பவை இவ்வாறு நடைபெறவுள்ளன.

இந்த வேலைகளுக்குத் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்கள் இந்த மாதம் 21 ஆம் திகதி வரை கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியுமென கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார். (எ-121)

## வவுனியாவில் விவசாயிகளுக்கு விதைபொருள் வழங்கப்படுகின்றது

வவுனியாவில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சமுர்த்தி திணைக்களத்தினால் விவசாயிகள் மற்றும் சுயதொழிலில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கும் வகையில் விதை பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சமுர்த்தித் திணைக்களத்தினால் விதை பொருள்கள், தென்னம்பிள்ளை,மாங்கன்று போன்றவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தத்திட்டம் தற்போது சமுர்த்தி திணைக்களத்தினால் கிராமமட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.(எ-421)

## வவுனியாவில் மொழி சங்கங்கள் அமைப்பு

வவுனியா, நவ.11

வடமாகாணத்தில் தேசிய மொழிகள்மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மூலம் கிராமங்கள் தோறும் மொழிகள் சங்கம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் தமிழர்களுக்கு சிங்கள மொழிப் பயிற்சியும், சிங்களவர்களுக்குத் தமிழ் மொழிப் பயிற்சியும் மற்றும் விளையாட்டுப் போட்டிகள், இன [illegible] மேம்படுத்தும் வகையில் கலாசார விழாக்களையும் நடத்த அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் மறவன்புலம், ஈஸ்வரிபுரம், தரணிக்குளம், செக்கட்டிப் புலம், செட்டிகுளம், தவசிக்குளம் ஆகிய கிராமங்களில் இந்தச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அதனை அமைச்சில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நடைபெற்று வருவ[illegible] ஒருங்கிணைப்பாளர் செல்வி ஜெனசி தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சியில் 4 பாடசாலைகளில் வளங்கள் அதிகரிக்கப்படவுள்ளன


கிளிநொச்சிக் கல்விவலயத்தில் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் நான்கு பாடசாலைகள் முதன்மைப் படுத்தி வளங்கள் அதிகரிக்கப்படவுள்ளன. முழங்காவில் மகா வித்தியாலயம், பளை மத்திய கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, தருமபுரம் மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளே வளங்கள் அதிகரிக்கப்படவுள்ளன இந்த நான்கு பாடசாலைகளில் முதன்மையாக ஆசிரிய ஆளணி நிரப்பப்பட்டு ஏனைய வளங்களும் அதிகரிக்கப்படவுள்ளன.கோட்ட மட்டங்களில் முதன்மைப் பாடசாலைகளின் மாணவர்கள் தொகை வள அதிகரிப்புக்கான காரணங்களாக உள்ளன. இதேவேளை கிளிநொச்சி கல்வி வலயத்தின் பூநகரி மகாவித்தியாலயம், அக்கராயன் மகாவித்தியாலயம், வட்டக்கச்சி மகாவித்தியாலயம் போன்ற முக்கிய பாடசாலைகளில் முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை யென்பது குறிப்பிடத்தக்கது. (எ-410)

## சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க மன்னாரில் பெயர்ப்பலகை




மன்னார் மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம் பெற்றால் உடனடியாக '1929' என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரி மன்னார் நகரப் பகுதியில் அவசர தொலை பேசி இலக்கம் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பெயர்ப்பலகையை மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். அந்தப் பெயர்ப் பலகையைப் படத்தில் காணலாம். (601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லைசன்ஸ் கீயுடன் அனைத்து மென்பொருள்களும் இலவசம்!

சாதாரண இலவச மென்பொருளை தரவிறக்க விரும்பினால் கூகுளில் சென்று தேடி ஒவ்வொரு மென்பொருளாகத் தான் தரவிறக்க வேண்டும்.


ஆனால் எமக்குப் பயன்படும் அனைத்து இலவச மென்பொருள்களையும் அங்கீகாரத்துடன் ஒரே இடத்தில் இருந்து எளிதாக எமது கணினியில் நிறுவலாம். புதிதாக அறிமுகமாகிக் கொண்டிருக்கும் அனைத்து free ware Application பற்றிய தகவல்களும், எத்தனை பேர் இந்தப் புதிய மென்பொருளை பயன்படுத்தியுள்ளனர் எப்படி இருக்கிறது என்று பயன்படுத்திய மக்களின் பின்னோட்டத்துடன் நாம் எளிதாக அறியலாம். இலவச மென்பொருள்களைக் கொடுக்க பல இணையத்தளம் இருந்தாலும் சில நேரங்களில் இவ்வாறான தளங்களில் சென்று தரவிறக்கும் போது Adware என்று சொல்லக்கூடிய தொல்லைகள் நம் கணினியில் ஊடுருவ வாய்ப்பிருக்கிறது.

இதற்காக மென்பொருள் உருவாக்கும் நிறுவனத்தின் இணையத்தளத்துக்குச் சென்று தரவிறக்கலாம் அல்லது இதே போல் நம்பிக்கையாக இருக்கும் தளத்தில் இருந்து இலவச மென்பொருள்களை எளிதாகத் தேடித் தரவிறக்கலாம்.

ஆனால் இந்தத் தளத்தின் மூலம் நேரடியாகக் குறிப்பிட்ட மென்பொருள் உருவாக்கும் இணையதளத்திற்கே இணைப்பு கொடுத்து நேரடியாக Install செய்யலாம். கீழே உள்ள link மூலம் நீங்கள் தேவையான பயனுள்ள மென்பொருள்களை பதிவிறக்கம் செய்யலாம். இணையத்தள முகவரி http://www.freenew.net/

# முறுக்கலாம்.... வளைக்கலாம்...

## ஸ்லிம்மோஸ்லிம் செல்போன்



மிகமிக மெல்லியதான கைத்தொலைபேசியை சாம்சங் அடுத்த ஆண்டில் அறிமுகப்படுத்த உள்ளது. அமோலெட் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கைத்தொலைபேசியை பேப்பர் போல முறுக்க, வளைக்க முடியும். சுத்தியலால் அடித்தாலும் வளைந்து கொடுக்குமே தவிர, உடையாது என்பது இதன் சிறப்பம்சம். தென்கொரியாவைச் சேர்ந்த சாம்சங் நிறுவனம் புதுப்புது வசதிகளுடன் கூடிய கைபேசிகளைத் தொடர்ந்து அறிமுகம் செய்து வருகிறது. வளைத்தாலும் ஒன்றும் ஆகாத கைபேசிகளை அடுத்த வருடம் மே மாதம் அறிமுகப்படுத்த உள்ளது. இதுபற்றி சாம்சங் பொறியியலாளர்கள் கூறுகையில்: வளைத்தாலும் பாதிக்கப்படாத பிளெக்சிபிள் கைபேசிகளை உருவாக்க வேண்டும் என்பது சாம்சங் நிறுவனத்தின் நீண்ட கால கனவு திட்டம். அதன் வடிமைப்புப் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இதன் பெயர் அமோலெட் என்பதாகும்.ஸ்கிரீன் 4 1/2 இஞ்ச் நீளம் இருக்கும். கைபேசிகளின் தடிமன் 0.3 மி.மீ. ஆக இருக்கும். 1 ஜிபி ராம், 1.2 ஜிகாஹெர்ட்ஸ் பிராசசர் திறன் கொண்டது. 8 மெகாபிக்சல் கமரா வசதியும் உள்ளது. கிராபீன் காபன் பயன்படுத்தி ஸ்கிரீன் தயாரிக்கப்பட்டுள்ளது. சுத்தியலால் அடித்தாலும் உடையாது. இவ்வாறு பொறியியலாளர்கள் கூறினர்.

# மருத்துவ வசதிகளை உள்ளடக்கிய கையடக்க தொலைபேசிகள்

ஒரு மோட்டரோலா அன்றொய்ட் கைத்தொலை பேசியின் கமராவில் நோயாளியொருவரின் விரலை அழுத்தும்போது அவை குருதியிலுள்ள ஓட்சிசன் அளவு, சுவாசத்துடிப்புகள் உட்பட குருதியோட்டத் தகவல்கள் ஆகியவற்றைன வைத்தியசாலையில் பயன்படுத்தப்படும் பெரிய, பெறுமதிப்பு மிக்க திரைகளில் பதிப்பது போன்று துல்லியமாகப் பதிந்து காட்டின.


வேறுசில ஆய்வாளர்கள் iPhone ஐ ஒரு நுண்ணறி கருவியாக பயன்படுத்தி செய்து காட்டினர்.

இதனுடன் பசியுடன் இருக்கும் நபரை பரிசோதிக்கும் ஒரு மென்பொருளும் இருந்தது.

மோட்டரோலா அன்றொய்ட் கைத்தொலைபேசி கமராவின் மீது ஒரு ball lense வைத்துப் பதியும்போது அது ஒரு மருத்துவ நுண்ணறிகருவி வேலைசெய்வது போல விம்பங்களைப் பெறிதாக காட்டியது.

மேலும் அதில் குருதிக்கலங்களின் வேறுபாட்டையும் காணக்கூடியதாயிருந்தது. வைத்தியர்கள் பயணிக்கும் போது எடுத்துச்செல்ல பயனுள்ளதாக இது அமைகின்றது. இந்த வசதியை ஒரு நோயாளியின் சுய பரிசோதனைக்கு மற்றும் சிறிதளவில் பரிசோதனைகளை மேற்கொள்ள பயன்படுத்தலாம் என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

# கண் பார்வையை அதிகரிக்கும் மென்பொருள்



iPhone மற்றும் கணினியை அதிக நேரம் பார்ப்பதால் ஒருவரது கண் பார்வை பாதிக்கப்படும் என்பது பொதுவாக நாம் அறிந்த விடயம். ஆனால் மாறாக அவை ஒருவரது கண் பார்வை முன்னேற்றத்துக்கு உதவும் என்பது எம்மில் அதிகமானோரை ஆச்சரியப்பட வைக்கின்றது. நடுத்தர வயதானவர்களின் பார்வையை இன்னும் 10 வயது குறைத்து நன்றாகத் தோற்றமளிக்கச் செய்யும் ஒரு மூளைப்பயிற்சியாக மென்பொருள் அமையும் என்று கூறப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்ணாடி பயன் படுத்துபவர்களால் 2 வரிகளுக்கு மேலாகக் கண்ணாடியில்லாமல் வாசிக்கமுடிகின்றது என்றும், ஏற்கனவே கண்ணாடியைப் பயன்படுத்தி வாசிப்பவர்களால் அதன் பாவனையைக் குறைக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மென்பொருள் அடுத்த வருடத்தின் முற்பகுதியில் வெளியிடப்படவுள்ளது. ஆரம்பத்தில் கையடக்கத் தொலைபேசியின் மென்பொருளாகவே வருமென்றும் அதன்பின்னரே கணினிகளுக்கென இவை வெளியிடப்படும் என்றும் கூறப்படுகின்றது. இந்த மென்பொருள் அமெரிக்க நிறுவனமான Ucansi இனால் உருவாக்கப்படுகின்றது. இதில் முதலில் ஒரு சாம்பல் நிறத் திரையைப் பார்க்கலாம். அதில் ஒரு வெள்ளை வட்டம் இருக்கும். அடுத்து விரைவாகப் பல இடங்களில் பல பிம்பங்கள் தோன்றும். இவற்றில் சில வெற்றிடமாகவும் சில கலங்கலான கோடிட்ட வடிவங்களாகவும் இருக்கும்.

கண்பார்வையை அதிகரிக்கும் மென்பொருள் இதன் இலக்கு வெற்றிடமான இடங்களைத் தெரிந்தெடுத்து அதில் அந்த வட்டத்தை வைப்பதுதான். ஒருவர் நன்றாகச் செயற்பட செயற்பட இந்தப்பணி வேகமாகவும் சிரமமானதாகவும் மாறும். கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்தப் பரிசோதனை ஆராய்ச்சியில் சராசரி 51 வயதானவர்கள் சுமார் 40 பாடங்களில் பங்குபற்றினர். முதல் 3 மாதங்களுக்கு இதன் விலை 60 பவுண்களாக இருக்கும் என அந் நிறுவனம் கூறுகிறது. இந்நிலையில் வாரத்தில் 3 தடவைகள் வீதம் 15 நிமிடம் ஒரு வாடிக்கையாளர் பயிற்சியளிக்கப்படும். அதன்பின்னர் இவை மாதாந்தக் கட்டணமாக மாறும். பிரிட்டன் மக்கள் வழமையாக ஒரு வருடத்தில் கண்பார்வை உற்பத்திக்காக 2.7 பில்லியன் பவுண்களைச் செலவழிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக்கு ஜப்பான் அரசு ரூ. 9.4 மில்லியன் நிதியுதவி

கொழும்பு, நவ.11

இரத்தினபுரி மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கென ஜப்பானிய அரசு 9.4 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கவுள்ளதாக இலங்கையிலுள்ள ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத் திட்டத்தின் கீழ் இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இந்த நன்கொடை தொடர்பான ஒப்பந்தம் கடந்த செவ்வாய்க்கிழமை ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் சப்ரகமுவ சமூக அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாலித கருணாரத்ன ஆகியோருக்கிடையே கைச்சாத்திடப்பட்டுள்ளது.



ஜப்பானிய அரசின் இந்த நிதியுதவி தொடர்பில் சப்ரகமுவ சமூக அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் கருணாரத்ன தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளதுடன் இச்செயற்திட்டமானது இன, மத, பேதமின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் நடைமுறைப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜப்பானியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்தச் செயற்திட்டத்தின் மூலம் பலாங்கொடை மற்றும் பெல்மதுளை பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட சமூகங்களின் சுற்றுச்சூழலும் வாழ்வாதாரங்களும் முன்னேற்றமடையும்.

இரத்தினபுரி மாவட்ட வறிய சமூகங்களுக்கான நீர்வழங்கல் வசதிகள் மற்றும் நுழைவுப் பாதை விருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் நான்கு நீர்வழங்கல் திட்டங்களும், ஏழு விவசாயக் கிணறுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்படுவதுடன் ஒரு நுழைவுப்பாதை புனரமைக்கப்படும்.

இந்தச் செயற்திட்டமானது சப்ரகமுவ சமூக அபிவிருத்தி நிதியத்தால் நடைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம் 400 குடும்பங்கள் நேரடியாகப் பயனடையும் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## சீனி ஆலைகளை இயக்க அரசு முயற்சி

ஆலையடிவேம்பு, நவ.11

இங்குறாணை, கந்தளாய் ஆகிய இடங்களில் கைவிடப்பட்டுள்ள சீனி ஆலைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் கிழக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

அங்குறாணை சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான கரும்பு உற்பத்திக் காணிகளில் இந்த சிறுபோகத்தின்போது கரும்பு சாகுபடி செய்வதற்கான ஏற்பாடுகளை அம்பாறை மாவட்ட அரச அதிபர் சுனில் கன்னங்கரா எடுத்துள்ளதோடு, கரும்புச் செய்கைக்கான காணிகளுக்குப் பக்கத்திலுள்ள தனியார் காணிகளிலும் கரும்புச் செய்கையில் ஈடுபடுவதற்கு ஏற்றவாறு வங்கிகள் மூலம் கடன் உதவிகளும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்கான கரும்புக் காணிகளிலும், அதனை அண்மித்துள்ள தனியார் காணிகளிலும் கரும்புச் செய்கையில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த இரு சீனி ஆலைகளையும் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை இந்தியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கல்லோயா அபிவிருத்திச் சபை கிழக்கிலுள்ள மக்களுக்கு தொழில் வசதியையும், சீனியின் விலையைக் குறைக்கும் முகமாகவுமே இந்த இரு சீனி ஆலைகளையும் ஆரம்பித்து இயக்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## தமிழ் இளைஞர் குத்திக் கொலை; சந்தேகநபர் பொலிஸில் சரண்

மஸ்கெலியா, நவ.11

காலி ஹோட்டலொன்றில் வேலைசெய்துவந்த தமிழ் இளைஞரொருவர் கடந்த திங்கட்கிழமை காலை கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

சாமிமலை பெயலோன் தோட்டம் பாகினிப்பிரிவைச் சேர்ந்த காளிமுத்து ரஜனிகாந் என்ற இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவதினம் அங்கு பணியாற்றிய பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் இந்த இளைஞருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்தே கொலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸில் சரணடைந்துள்ளார்.

இவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு காலி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கும், பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தேசிய மட்டப் போட்டித் தெரிவுக்காகச் சென்ற மாணவர்களின் அ.அட்டை, உடைமைகள் திருட்டு

கம்பளை, நவ.11

கம்பளை சாஹிரா கல்லூரியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட தெரிவுப்போட்டிக்குச் சென்ற பாடசாலை அணியைச்சேர்ந்த ஏழு மாணவர்களின் அடையாள அட்டைகளும், பணமும் திட்டமிட்ட வகையில் திருடப்பட்டுள்ளன.

மாணவர்களை அழைத்துச் சென்ற ஆசிரியர் அவர்களை மைதானத்தில் விட்டு விட்டு வேறு வேலை ஒன்றுக் காக வெளியே சென்றிருந்த சமயம் மாணவர்களின் பைகளிலிருந்து அடையாள அட்டைகளும், பணமும் திருடப்பட்டுள்ளன.

தமது உடைமைகளைப் பறிகொடுத்த மாணவர்கள் மைதானத்தில் பரிதவித்துக் கொண்டு நின்றதை அவதானித்த விளையாட்டு அதிகாரிகள் மாணவர்களை அணுகி வினவியபோதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவமானது பிரதேச தமிழ்பேசும் மக்கள் தரப்பில் அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது.

தமிழ்பேசும் மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிக்குச் செல்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் விசமிகள் சிலரே இவ்வாறான செயலைச் செய்திருக்கின்றனர் என்று பிரதேச கல்வி அதிகாரிகளும், பெற்றோரும் விசனம் தெரிவித்துள்ளனர். (ச)




கல்முனை ரெத்தா சமாஜ அமைப்பு கல்முனை திருஇருதயநாதர் மண்டபத்தில் வருடாந்த பாராட்டு விழா ஒன்றை நடத்தியது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் கலாநிதி சரத் வீரசேகர, சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீமின் நீண்டகால ஊடக சேவையைப் பாராட்டும் முகமாகப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (ச)

## பொலிஸ் பதிவுகள் திருமலையில் தீவிரம்

மூதூர், நவ.11

திருகோணமலைப் பகுதியில் வாழும் குடும்பங்களையும் அவற்றை அண்டியிருப்போரையும் பதிவுசெய்யும் நடவடிக்கை களைத் திருகோணமலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பொலிஸார் வீடுகள் தோறும் சென்று விநியோகித்து வருகின்றனர்.

இந்த விண்ணப்பப்படிவத்தின் மூலம் குடும்பத் தலைவர், குடும்ப உறுப்பினர்கள், அவர்களுக்கு அருகிலிருப்போரின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்வாறு அருகிலிருப்போர் தங்கி யிருக்கும் கட்டம் தொடர்பான விவரங்களும் இந்தப் படிவத்தின் மூலம் கோரப்பட்டுள்ளன. (ச)

## சீரற்ற காலநிலையால் ஆழ்கடல் மீன்பிடி பாதிப்பு

சம்மாந்துறை, நவ.11

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் அம்பாறை மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடித் தொழில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இந்த மாவட்டத்தில் தற்பொழுது மழையுடன்கூடிய காற்றும், அடிக்கடி கடல் கொந்தளிப்பும் ஏற்படுகிறது. இதனால் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளமுடியாதுள்ளது. அத்துடன் இயந்திரப்படகுகளை படகுத்துறைமுக வசதிகளுள்ள பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் அடுத்து வரும் பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதிகளில் இந்தப் பிரதேசத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகத் தமது தொழில் பாதிக்கப்படுகின்றது என்று மீனவர்கள் விசனிக்கின்றனர்.

பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்குத் தாம் உட்படுகின்றனர் என்று இக் காலப்பகுதியில் ஏதாவது நிவாரண உதவித் திட்டங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர். (ச)

## சொத்துத் தகராறில் தாய்க்கு சயனைட் கொடுத்த மகன்

கொக்கரல்ல, நவ. 11

தாய்க்கு சயனைட் வில்லையொன்றைக் கொடுத்து கொலைசெய்ய முயன்றார் என்ற சந்தேகத்தின்பேரில் மூத்தமகனை கொக்கரெல்ல பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கொக்கரல்ல கிராமத்தில் வசித்துவந்த 45 வயதுடைய தாயொருவருக்கே இந்த அவலம் நேர்ந்துள்ளது.

சந்தேகநபர் தனது தாயிடம் சொத்தில் தனது பங்கைப் பிரித்துத் தருமாறு கேட்டுள்ளார். தாய் அதற்கு இணங்காததால் அவரது கழுத்தில் கத்தியொன்றை வைத்து பயமுறுத்திய மகன் சயனைட் வில்லையைக் கொடுக்க முயன்றுள்ளார். மகனது பிடியிலிருந்து ஒருவாறு தப்பிக்கொண்ட தாய் கத்தியுடனும், சயனைட்வில்லையுடனும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபரை வரக்காபொல பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்தனர். சந்தேகநபர் இராணுவத்தில் பணிபுரிபவர். அவருக்கு சயனைட் வில்லை எவ்வாறு கிடைத்தது என்பது பற்றியும் விசாரணை நடந்து வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா
## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கலாம். வியாபாரிகளுக்கு போட்டி, எதிர்ப்புகளால் பதற்றம், கோபம் அதிகரிக்கலாம். விலை மதிப்பு மிக்க பொருள் ஒன்றை வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். யாருக்காகவும் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் உறுதியுடன் செயற்படுவீர்கள்.

**இடபம்:**
குடும்ப உறுப்பினர்கள் உங்கள் தலையில் வேலைகளைச் சுமத்தி விட்டு அவர்கள் தப்பித்துக் கொள்ளலாம். அவசரப்பட்டு சில முடிவுகளை எடுத்துவிட்டு பின்னர் அதற்காக வருத்தம் அடைவீர்கள். நண்பர்கள் சிலரின் தந்திரமான செயற்பாடுகளை அறிந்து கொள்வீர்கள். ஒருவர் உதவி செய்ய முன்வந்தும் அதை வேண்டாம் என, மறுப்பீர்கள்.

**மிதுனம்:**
அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே தொலைபேசி மூலம் சில வேலைகளை முடிப்பீர்கள். உங்களிடம் உதவி பெற்ற ஒருவர் மனதாரப் பாராட்டலாம். பெற்றோர் வழியில் பெருமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். நிலம், பூமி வாங்கும் விவகாரங்களில் முன்னேற்றம் உண்டு. மனதில் சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும்.

**கடகம்:**
கடன் மிகுதிகள் எளிதில் வசூலாகும். மனக் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த பிரச்சினை ஒன்று, நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். குடும்பப் பெரியவர்களிடம் சில யோசனைகளைக் கேட்டு முக்கியமான விடயங்களில் செயற்படுவீர்கள். பெண்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். முக்கிய நபர்களின் சந்திப்பு நிகழும்.

**சிங்கம்:**
மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காக சில ஆடம்பரச் செலவுகளைச் செய்வீர்கள். நண்பர் ஒருவரின் தயவில் சில காரியங்களை முடிக்க நேரிடலாம். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளுக்காக அலையலாம். மாற்று மதத்தினர் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

**கன்னி:**
புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டிய நாள். பெரிய மனிதர்கள் அல்லது நண்பர்கள் சிலரின் தலையீட்டால் உங்களின் வேலைகளில் இடையூறுகள் ஏற்படலாம். என்னதான் சிறப்பாக செயற்பட்டாலும், ஏதாவது விமர்சனங்களுக்கு ஆள்படலாம். ஆதாயமில்லாத விடயங்களில் தலையிட்டு அவதி, தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம்.

**துலாம்:**
எதிலும் ஏற்றமான பலன்களைக் காணும் நாள். உறவினர்கள் இடையே ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்த்து வைக்க முற்படுவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவரைச் சந்தித்துப் பேச நேரிடலாம். வியாபாரிகள் சிறிய வேலைகளுக்கு கூட கடுமையாக அலைய நேரிடலாம். தந்தையின் ஏட்டிக்குப் போட்டியான செயல்பாடுகளால் எரிச்சல் அடையலாம்.

**விருச்சிகம்:**
பணப்பற்றாக்குறை தீரும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். சில விடயங்களில் தந்திரமாகச் செயற்படுவீர்கள். உறவினர் ஒருவரின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பீர்கள். இனிய நாள்.

**தனுசு:**
சேமிக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு ஏதாவது ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். எதிலும், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற ரீதியில் பேசுவதால், மற்றவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். தர்ம காரியம் செய்வீர்கள்.

**மகரம்:**
உங்களின் பழங்கதைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். செய்த வேலை ஒன்றில் முழு திருப்தி கிடைக்காமல் போகலாம். குடும்ப உறுப்பினர் ஒருவரை கடும் வார்த்தைகளால் விமர்சிக்கலாம். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். வாகனங்கள் வழியில் சிறு தொந்தரவுகளுக்கு ஆள்படலாம்.

**கும்பம்:**
குதர்க்கமாகப் பேசும் சிலரிடமும் கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். நாலு பேருடன் சேர்ந்து செய்த காரியம் ஒன்றில் வெற்றி கிடைக்கலாம். இதற்கு முன்னர் அறிமுகமில்லாத ஒருவர் மூலம் உதவிகளைப் பெற வாய்ப்பு உண்டு. பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவம் உண்டு.

**மீனம்:**
மனக்குறைகள் அதிகரிக்கலாம். மற்றவர்கள் சிலரின் செயற்பாடுகளைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள். அவசர வேலை ஒன்றை முடிக்க, அங்கும் இங்கும் அலைய நேரிடலாம். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். சில பொருள்களை கடனுக்கு வாங்கலாம்.

# எனது ம... எங்கேய... உயிருடன் இ...

பிரிட்டனின் பிரபலமான 'தி இன்டிப்பெண்டன்ட்' நா... செய்தியாளர் அன்ட்ரூ புன்கொம்ப் (Andrew Bunc... தமிழாக்கம் இது.



அவனது பெயர் அபி. அப்போது அவனுக்கு வயது ஆறு. உயிர்ப் பாதுகாப்புக்காகப் பதுங்கியிருந்த குழிக்கு அருகில் மிக உக்கிரமான எறிகணைத் தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோதே அபியை அவனது குடும்பத்தவர்கள் இறுதியாகப் பார்த்திருந்தனர்.

இந்தத் தாக்குதலில் அவனுடைய சகோதரிகள் மிக மோசமாகக் காயமடைந்தனர். அவனது தாயாரும்கூடக் காயமடைந்தார். இந்த நிலையில் அவன் தனது கையைத் தாயாரைச் சுற்றிப் போட்டவாறு "அம்மா" என மூன்று தடவைகள் முனகினான். அதன் பின்னர் அவன் பற்றிய தகவல் எதுவும் குடும்பத்தினருக்குத் தெரியாது.

இந்தச் சம்பவம் இரத்தத்தால் உறைந்து போயிருந்த சதுப்பு நிலப்பகுதியில் மே 2009இல் இடம்பெற்றிருந்தது. தம்மை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருந்த இராணுவத்தினரை எதிர்த்துச் சண்டையிட்ட போராளிகளுடன் பின்வாங்கிச் சென்ற அனைவரும் அந்தச் சதுப்பு நிலப் பகுதிக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். இந்த ஒடுங்கிய பகுதிக்குள் தமிழ்ப் போராளிகளுடன் 300,000 வரையிலான மக்களும் அகப்பட்டிருந்தனர்.

அதன் பின்னர், குடும்பத்தவர்கள் சைவக்குருமார்களிடமும் பல தொண்டர் அமைப்புக்களிடம் அபியைப் பற்றி விசாரித்தார்கள். ஆனால், "அவனுக்கு என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது. அவன் எனது கழுத்தைச் சுற்றி தனது கைகளைப் போட்டது மட்டும் தான் எனக்கு நினைவிருக்கிறது" என அபியினுடைய தாயார் கேதாரகௌரி மகேந்திரன் கூறுகிறார்.

இந்தக் குடும்பம் மட்டுமல்ல, வன்னிப் போரின் போது ஆயிரக்கணக்கானவர்களின் உறவுகள் காணாமல்போயிருக்கின்றனர். போர் நிறைவுக்கு வந்து இரண்டரை ஆண்டுகளின் பின்னர் பல நூற்றுக் கணக்கானவர்கள், கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கானவர்களின் கதை தற்போதும் காணாமற் போனவர்களாகவே நீள்கிறது. இவர்கள் தொடர்பாக எவரும் பதிலளிப்பதில்லை.

பல பத்தாண்டுகளாகத் துன்பங்களைச் சந்தித்த, வன்முறைகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இத்தகைய போர் வடுக்களைத் தம்மகத்தே சுமந்து கொண்டிருப்பதால் நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதில் இலங்கை அரசு தடைகளைச் சந்தித்து வருகின்றது.

700 இளையோர் உள்ளடங்கலாக 2,592 தமிழ் மக்கள் காணாமற் போயுள்ளனர் என்று இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. வவுனியாவைத் தளமாகக் கொண்டியங்கும் குடும்பங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் அமைப்பு சிறார்களைத் தேடிக் கண்டுபிடிப்பதையே நோக்காகக் கொண்டு செயற்படுகிறது.

இந்த அமைப்பானது தன்னிடம் கிடைக்கும் ஏனைய காணாமற்போனவர்கள் தொடர்பான விவரங்களை தொடர்புபட்ட அரச அதிகாரிகளிடம் கையளித்து வருகின்றது.

2009இன் இறுதிப் பகுதியில் இந்த அமைப்பு தனது பணியை ஆரம்பித்ததில் இருந்து காணாமற் போன 30 சிறார்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களது குடும்பங்களுடன் மீளச் சேர்த்துள்ளது. மேலும் 20 சிறார்கள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதைவிட வேறு காணாமற்போன 64 சிறார்களின் விவரங்கள் இந்த அமைப்பால் சேகரிக்கப்பட்டுள்ள தரவுத் தளத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகின்றது. காணாமற்போன சிறார்களில் 65 வீதமானவர்கள் புலிகளால் பலாத்காரமாகப் படையில் சேர்க்கப்பட்டவர்கள் என்று அவர்களது உறவினர்களின் வாக்குமூலங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

"இது மிகவும் இலகுவான காரியமல்ல. கடினமான பணி" என பிரிகேடியர் கல்கமுவ தெரிவித்துள்ளார். இவர் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி. அத்துடன் காணாமற்போன சிறார்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக இராணுவப் பதிவுகள், வைத்தியசாலைகள், சிறுவர் இல்லங்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மூன்று தகுதிகாண் கால பெண் பணியாளர்களுக்குப் பொறுப்பாகவும் இருக்கிறார்.

சில சிறுவர் இல்லங்கள் சிறார் கடத்தல்களில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் நிலவுகின்றது. "நாங்கள் எங்களால் இயன்றளவு இந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்கிறோம்" என கல்கமுவ மேலும் தெரிவித்தார்.

"எங்கள் எல்லோருக்கும் பெற்றோர்கள் அல்லது மகன்மார், மகள்மார் உண்டு. இதனால்தான் நாங்கள் இது தொடர்பான முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடிகின்றது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

அபியின் குடும்பம் போன்று பல குடும்பங்கள் தமது காணாமற் போன உறவுகளால் நிச்சயமற்ற வாழ்வைக் கொண்டுள்ளன. இவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல மறுக்கின்றனர். தமது பிள்ளைகள் இன்றி தம்மால் தமது இடங்களுக்குச் செல்லவோ அல்லது வேலைகள் செய்யவோ முடியாது என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறார்கள் காணாமல்போன பெரும்பாலான சம்பவங்கள் 2009 ஜனவரி முதல் மே வரையே இடம் பெற்றுள்ளன. அதாவது இலங்கை இராணுவம் புலிகளின் அரண்களை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருந்த வேளையிலேயே இவ்வாறான சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைமை மையங்கள் அமைந்திருந்த கிளிநொச்சி ஜனவரி 2009 இன் முற்பகுதியில் இராணுவத்தினர் வசம் வீழ்ந்த பின்னர் ஏ-35 நெடுஞ்சாலை வழியாக பெருமளவான மக்கள் கிழக்குப்புறமாக அதாவது முல்லைத்தீவை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

முல்லைத்தீவுப் பிரதேசத்திலேயே இறுதி உள்நாட்டுப் போர் இடம்பெற்றது. அங்கு செல்ல பத்திரிகையாளர்களுக்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்டது.

தற்போது கிளிநொச்சி மற்றும் இந்த வீதி வழியாகப் பயணிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் தமது நண்பர் ஒருவரையோ அல்லது உறவினரையோ இழந்திருப்பதையும் அல்லது யாராவது நெருங்கிய உறவினர்கள் காணாமற்போயுள்ள வடுக்களை சுமந்து கொண்டு செல்வதையும் காணலாம்.

கிளிநொச்சியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்திலிருந்த பொன்னுத்துரை சூரியகுமார் என்பவர், நடந்து முடிந்த உள்நாட்டுப் போரின்போது தனது குடும்பத்தவர்களுடன் கிழக்குப் புறமாக இடம் பெயர்ந்து அரசு அறிவித்த "போரற்ற வலயங்கள்" வரை சென்றதை நினைவுக்கு மீட்டுகிறார்.

இறுதியில் உள்நாட்டுப் போர் இடம்பெற்ற ஒடுங்கிய சதுப்பு நிலப்பகுதியில் அகப்பட்டுக் கொண்ட மக்கள் மீது இலங்கை அரச படைகளும் விடுதலைப் புலிகளும் எவ்வாறு தொடர்ச்சியாகத் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்பதை பலர் நேரில் பார்த்துள்ளனர்.

2009 மே 08 இல், தன்னுடன் கூடவிருந்த 13 பேரின் உயிர்கள் தனியொரு எறிகணையால் காவு கொள்ளப்பட்டதாகவும் தான் இதில் பலத்த காயங்களுக்கு உள்ளாகினார் எனவும் சூரியகுமார்

தெரிவித்...
மகனும்...
அத்து...
சூரியகு...
போயுள்...
களும் எ...
இந்தச் ...
கூடப் ப...
விட்டது...
சூரியகு...
ஏ-35...
பாலசிங்...
தனது கு...
தடவைக...
தார்.
அங்கு...
போயுள்ள...
ஓடினார்...
நாங்கள்...
என இவ்...
லிருந்து...
சிங்கம் ...
"என...
அனைத்...
அரச சார்...
கும் செ...
கொண்டி...
உதவி...
வும் கி...
உறவுக...
போன்றே...
போன உ...
கொள்ள...
டனிருப்...
அதிகாரி...
விடுத...
போர் நிற...
ராஜபக்ஷ...
தல்கள் ...
நிறைவுக்...
பட்டுள்ள...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் ...யாவது ... இருப்பான்

...ன்'' நாளேட்டில், அதன் ஆசிய பிராந்திய ...ew Buncombe) எழுதியுள்ள கட்டுரையின்



தெரிவித்தார். இதில் இவரது சகிந்தர் என்ற 08 வயது மகனும் கொல்லப்பட்டான்.

அத்துடன் அன்றைய நாளில் இருந்து 23 வயதான சூரியகுமாரனின் மைத்துனி ஒருவர் காணாமற் போயுள்ளார். ''அவரைப் பற்றிய எதுவித தகவல்களும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அங்கு நடந்த இந்தச் சம்பவத்தை உங்களால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. எல்லாமே அழிக்கப்பட்டு விட்டது. இது மிகவும் குழப்பகரமான நிலை'' என்று சூரியகுமாரன் தெரிவித்தார்.

ஏ-35 நெடுஞ்சாலைக்கு அருகில் வசிக்கும் பாலசிங்கம் என அழைக்கப்படும் விவசாயி ஒருவர், தனது குடும்பம் பொக்கணைப் பிரதேசம் வரை பல தடவைகள் இடம்பெயர்ந்து சென்றதாகத் தெரிவித்தார்.

அங்கு இவரது சகோதரன் ஒருவர் காணாமற் போயுள்ளார். ''எல்லா மக்களும் இராணுவத்தை நோக்கி ஓடினார்கள். எனது சகோதரன் அங்கிருக்கவில்லை. நாங்கள் இறந்த உடலங்களைத் தாண்டி ஓடினோம்'' என இவ்வாண்டு மே மாதத்தில் அரச முகாம் ஒன்றிலிருந்து விடுவிக்கப்பட்டு வந்த விவசாயியான பாலசிங்கம் தெரிவித்தார்.

''எனது சகோதரனை எல்லா இடமும் தேடினோம். அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், பொலிஸ், அரச சார்பற்ற நிறுவனங்கள் எனப் பல இடங்களிற்கும் சென்று வந்துள்ளோம். இப்போதும் தேடிக் கொண்டிருக்கிறோம்'' என்கிறார் பாலசிங்கம்.

உதவி அமைப்புக்களிடமிருந்து தகவல்கள் எதுவும் கிடைக்காததால் காணாமற்போனவர்களின் உறவுகள் உள்ளூர் குறிசொல்லிகள், சோதிடர்கள் போன்றோரைத் தேடிச் செல்கின்றனர். காணாமற் போன உறவுகள் சிலர் இறந்து போயுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாமல் தற்போதும் அவர்கள் உயிருடனிருப்பதாகவே இவர்கள் கருதுகின்றனர் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை 2006இல் அதிபர் மகிந்த ராஜபக்ஷவால் முறிக்கப்பட்டு இராணுவத் தாக்குதல்கள் ஆரம்பக்கப்பட்டதிலிருந்து இறுதி போர் நிறைவுக்கு வரும் வரை 100,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தொண்டு நிறுவனங்கள் மதிப்பிட்டுள்ளன.

கணவன்மார் காணாமற்போன இளம் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழர்களின் இதய பூமியான யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துமத குருவான சிவசண்முகானந்தக் குருக்கள் என்பவரைத் தேடி மக்கள் வருவதாகவும் அவரிடம் தமது ''காணாமற் போன'' பிள்ளைகள் மற்றும் உறவுகள் தொடர்பாகத் தகவல் தருமாறு கேட்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

''காணாமற்போனவர்களின் சாதகங்களுடன் மக்கள் எம்மிடம் வருகின்றனர். இந்தச் சாதகங்களின் ஊடாகக் குறிப்பட்ட நபர் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்பதைச் சொல்ல முடியும்'' என இந்து மதகுரு தெரிவித்தார்.

தமது அன்பிற்குரியவர்கள் தொடர்பாகத் தன்னிடம் சோதிடம் கேட்க வரும் மக்களிடம் தான் தவறாக எதையும் சொல்வதில்லை என்றும், சில சந்தர்ப்பங்களில் உண்மையில் குறிப்பட்ட நபர் உயிருடன் இல்லாவிடில் அதை அப்படியே அவர்களது உறவுகளிடம் சொல்லாது ''இவரைத் தேடிக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம்'' என்றே சொல்வது வழமை எனவும் சிவசண்முகானந்தக்குருக்கள் மேலும் தெளிவுபடுத்தினார்.

ஏ-35 வீதிக்கருகில் நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சத்தியானந்தராஜா என்கின்ற விவசாயி, தனது அண்ணி, மைத்துனி ஆகியோர் போரில் கொல்லப்பட்டனர் என்றார். அத்துடன் இவரது 21 வயதுடைய மருமகன் ஒருவர் காணாமற் போயுள்ளார்.

''அவரை இராணுவத்தினர் கொண்டு சென்றார்களா அல்லது புலிகள் கொண்டு சென்றனரா என்பது தொடர்பாக எமக்கு எதுவும் தெரியாது. தற்போது நாங்கள் மதகுரு ஒருவரைத் தொடர்பு கொண்டுள்ளோம். அத்துடன் சோதிடர்களையும் சென்று பார்த்துள்ளோம். அவர் உயிருடனிருப்பதாகவே அவர்கள் தெரிவிக்கின்றனர். அவர் தற்போது வராவிட்டாலும் மூன்று அல்லது நான்கு மாதங்களில் திரும்ப வருவார் என்று நம்புகிறோம்'' எனச் சத்தியானந்தராஜா தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கில் போருக்குப் பிந்திய பெரும் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதில் அரசு பல மில்லியன்களைச் செலவழித்துள்ளது. இதில் வீதி அபிவிருத்தித் திட்டங்கள், உடனடி வீடமைப்புத் திட்டங்கள், உணவு மற்றும் நிதி வ்ழங்கல் போன்றவை உள்ளடங்குகின்றன.

ஆனால், போர் வடுவாக மக்கள் மனதில் பதிந்து போயுள்ள காணாமற்போன உறவுகளின் நிலை போன்ற விடயங்கள் இந்த அபிவிருத்தி குறித்து மக்களை அக்கறை கொள்ளச் செய்யவில்லை. தற்போது புலிச் சந்தேகநபர்கள் எனத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களை அரசு வெளியிட வேண்டும் என மனித உரிமைகளுக்கான மாணவர் சங்கத்தின் தலைவர் நுவான் போபகே கேட்டுள்ளார்.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கி-மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது பல்வேறு விதமான விதி மீறல்கள் இடம்பெற்றுள்ளதை ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளது.

போரில் பல பத்தாயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போர் வலயமற்ற பகுதிகளில் அமைந்திருந்த மருத்துவமனைகள் மீது இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்கள் மிக மோசமான போர்க் குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையை ஏற்க இலங்கை அதிகாரிகள் மறுத்துள்ளனர். இது தொடர்பாக இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

போரில், புலிகளால் கொல்லப்பட்டவர்கள் உள்ளடங்கலாக 5,000 வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என விஜயசிங்க தெரிவித்துள்ளார்.


தற்போது நல்லிணக்கத்துக்கான முயற்சியாக அரசு பொருளாதார, சமூக அபிவிருத்திகள் உள்ளடங்கலாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். ''கூட்டுச் சமூகமாக வாழ அவர்களைத் தூண்ட வேண்டியுள்ளது'' எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது 9 வயதிருக்கக் கூடிய அபியின் குடும்பம் போன்ற பல குடும்பங்களால் தமது குழந்தையை மீளப்பெறப் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது. நம்பிக்கையுடன் காத்திருக்க மட்டுமே முடியும். ''எனது மகன் எங்கேயாவது உயிருடன் இருப்பான் என நான் நம்புகின்றேன்'' என அபியின் தாயார் உள்ளம் குமுறுகிறார். போரில் இருந்து மீண்டவர்களின் பலரது குரல்கள் இப்படித்தான் கேட்கின்றன.

*(நன்றி: புதினப் பலகை)*



## அடைவது பெரிதா இழப்பது பெரிதா



ஒரு மத்திய வர்க்க குடும்பத் தந்தையும் தாயும் தாங்கள் எவ்வளவோ சிரமப்பட்டுப் பலகாலம் சேமித்த பணம், நகை, பொருள்கள் எல்லாவற்றையும் மகள் திருமணத்துக்காக எவ்வளவு சந்தோஷமாக இழக்கிறார்கள். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த வீட்டையும் காட்டையும் கூட மாப்பிள்ளைப் பிடிக்கப் போவதற்காக எத்தனையோ பெற்றோர்கள் விற்பதில்லையா? பிறர் பொருட்டு இழக்கவும் துறக்கவும் தயாராக இருக்கும் துறவுள்ளம் அற்றவர்கள் இல்லறத்துக்கு இலாயக்கற்றவர்கள்.

கிருஷ்ணன் கதைகளில் ஓர் அருமையான கதை. கண்ணனுக்குத் தலைவலியாம். மருந்துபோட்டு பாமாவும் ருக்மணியும் முயன்றும் தலைவலி தீரவில்லையாம். ''என்ன மருந்து போட்டால் தலைவலி தீரும்?'' என்று கண்ணனைக் கேட்டால், அவன் சொன்ன மருந்து பலருக்குத் தலைவலி தருவதாக அமைந்துவிட்டது. என்ன மருந்து? ''என்மீது உண்மையான அன்பு உடையவர் ஒருவருடைய பாதத்தில் அப்பி உள்ள மண்ணைக் குழைத்து தலைக்குப் பற்றுப் போட்டால் தலைவலி பறந்துவிடும்'' என்றான் கண்ணன். அதில் ஒரு சிக்கல்.

தமது காலடி மண், கடவுளாகிய கண்ணன் தலைமீது பட்டால் ஏழு நரகத்திலும் கீழான நரகம் போக வேண்டியிருக்கும். முனிவர்களும் ரிஷிகளும் அதை நினைத்துப் பயந்தனர். பாமா, ருக்மணிக்கோ நரகம் பெரிய விடயமல்ல... காலடி மண் போட்டும் கண்ணன் தலை வலி தீரவில்லை என்றால் உண்மையான அன்பு தங்களுக்கு இல்லை என்று ஆகிவிடுமே என்று உள்ளூர அச்சம். யாரும் காலடி மண் தரத் தயார் இல்லை! கண்ணன் தலைவலி குறையவே இல்லை.

செய்தி பரவியது நந்த கோகுலத்துக்கு. அவ்வளவு தான்; சேலைத் தலைப்பைக் கீழே விரித்துத் திகு திகு என்று அதன் மேல் குதித்து அதில் படிந்த கால் மண்ணைக் கட்டி எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள் ஒரு கோபிகை. ''நான் எந்த நரகம் போனால் என்ன?; என் கண்ணன் தலைவலி போனால் சரி'' என்பதே அவள் தீர்மானம். தன்னைப் பற்றிய கவலை இல்லாமல் தன்னை இழக்கும் அளவது தூய அன்பே கண்ணனைக் கவர்ந்தது. அவளே ராதை என்று ஒரு கதை உண்டு. மற்றவர்களுக்காகத் தம்மை இழத்தலே உண்மையான அன்பு.

இன்றைக்குப் பல ஆண்களும் பெண்களும் பல்வேறு காரணங்களால் திருமணமே செய்யாது இறுதிவரை தனியாக வாழத் தயாராகிவிட்டனர். நகர்ப்புறங்களில் சமூக அமைப்பு இதற்கு ஆதரவாகவே பல வசதிகளைச் செய்து கொடுக்கிறது. உண்மையான அன்பு போன்றவை திருமண பந்தம் அற்ற வாழ்வியலை வலுப்படுத்தும் வசதிகள். இவற்றைத் தவறு என்று கூறமுடியாது குடும்பத்தில் அடைபட்டு புழுங்கிச் சாகும் மூட்டாள் தனத்தை விட தனித்து வாழும் முடிவு நேர்மையானது, கண்ணியமானது. ஆனால் அது மீள முடியாத சோகம், மற்றும் வெறுமை ஆகியவற்றில் முடியாதபடி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இல்லறத்தில் இருப்பதென்றால் தனக்கென்று வாழமுடியாது என்பதைக் குடும்பத்தார் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

அசோக வனத்தில் சிறையிருக்கும் சீதையின் சோகத்தைப் படம்பிடிக்கும் கம்பர் தான் இப்படி கஷ்டப்பட நேருகிறதே என்று வருந்துவதைவிடவும் தன் துணைவர் இராமர் இப்போது எப்படி எல்லாம் கஷ்டப்படுகிறாரோ என்று வருந்துவதாகச் சித்திரிக்கிறார்.

''அருந்து மெல்லடகு ஆர் இட அருந்தும்'' என்று என்றுபடி அவருக்கு யார் உணவிடுவார்கள் என்று இராமனது வயிற்றுப்பசி பற்றிச் சீதை கவலைப்படுவதாகக் கம்பர் கூறுகிறார். இது அல்லவா அன்பு!

காஞ்சிபுரம் தல வரலாற்றில் ஒரு அழகான பகுதி. காமாட்சி அங்கு மண்ணால் சிவலிங்கம் செய்து பாலாற்றங்கரையில் தன் கணவனை, ஏகாம்பரேஸ்வரரைப் பூஜிக்கிறார். பாலாற்றில் வெள்ளம் பெருகி மணலால் ஆன சிவனை அழிக்க வருகிறது. காமாட்சி தான் தப்பியோட வில்லை! மாறாக மணல் திருமேனி கரையாதபடி தன் இரு மார்பும் பொருந்த இரு கரத்தாலும் இறுக்கித் தழுவினாராம். சிவபெருமானின் மணல் மேனியில், அச்சாக, அம்பிகை திருமார்பும், வளையலும் தழும்பாகப் பதிந்தது என்பதை முலைத்தழும்பர், வளைத்தழும்பர் என்றே குறிப்பார்கள். தெய்வங்கள் கூட காதல் வாழ்வில் துணைக்காக வாழ்வதே வாழ்க்கை என்று புரிய வைத்துள்ளன என்பதை விளக்குவதே எனது நோக்கம்.

**சுகி. சிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ்ப் பெருவிழாவுக்குப் பேராசிரியர் க.தேவராஜா, அதிபர் அ.அகிலதாஸ், தமிழ் மன்றத் தலைவர் கௌ.சித்தாந்தன், பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன், பிரதி அதிபர் திருமதி கே.கிருஷ்ணபிள்ளை ஆகிய விருந்தினர்கள் ஆலயத்திலிருந்து அழைத்துச் செல்லப்படுகின்றனர். (ம)

# கல்வியும் ஒழுக்கமும் ஒருங்கே இருந்தால் சாம்பல் மேட்டிலிருந்தும் மீண்டு எழ முடியும்

## சாவகச்சேரி மாவட்ட நீதிபதி தெரிவிப்பு

தென்மராட்சி, நவ.11

இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள். அந்த தலைவர்களை உருவாக்குகின்ற மாபெரும் பொறுப்பு ஆசிரியர் சமூகத்திடமே உள்ளது.

முன்னாள் இந்திய ஜனாதிபதியும் தலை சிறந்த அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம் "உலகில் மிகவும் உன்னதமான தொழில் ஆசிரியத் தொழில்" எனப் பாராட்டிப் பேசியுள்ளார்.

" ஒழுக்கம் விழுப்பம் தரலாம் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு அத்தகைய ஒழுக்கத்தை மாணவர்களுக்கு கற்பித்து கல்வியில் மேன்மையுறச் செய்வது ஆசிரியர்களது பொறுப்பாகும். ஆசிரிய சமூகம் தமது தொழிலின் மேன்மையை எப்போதும் பேணிக்காத்து வர வேண்டும். கல்வியும் ஒழுக்கமும் எமது இரு கண்களாக இருந்தால் பீனிக்ஸ் பறவையாக சாம்பல் மேட்டிலிருந்து நாம் மீண்டெழ முடியும்.

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் இ. இரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் நீதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்:

கடந்த காலங்களில் எமது சமூகத்தில் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் புகழ்பெற்ற சட்டவல்லுநர்களும் நீதிபதிகளும் இருந்தார்கள்.

எதிர்காலத்தில் அத்தகைய சட்ட வல்லுநர்களும் நீதிபதிகளும் உருவாவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது எனது கடமைகளில் ஒன்றாக நான் கருதுகிறேன்.

இனிவரும் காலம் இருண்டதாக இருக்காது ஒளிமயமானதாக இருக்கும். அதற்கான அனைத்து அம்சங்களையும் இந்த மாணவச் செல்வங்களிடம் நான் காண்கின்றேன். சிறு வயதில் ஊட்டப்படுகின்ற கல்வியும் ஒழுக்கப் பண்புகளும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பெறுகின்ற கல்வியை விடவும் மிகவும் முக்கியமானதாகும்.

கற்றல் செயற்பாடு சுதந்திரமான சிந்தனைக்கும் கற்பனைக்கும் இடமளிப்பதாக இருக்க வேண்டும். அத்தகைய கற்றல் வழிமுறையை மாணவர்களிடம் உருவாக்குவது ஆசிரியர்களது கடமை. இதன்மூலம் எதனையும் உருவாக்கும் திறனுடைய விஞ்ஞானிகளும் கல்வியாளர்களும் எதிர்காலத்தில் உருவாக முடியும்.

ஆசிரியர்கள் அறிவை மட்டும் புகட்டுபவர்களல்ல உயர்ந்த குறிக்கோளுக்காக கனவுகளுக்காக மாணவர்களின் வாழ்க்கையை செம்மைப்படுத்தும் பணியையும் செய்பவர்கள் ஆவார். அத்தகைய பணிமூலம் மாணவர்களின் எதிர்காலம் சிறப்படைய நான் பாராட்டி வாழ்த்துகின்றேன். - என்றார். (ம-207)

# பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதில் முதியோர்களின் பங்களிப்பு அவசியம்

## துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,நவ.11

பிள்ளைகளை நல்வழிப்படுத்த முதியோர்களின் பங்களிப்பும் அவசியமாக உள்ளது.

ஏனெனில் முதியோர்கள் வாழ்க்கையை கற்றுத் தேர்ந்தவர்கள் இவர்களின் வழிகாட்டல்களை பிள்ளைகள் செவிமடுத்தால் சிறந்த பயனடைவார்கள்

இவ்வாறு தெரிவித்தார் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மேகநாதன்.

ஒட்டுசுட்டான் பிரதேச சிறுவர் முதியோர் மாற்று வலுவுடையோர் தின நிகழ்வு அண்மையில் பிரதேசசெயலகத்தில் நடைபெற்றது.

இதில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரைநிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:

சிறுவர்கள் எதிர்கால சந்ததியினர் என்பதால் அவர்களை சிறந்த முறையில் வழிகாட்ட வேண்டியது அவசியமாகும்.

ஒவ்வொரு வீடுகளிலும் உள்ள முதியோர்கள் சிறுவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருப்பார்கள். இருக்க வேண்டும்.

முதியோர்களிடம் சிறுவர்கள் பழைய வரலாறுகளையும், சிறந்த நற்பழக்கவழக்கங்களையும் இலகுவில் அறிந்து கொள்ள முடியும்.

ஏனெனில் முதியோர்களின் கடந்தகால அனுபவங்களை கற்றுத் தேர்ந்து இருப்பதால் அவர்களிடம் இருந்து பெறப்படும் ஒவ்வொரு தகவலும் எம்மை வழிகாட்டுவதாக அமையும்.

இதனை சமுதாயம் உணர வேண்டும். முதியோர்களை முதியோர் இல்லத்தில் முடுக்குவதால் அவர்களின் மனநலம் பாதிப்படைவதுடன் பிள்ளைகளின் சிறந்த வழிகாட்டிகளையும் இழந்து விடுகின்றோம். அத்துடன் மாற்றுவலுவுடையோர்களையும் மதித்து நடக்க வேண்டும். - என்றார். (ம-500)

# இலத்திரனியல் சாதனங்களின் வருகை வாசிப்புப் பழக்கத்தை மழுங்கடிக்கிறது

## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வடமராட்சி, நவ.11

இன்றைய கல்வி அமைப்பு வாசிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தபோதும் முப்பரிமான மின்னியல் சாதனங்களின் வருகையால் மாணவர்கள் வாசிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

இது மாணவர்களுக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்கும் பொருந்தும்.

இவ்வாறு நெல்லை லதாங்கியின் 'மீண்டும் வசந்தம்' சிறுகதைத் தொகுப்பு நூல்வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாகாண மேலதிக மாகாணப் பணிப்பாளர் மு.ராதாகிருஷ்ணன் கூறினார்.

கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் அதிபர் சு.ஜெயானந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

முப்பரிமான இலத்திரனியல்களான தொலைக்காட்சி, திரைப்படம், கையடக்கத் தொலைபேசி போன்றவற்றின் வருகையால் மாணவர்கள் மட்டுமன்றி பெரியவர்களும் இவற்றில் மூழ்கி கற்பனை வளத்தை இழந்து விடுகின்றனர். வாசிப்பதன் மூலம் அதன் தொடர்பில் கற்பனை எழுகின்றது. அக்கற்பனை அவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கு ஏதுவாகின்றது.

முப்பரிமானங்கள் மூலம் கற்பனைக்கு இடமில்லாது முழுவதுமே கட்புலக் காட்சியாகக் காட்டப்படுவதால் கற்பனை செய்வதற்கான வாய்ப்பு அறவே இல்லாது போகின்றது.

கற்பனை வளம் இருந்தால் தான் புத்தாக்கம் உருவாக முடியும். அது இல்லாத போது புத்தாக்கத்துக்கு இடமே இல்லை. எனவே இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் படைப்பாக்கத் திறன் கொண்டவர்களாக வளர்க்க வேண்டுமாயின் நல்ல நூல்களை வாசிக்கக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

இதற்கு அவர்கள் ஒரு நாளில் அரை மணி நேரமாவது ஒதுக்க வேண்டும். தமது பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். இத்தகைய ஒரு பின்புலத்தில் வாசிப்பதற்கு தூண்டுதலை ஏற்படுத்தக் கூடிய வகையிலான மொழி வளத்தைக் கையாளும் கற்பனைத் திறன் கொண்ட கதைகளை உருவாக்கும் நெல்லை லதாங்கியின் எழுத்தை நோக்க வேண்டும்.-என்றார். (ம-236)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவரான தி.நிலாபவன் 153 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளார். (ம)

## இளைப்பாறிய செயலாளருக்கு பாராட்டு

தீவகப் பிரதேசத்தின் அபிவிருத்தி-இலக்கு குறித்து தமது திட்ட முன்வரைபுகளை முன்னிறுத்தி செயற்பட்டவர் இளைப்பாறிய வேலணை பிரதேசசபை செயலாளர் கே.தவராசா.

இதன் மூலம் குறுகிய காலத்தில் மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி ,நயினாதீவு பிரதேசங்கள் தமது பிரதேச அபிவிருத்திகளை அடைய முடிந்தது. இவ்வாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

வேலணை பிரதேச சபை யின் நீண்டகாலம் பிரதேச சபை செயலாளராக கடமையாற்றிய கே.தவராசா சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவரது சேவையை பாராட்டி வேலணை பிரதேச சபை அலுவலர்கள், ஊழியர் மற்றும் தலைவர் ஆகியோர் இணைந்து தங்கப் பதக்கம் அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் தெரிவிக்கையில்:

இதில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு என்பன கடந்த கால போரால் மிகவும் பாதிக்கப்பட்டன.

இப்பிரதேச அபிவிருத்திக்கான செயற்பாடுகளை இனி வரும் காலங்களில் துரிதமாக முன்னெடுத்தால் இப்பிரதேசம் உண்மையான அபிவிருத்தி பெறும்.-என்றார்.

இதில் ஏற்புரையை இளைப்பாறிய வேலணை பிரதேச சபை செயலாளர் கே.தவராசா நிகழ்த்தினார். (ம-302)

## நியமனம்

வலி.வடக்கு, நவ.11

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் அதிபராக புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் இரா. ஜெயக்குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதே வேளை, மயிலணி சைவ மகாவித்தியாலத்தின் அதிபராக இருந்த க.சிவனேஸ்பரன் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ம-86)

## நிர்வாகிகள் தெரிவு

மன்னார் மூர் வீதி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவு அண்மையில் இடம்பெற்றது. தலைவர் கே.எம். எம்.ரஸ்லான், செயலாளர் எம்.ஐ.எம்.ஜவாத், பொருளாளர் ஏ.எஸ்.எம்.வைசூல்கர்னி, உப தலைவர் என்.தயாபரன், உப செயலாளர் ஏ.எஸ்.எம்.பஸ்மி, நிர்வாக உறுப்பினர்களாக எஸ். சபிர், எம்.ஆர்.எம்.சீவார், எம்.ஜே. எம்.ஜனுபா, எஸ்.எச்.எம். இல்காம், எம்.வை.எம்.இயாஸ், எஸ். எச்.எம்.சபி, எஸ்.ஏ.எம். அமியாஸ், ஏ.ஜெ.எம்.றிஸான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்தால்தான் தெரியுமா சுடலையின் அருமை?

ஊருக்கு ஒரு மயானம் இருப்பதால் அந்த மயானங்களில் இறந்த உடல்களைத் தகனம் செய்து வருகின்றோம். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு மயானம் இருக்கிறது. அப்படிப்பட்ட அந்த மயானத்தை சிறந்த முறையில் வைத்திருப்பது அவசியம். அதாவது இறந்த உடல்களைத் தகனம் செய்யக் கூடிய முறையில் மயானம் அமைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஊர் மக்கள் இறந்த உடல்களை எதுவித சிரமமும் இல்லாமல் தகனம் செய்யமுடியும். ஆனால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பல மயானங்கள் புனரமைப்புச் செய்யப்படாமல் அங்கு செல்லக்கூடிய பாதையும் கூடச் சீரில்லாமல் இருக்கிறது. மயானங்களில் இறந்த ஒருவரின் உடலைத் தகனம் செய்யப் போகும் போதுதான் எல்லோருக்கும் பிரச்சினை தெரிய வருகிறது. அதாவது பல சிரமங்களின் மத்தியில் இறந்த உடலைத் தகனம் செய்யும் போதுதான் மயானத்தின் புனரமைப்பின் முக்கியம் தெரிகிறது. பின்னர் வழமை போன்று மறந்து போகிறார்கள்; அடுத்த சாவு விழும் வரை. (இதைத்தான் சுடலை ஞானம் என்கிறார்களோ)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் போர் இடம்பெற்ற காலத்தில் இறந்த உடல்களை மயானத்துக்குக் கொண்டு செல்ல முடியாத காரணத்தால் வீட்டு வளவுக்குள்ளேயே பலரை அடக்கம் செய்த சம்பவங்களை நாங்கள் பார்த்திருக்கின்றோம். அகோரமான போர் இடம்பெற்றுக் கொண்டிருந்ததால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கிறது. இன்று போர் இல்லாத சூழலிலும் இறந்த உடல்களை மயான்த்துக்கு கொண்டு சென்று தகனம் செய்ய பல சிரமங்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் பல மயானங்களை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து அந்த மயானங்களில் இறந்த உடல்களைத் தகனம் செய்ய விடாது தடுத்தும் இருந்தனர். இதனால் அந்த ஊர் மக்கள் பக்கத்து ஊர்களில் உள்ள மயானங்களில் இறந்த உடல்களைத் தகனம் செய்தனர். போர் முடிவடைந்ததும் பல மயானங்கள் மக்களின் பாவனைக்கு மீண்டும் விடப்பட்டுள்ளன. அந்த வகையில் கோப்பாய் கைதடி வீதியில் உள்ள ஒரு மயானமும் அந்தப் பகுதி மக்களின் இறந்த உடல்களை தகனம் செய்ய விடாமல் இராணுவம் தடுத்துவைத்திருந்து இப்பொழுது மீண்டும் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

என்ன சண்முகம் மயானங்களைப் பற்றி ஏதோ எல்லாம் கதை விடுகுது என்று பார்க்கிறியளா?கோப்பாய்-கைதடி வீதியில் உள்ள மயானத்தின் நிலையை சொல்லுறன் கேளுங்கோ. கடந்த 3ஆம் திகதி வியாழக்கிழமை கோப்பாயில் உள்ள எனக்குத் தெரிந்த ஒருவரின் மரண வீட்டுக்குச் சென்றிருந்தேன். நான் அந்த மரண வீட்டுக்குப் போகும்போது நேரம் நண்பகல் 12 ஆகிவிட்டது. அங்கே அவர்கள் இறந்தவரின் உடலை ஒரு வண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு கோப்பாய்- கைதடி வீதியிலுள்ள மயானத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். இறந்தவர் கோப்பாய் பாடசாலை ஒன்றின் அதிபர். சரி நானும் அந்த இறந்த அதிபரின் உடலை தகனம் செய்வதற்காக மயானத்துக்கு கொண்டு செல்லும் ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டேன்.

வண்டியில் வைத்து அந்த அதிபரின் உடலினை அந்தப் பகுதி இளைஞர்கள் தள்ளிக்கொண்டு மயானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். நானும் அவர்கள் பின்னே சென்று கொண்டிருந்தேன். கோப்பாய் சந்தியை தாண்டிச் செல்லும் போது நாற்றம் மூக்கைத் துளைத்தது. என்ன நாறுது என்று வீதியின் அக்கம் பக்கம் பார்ததேன். ஏதோ எல்லாம் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு இருந்தன. அந்தக் கழிவுப் பொருள்களில் இருந்து வரும் நாற்றம்தான் மூக்கை துளைத்தது. எனக்குப் பக்கத்தில் அதே ஊர்வலத்தில் முதியவர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவரிடம் என்ன அண்ணே நாறுதென்று கேட்டேன். அவரோ ''வேறு என்ன எங்கட சனத்தின்ர கழிவுப் பொருள்கள்தான்'' என்றார். ''இங்கையா கொண்டு வந்துகொட்டுவாங்கள்? என்றேன். உந்தக் கழிவுப்பொருள்களை எடுப்பவர்கள் தான் இங்க வந்து கொட்டுகிறார்கள் என்றார்.

அட! டெங்கு ஒழிப்புத் திட்டம் என்று சொல்லித் தொடங்கிய திட்டம் இதுவா என எனக்குள்ளே கேட்டுக்கொண்டு மயானத்தை நோக்கிச் சென்றேன். மயானமும் வந்தது. வீதியில் இருந்து இறங்கி அந்த மயானத்துக்குச் செல்லும் பாதை சேறும் சகதியுமாய் இருந்தது. இறந்த உடலை தாங்கிச் செல்லும் வண்டியை ஒருவாறு கஷ்ரப்பட்டு தள்ளிக்கொண்டு தகனம் செய்யுமிடத்துக்குக் கொண்டு சென்றனர். இந்த மயானம் தானோ அண்மையில் பிரதேசசபையால் புனரமைக்கப்பட்டது என்று அங்கே வந்த பலரிடம் கேட்டேன். அதற்கு அவர்களோ மயான புனரமைப்பையே ஒழுங்காக செய்யமுடியாத பிரதேச சபை எவ்வாறு பெரிய அபிவிருத்தி வேலைகளை செய்யப் போகிறது என்றார்கள்.

அந்த அதிபரின் இறுதிக்கிரியைக்கு வந்த ஆசிரியர்கள், பொதுமக்கள் உட்படப் பலரும் இந்தப் பதிலைத் தெரிவித்தனர். அந்த மயானம் தாழ்வான நிலப்பரப்பில் உள்ளது. எதிர்வரும் நாள்களில் பெய்யும் கடும் மழையில் மூழ்கி இருக்கப் போகிறது. அச்சுவேலிப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் ஆசிரியர் ஒருவர் என்னைப் பார்த்துச் சொன்னார், கார்த்திகை, மார்கழி மாதங்களில் கோப்பாய் பிரதேசத்தில் யாரும் இறந்தால் அவர்களை இந்த மயானத்துக்கு தகனம் செய்யக் கொண்டுவரும் போது மயானத்தில் முழங்காலுக்கு மேலே தண்ணீர் இருக்குமாம். அந்தத் தண்ணீருக்குள்ளேயே இறந்த உடலைத் தாங்கிக்கொண்டும் நீந்திக் கொண்டும் தான் தகனம் செய்ய முடிகிறது- என்றார்.

அப்ப பிரதேச சபை புனரமைப்புச் செய்தது என்று சொன்னார்களே என்று அவரிடம் கேட்க ''அதோ அந்தக் கட்டடத்




துக்கு மேலே நான்கு சீற் புதிதாகப் போட்டிருக்கே அதுதான் புனரமைப்பு'' என்று சொன்னார். அந்த அதிபரின் உடல் தகனத்துக்கு வந்த அனைவரினதும் கோரிக்கை அந்த மயானத்தை புனரமைப்புச் செய்து தரும்படியாக இருந்தது. கோப்பாய் கைதடி வீதியில் உள்ள மயானத்தைச் சம்பந்தப்பட்டவர்கள் புனரமைப்புச் செய்து தராதவிடத்து இனிவரும் காலங்களில் வேறு பகுதியில் உள்ள மயானத்தில்தான் கோப்பாய் பகுதி மக்கள் இறந்தவர்களின் உடல்களைக் கொண்டு சென்று தகனம் செய்யக் கூடிய நிலமை வரும் என்றார்கள்.

இந்த நேரத்தில் அதிபரின் உடல் தீயுடன் சங்கமமானது. அவரின் மகனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு மயானத்தை விட்டு விலகினேன். வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன். கோப்பாய் சந்தி வரும் போதுதான் அந்த நாற்றம் இல்லாமல் போனது. பார்த்தியளா கோப்பாய் - கைதடி வீதியில் உள்ள மயானத்தின் நிலமையை. சம்பந்தப்பட்டவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். ✱

## நிர்வாகக் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.11

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் நிர்வாக கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.ஊடகவளங்கள் பயிற்சி மையத்தில் இடம்பெறும்.

அனைத்து நிர்வாக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு தலைவர் செ.கதிர்காமத் தம்பி கேட்டுள்ளார்.

(ம)

## மேய்ச்சல் மாடுகள் திருட்டுப் போகும் நிலை

தென்மராட்சி,நவ.11

மேய்ச்சலுக்காக வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்த பசு மாட்டை திருட முயற்சித்தவர், மாட்டின் உரிமையாளரைக் கண்டதும் ஓடித் தப்பிய சம்பவம் கெருடாவிலில் இடம்பெற்றுள்ளது.

மாட்டை வீட்டுக்குக் கொண்டு செல்வதற்காக வந்த மாட்டின் உரிமையாளர் அதனைக் காணாததால் தேடிச் சென்ற போது வீதியில் ஒருவர் மாட்டை ஓட்டிச் செல்வதைக் கண்டு துரத்திச் சென்றார்.

இதனை அவதானித்த திருடன் மாட்டை கைவிட்டு சைக்கிளில் ஏறி தப்பிச் சென்றுள்ளான்.

இதேவேளை இதே பகுதியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த மற்றொரு பசு மாட்டை இதே திருடன் கடத்திச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ம-207)

## பெயர் வளைவு அமைப்பு

வடமராட்சி,நவ.11

கரவெட்டி அஞ்சல் நிலையத்திற்கு 65 ஆயிரம் ரூபா செலவில் பெயர் வளைவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அஞ்சல் தினத்தையொட்டி கரவெட்டிப் பிரதேச அபிவிருத்தி ஒன்றியம் இப்பெயர் வளைவை அன்பளிப்பாக கரவெட்டி அஞ்சல் நிலையத்துக்கு வழங்கியது.

(ம-236)

Genesis Academy Lanka (pvt) Ltd

A BOI APPROVED COMPANY

National Franchisee For UCMAS Mental Arithmetic SriLanka

UCMAS அபாகஸ் மனக் கணிதப் பயிற்சி நிறுவனத்தின்
யாழ்.மாவட்ட போட்டிப் பரீட்சையும், பரிசளிப்பு வைபவமும்

திகதி:
12.11.2011
(சனிக்கிழமை)

இடம்:
குமாரசாமி மண்டபம்,
யாழ்.இந்துக் கல்லூரி

காலை நிகழ்வுகள் - காலை 9.00
(போட்டிப் பரீட்சை)

பிரதம விருந்தினர்:
திரு.A.S.சற்குணராசா
(DDE (முகாமை) - யாழ். வலயம்)

கௌரவ விருந்தினர்கள்:
1. திரு.T.ஜோன் குயின்ரஸ்
(DDE(திட்டமிடல்) தீவக வலயம்)
2. திரு.T.சிறீஸ்கந்தராசா
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி வலயம்)
3. திரு.S.நிமலன் (உப அதிபர் - யாழ். இந்துக் கல்லூரி)
4. திரு.B.ராஜசேகரன்
(ஆசிரிய ஆலோசகர் - கணிதம் -யாழ். வலயம்)

மாலை நிகழ்வுகள் - பி.ப.1.45 (பரிசளிப்பு வைபவம்)

பிரதம விருந்தினர்: திரு. பரமானந்தர் விக்னேஸ்வரன்
(மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வடமாகாணம்)

கௌரவ விருந்தினர்கள்:
1. திரு.V.செல்வராஜா (D.E. வடமராட்சி வலயம்)
2. திரு.K. பிரேமகாந்தன் (D.E. -தென்மராட்சி வலயம்)
3. திரு.G.V. ராதாகிருஷ்ணன் (D.E. தீவக வலயம்)
4. திரு.S. சுந்தரசிவம் (DDE (நிர்வாகம்) வலிகாம வலயம்)
5. திரு.K. வரதராஜமூர்த்தி
(DDE(நிர்வாகம்) தென்மராட்சி வலயம்)
6. திரு.P. குகதாசன்
(ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர்- யாழ். வலயம்)

கல்விசார் சமூகத்தினர், அனைத்து UCMAS பழைய மாணவர்கள்.
பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

இலங்கை UCMAS நிறுவன பணிப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(சி-5673)(1,6,25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 நவம்பர் 2011 வெள்ளிக்கிழமை

# மரண அறிவித்தல்



## திருமதி குணவதி நடராசா

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், வேலணை 8 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குணவதி நடராசா கடந்த (07.11.2011) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - இராசமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா (குருந்தர்) -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நடராசாவின் (ஓய்வுபெற்ற இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன கணக்காளர்) அன்பு மனைவியும், துரைராசா (யாழ்ப்பாணம்), உமாராணி (கனடா), நாகேஸ்வரி ( அனலைதீவு), இரஞ்சிதமலர் (அனலைதீவு), சுந்தரலிங்கம் (கனடா), தனபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், விமல் (நோர்வே), குபேரன் (கனடா), மோகன் (இலண்டன்), நவதாரணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், தேவகி ( நோர்வே),செல்வி (கனடா), பிரதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, கார்த்திகேசு, இராசம்மா,சண்முகம் மற்றும் செல்வநாயகம், காலஞ்சென்றவர்களான நாகராசா, இராசலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பதுஜா, வினிகா, லஷ்கா, அஷயா, ஜானுஜா, விஸ்னுஜா,லயா, தனிஷ் ஆகியோரின் அருமைப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (13.11.2011 )ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

203, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
கனடா 001 4164677858 (10269) (3-6-7)

தகவல்:
துரைராசா (சகோதரன்),
தேவன் (பெறாமகன்).

# கலைத்திறன் சஞ்சிகை ஆசிரியர் காலமானார்

யாழ்ப்பாணம், நவ.11

கலைத்திறன் நகைச்சுவை சஞ்சிகையின் ஆசிரியர் திக்கவயல் சி.தர்மகுலசிங்கம் (64 வயது) மட்டக்களப்பில் கடந்த வாரம் காலமானார்.

அல்வாய் திக்கத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை தர்மகுலசிங்கம் சிரித்திரன் நகைச்சுவை மாதஇதழில் சிந்திக்கக்கூடிய நகைச்சுவைத் துணுக்குகள் உட்பட பல்வேறு ஆக்கங்களை எழுதி வந்தார். தொடர்ந்து ஈழநாடு, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் முறையே உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

பின்னர் சாலைக் கட்டுப்பாட்டு அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அவர் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வந்த கலைத்திறன் சஞ்சிகையை மட்டக்களப்பில் ஆரம்பித்து பல்லாண்டு காலமாக நடத்தி வந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் நடைபெற்ற கலாசார விழாவில் இவருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. 1990 களுக்குப் பின்னர் இறக்கும்வரை இவர் மட்டக்களப்பில் அரசடிப் பகுதியில் வசித்துவந்தார். (வ-236)

# ஓட்டோவிலிருந்து குதித்தார் தாய்; பரிதாபமாக உயிரிழந்தது குழந்தை

பதுளை, பண்டாரவளை பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவிலிருந்து தாய் ஒருவர் தனது 2 வயதுக் குழந்தையுடன் குதித்ததில் குறித்த குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கிச் சென்ற ஓட்டோவில் தனது இரண்டு வயதுக் குழந்தையோடு பயணித்த தாய் இடையில் இறங்குவதற்கு ஓட்டோவை நிறுத்துமாறு கூறியுள்ளார்.

ஆனால், குறித்த தாயின் சொல்லைக் கேட்காமல் ஓட்டோச் சாரதி நிறுத்தாமல் சென்றுள்ளார்.

இதன்போது குறித்த தாய் 2 வயதுக் குழந்தையுடன் ஓட்டோவிலிருந்து குதித்ததில் இருவரும் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தனர்.

உடனே இவ்விருவரும் பதுளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவேளை குழந்தை உயிரிழந்துள்ளது. தாய் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த ஓட்டோவில் 8 வயதுச் சிறுமி ஒருவரும் பயணம் செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஓட்டோச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து பதுளை பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர். (சி)

# ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்

யாழ்.பொலிஸாரால் வெவ்வேறு நாள்களில் மீட்கப்பட்ட சைக்கிள் மற்றும் சிறுதொகைப் பணமும் கைப்பையும் யாழ். நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் நீதிமன்றுக்கு வந்து தகுந்த ஆதாரம் காட்டி இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.நீதிமன்றப் பதிவாளர் ச.வன்னியசிங்கன் கேட்டுள்ளார்.

மூன்று மாதகாலத்தினுள் இவை உரிமை கோரப்படாதவிடத்து இவை அரசுடமையாக்கப்படும் எனவும் பதிவாளர் தெரிவித்தார். (ம-4)

# கண்ணீர் அஞ்சலி



அகல் பாதுகாப்பு சேவை இயக்குநர்
அமரர் துரையப்பா ஜெயரட்ணம்
அவர்கள் இறைபதம்
அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அகல் பாதுகாப்பு சேவை
உத்தியோகத்தர்கள்.
(10272) (2-6-7)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 27.07.1955
விண்ணில்: 03.11.2009
திதி: பிரதமை 11.11.2011

திருமதி
உருத்திராதேவி
(பவானி)
பத்மசீலன்
கொக்குவில்

தாயினைப் போல தெய்வம்
தாணியில் இல்லையென்று
நேயமிக்குள்ளோர்
சொன்ன நியதியும் இதுதானென்றோ
செய்கனைப் பாதுகாத்த
சிறப்புகள் யாவும்
செய்த எம் தெய்வத்தின் நீங்காத
நினைவலைகளுடன்...
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மாத்தனையான் திருவடிகளைப்
பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமகன், சகோதரன்,
பேரப்பிள்ளைகள்.
மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(சி-5707)(1,6,7)

# மரண அறிவித்தல்

## நல்லதம்பி குமரேசு

(ஓய்வுபெற்ற ஊழியர்
யாழ். போதனா வைத்தியசாலை)



புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் தற்பொழுது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி குமரேசு 08.11.2011 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (ராசா) தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவரான நல்லம்மா (ஓய்வுபெற்ற ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், அருந்ததி (யாழ்ப்பாணம்), தங்கராசா (பிரான்ஸ்), சாவித்திரி (பிரான்ஸ்), சந்திரமதி (பிரான்ஸ்), நளாயினி (சாவகச்சேரி), தியாகராசா (பிரான்ஸ்), கோசலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகேந்திரம், அரியரெத்தினம், தனபாலசிங்கம் மற்றும் ஜெகதாம்பாள் (பிரான்ஸ்), ரகுநாதன் (பிரான்ஸ்), சங்கரப்பிள்ளை (சங்கர் சாவகச்சேரி), சியாமளா(பிரான்ஸ்), தயாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கற்பகம், இளையப்பா, யோகம்மா, இராசம்மா, சபாரெத்தினம் மற்றும் சரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகம்மா, அன்னபூரணம் காலஞ்சென்றவர்களான மருதப்பு, நடராசா பொன்னம்மா, கணபதிப்பிள்ளை, செல்லம்மா, செல்லத்துரை, சுப்பிரமணியம் நல்லையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற மாலினிதேவி மற்றும் மயூரநாதன் கணேசானந்தன், கஜன், கஜனி, கஜமுகன், ரமணன், டிலைக்சன், தர்சன், கேமமாலினி, தர்சினி, சுதர்சன், கார்த்திகாயினி, தக்சுமி, செந்தூரன், சிவரூபன், கார்த்திகன், ரித்திக்கா ஆகியோரின் அன்பு பேரனும் கெலியானா, அஈதன், அஸ்வின், கம்சாயினி, கரிகரன், விஸ்ணுவர்த்தன், கௌசிகன், கௌதமன், கௌசிகா ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.11.2011) சனிக்கிழமை காலை பொறளை ஜெயவர்த்தன மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பொறளை இந்து மயானத்துக்கு 13.11.2011 ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

B/1/3, அளுத்மாவத்தை
பிளற்ஸ், அளுத்மாவத்தை.
கொழும்பு - 15
(10306)(1,6,7,8)

தகவல்:
மகள் நளாயினியும் குடும்பமும்

வாடகைக்கு
கொக்குவில் பிரதான வீதியில் ஒரு அறை, குளியலறையுடன் கூடிய Annex வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு:
0777 - 767818

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சரவணமுத்து



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சரவணமுத்து (10.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - குஞ்சரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலாயுதம் - வைரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் பாசமிகு கணவரும் லலிதாம்பாள் கனகலிங்கம் தெய்வீகராணி, பூர்வீகராணி, லோசனாராணி, மதியழகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாலிங்கம், திலகவதி, கிருஸ்ணன், பத்திராசா, சிவசேகரம், ஜெயந்திர மலர் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கனகரெத்தினம், ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்தம்மா பரமநாதன், சபாரெத்தினம் மற்றும் லோகாம்பிகை, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், நகுலேஸ்வரன், சுகந்தி, சாந்தினி, டினேஸ்வரன், நந்தகோபன், சுபாஜினி , செந்தூரன், காலஞ்சென்ற மயூரன் மற்றும் சிவகரன், வைஸ்ணவி, விஸ்ணவன், றீகன் பிரியதர்சினி, ஜஸ்மிலா, கஜீன், பிரணவன், சிந்தூரி, மயூரி ஆகியோரின் பேரனும், கிருசான், நிருஷிகா, டினுசிகா, இனுஷிகன், அனுஜன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினா தீவு சல்லிபரவை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(10275) (3-6-7)

தகவல்: குடும்பத்தினர்,
ச.கனகலிங்கம்,
ச.மதியழகன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டிலிப்பாய் பிரதேசச் சிறார்களுக்கான கல்வியை தளர்வின்றி வழங்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

ஒரு கிராமத்தின் நாகரிகம், கலை மக்களின் வாழ்க்கை முறைகளுக்கு அத்திபாரமாக விளங்கும் பாடசாலைகளின் செயற்பாடுகளே சமூகத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன.

அந்த வகையில் 1929ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து சண்டிலிப்பாய் பிரதேசத்தில் சிறார்களின் கற்றல் சேவையை இடைவிடாது வழங்கி வருகின்றது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து கிராமச் சிறார்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ப.மு. செகராசசிங்கம் தனது சொந்தக் காணியில் 1929 ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப்பாடசாலை எனும் பெயருடன் இந்தப் பாடசாலையை ஸ்தாபிப்பதற்கு மூல காரணமாக இருந்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச சிறார்கள் மட்டு மல்லாது அயல் கிராமங்களைச் சேர்ந்த சிறார்களும் ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்கு மிகவும் பயனுள்ள சேவையை வழங்கியது.

1929 ஆம் ஆண்டு பாடசாலையை நிறுவுவதற்கு காரணமாக இருந்த ப.மு செகராசசிங்கம் பாடசாலையின் அதிபராக இருந்து மாணவர்களுக்குத் தேவையான கற்றல் தேவைகளை சிறந்த முறையில் செயற்படுத்தினர்.

ப.மு செகராசசிங்கம் 1929 ஆண்டு முதல் 1940 ஆம் ஆண்டு வரை அதிபராக இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து 1941 ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரை பாடசாலையின் அதிபராக தில்லையம்பலம் பொறுப்பேற்றுக் கொண்டார்.




ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்ந்து பேணப்பட்டதால் சண்டிலிப்பாய் இந்து ஆரம்பப் பாடசாலை தனது சேவையை தொடர்ந்தும் வழங்கி வந்தது.

பாடசாலையின் வளர்ச்சியில் அதிபர்கள் தமது சேவைக்காலங்களுக்கு ஏற்றாற்போல் சேவை வழங்கியதால் கற்றல் பணிகள் இடைவிடாது இடம்பெற்றன.

பாடசாலை அதிபராக தில்லையம்பலம் கடமையாற்றியதைத் தொடர்ந்து 1955 ஆம் ஆண்டு முதல் 1965 ஆம் ஆண்டு வரை பி.சி. சுப்பிரமணியம், 1966 ஆம் ஆண்டு முதல் 1968 ஆம் ஆண்டு வரை டபிள்யூ. பிச், 1967 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை எஸ்.இராஜசுந்தரம் ஆகியோர் பாடசாலையில் அதிபர்களாகக் கடமையாற்றினர். ஆங்கிலக் கல்விப் போதனைகளை மட்டும் வழங்கி வந்த சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப் பாடசாலை தமிழ் மொழிக் கல்வியையும் வழங்க வேண்டும் எனும் நோக்கத்துடன் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் தமிழ் மொழிக் கல்வியை வழங்கி வந்த சண்டிலிப்பாய் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, சண்டிலிப்பாய் வாணி நிகேதன வித்தியாலயம் ஆகியன சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப்பாடசாலையுடன் இணைக் கப்பட்டு சண்டிலிப்பாய் இந்து மகா வித்தி யாலயம் எனும் பெயர் மாற்றம் பெற்று கல்வியை சேவையை வழங்க ஆரம்பித்தது.

1971 ஆம் ஆண்டு முதல் 1978 ஆம் ஆண்டு வரை ப.சிவானந்தராஜா பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய போது பாடசாலை புதிதாக பெயர் மாற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து பாடசாலையின் அதிபர்களாக 1979 ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரை க.வைத்தியநாதஐயர், 1985 ஆம் ஆண்டு செ. அமுதலிங்கம், 1985 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரை எஸ்.எம்.மூர்த்தி, 1986 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரை பரராஜசிங்கம் ஆகியோர் கடமையாற்றி னர்.

### சோபனா

1988 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரை பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய சேர்.சோமசேகரம் காலத்தில் பாடசாலைக்கு மதிலமைத்தல், மின் இணைப்பு, நீர் விநியோகம் போன்ற சேவைகள் நிறைவேற்றப்பட்டன..

அதனைத் தொடர்ந்து பாடசாலையின் மைதானத்தையும் விஸ்தரிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

V Care

DR.HAIR

TRICHOLOGY CENTRE

Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!


எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது

வவுனியா-24,25 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

## அன்புத் தெய்வத்தின் இருபத்தோராம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | அரன் அடியில் |
|---|---|
| 15 | 30 |
| 04 | 10 |
| 1904 | 1990 |



### அமரர் வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை

திதி:அபரபக்க பிரதமை - 11.11.2011

அப்பாவே என்றும் அருள் சுரக்கும் ஆலயமே
ஆண்டாண்டு தோறும் அயராதுழைத்தீரே
கல்வி செல்வம் மிக்கவராய் எம்மை காலமெல்லாம் வாழ வைக்க
கருத்துடனே பாடுபட்ட கருணை மிக்க தெய்வமன்றோ.

இல்லறமாம் சோலையிலே இணைந்திருந்த நறுமலரே
இயன்றவரை நல்லறங்கள் இதயமதிற்கொண்டிருந்தீர்
எழில் நிறைந்த ஊரினிலே இன்பமுடன் உலாவி விட்டு
ஏன் இந்த வாழ்க்கை யென்று எண்ணித்தான்போனீரோ.

நீர்க்குமிழி போன்ற நிலையில்லா இவ்வுலகில்
நிலையான செல்வ மென்று நேசித்தே உழலுகின்றார்
காலத்தின் கோலமதால் கணப்பொழுதில் மறைந்தீரே
காண்போமோ இப்பிறப்பில் கண்மணி போல் உங்களையே

என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

குடியிருப்பு,
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

(7941)(3,8,6)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**கோபாலகிருஸ்ணன் சிவபாக்கியம்**
(கட்டுவன் உப தபாலதிபர்)



தோற்றம் 09.08.1938
மறைவு 11.11.2007

ஈரவிழியோடு நாலாண்டு சென்றாலும்
மாறாது எம்துயர் துடுப்புகள் இல்லாத
தோணிகளாக துடிக்கின்றோம். இனியவளே
பெண்மை பெரியவளே எங்கள் வாழ்க்கைத்
தேரின் அச்சாணியாக நீ இருந்தாய்
எங்கள் பொருள் வளத்தை பெருக்கிய
புண்ணிய வதியே எங்களை வல்லவனாய்
நல்லவனாய் வாழ வைத்த அன்புத் தெய்வமே
நீயோ பாக்கியசாலி பறந்து விட்டாய்
நாங்கள் உன்னை இழந்து விட்டுத் தவிக்கின்றோம்
அம்மா நிஜமாய்க் கண்ட உருவத்தை
நிழற்படமாய் பார்க்கின்றோம்.
புன்னகை பூத்த உங்கள் முகம் எங்கள் மனங்களிலே
அணையாத தீபமாய் என்றும் இருப்பீர்கள்...
ஒரு தெய்வமாக.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மக்கள்
சி.கிருபராஜ் (கண்ணன்),
சி.ரவிராஜ் (ரவி - ஜேர்மனி)
மற்றும் பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

ஏழாலை றோட்,
கட்டுவன்.

(10184)(6,8,3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகை வீடுகளில் குடியிருப்போரையும் வாக்காளர்களாகச் சேர்க்க இணக்கம்

கொழும்பு, நவ. 11

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் வாடகை வீடுகளில் குடியிருக்கும் மக்கள் தங்களது பெயர்களை 2011ஆம் வருடத்திற்கான வாக்காளர் பட்டியலில் பதிவுசெய்துகொள்ளலாம்.

இதுதொடர்பிலான புதிய விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம். இந்தப்புதிய விண்ணப்பப்பவடிங்கள் நிரப்பப்பட்டு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்படவேண்டும்.

ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடன் தேர்தல் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சுகளை அடுத்தே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பிலே ஜனநா்யக மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வாடகை வீடுகளில் இருக்கும் குடியிருப்பாளர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம். இதற்காக வீட்டு உரிமையாளரின் கையெழுத்தோ அல்லது ஒப்புதலோ அவசியமில்லை. இதற்கான புதிய விண்ணப்பப்படிவங்களை தேர்தல் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் படிவங்களை நிரப்பிக் கையளிப்பதற்கு கிராமசேவகர்களின் அத்தாட்சிக் கையொப்பம் அவசியமில்லை. இந்தப் படிவங்களை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஜனநாயக மக்கள் முன்னணி தலைமையகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

முன்னணியின் அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் முகவர்கள் மூலமாகவும் இந்தப் படிவங்களை விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிரப்பப்படும் படிவங்களை தேர்தல் ஆணையாளருக்கு தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது ஜனநாயக மக்கள் முன்னணியின் அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் முகவர்களும், இவற்றை வீடுவீடாக வந்து சேகரிப்பார்கள். அவை அனைத் தும் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கைப் பிரஜைகள், வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தமாகவோ அல்லது கல்வி காரணமாகவோ சென்றவர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர் படிவத்தில் சேர்த்துக்கொள்ளலாம்- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



காரைநகர், புதுவீதி கிழவன்காடு கந்தசுவாமி ஆலயத்தில் சூரசங்கார நிகழ்வு இடம்பெறுகின்றது. (250)

# ரயில் சேவைகள் இலங்கையில் தனியார் மயப்படும் அபாயம்

கொழும்பு, நவ.11

எதிர்காலத்தில் ரயில்சேவை தனியார் மயப்படுத்தப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக ரயில்சேவை தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணி தெரிவித்துள்ளது.

மலையக ரயில்சேவையில் தற்போது தனியார் நிறுவனத்தின் இரு பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன என்று அந்த முன்னணியின் செயலாளர் சம்பத் ராஜித தெரிவித்தார்.

இதற்கான பயணச்சீட்டுக்கூட ரயில் நிலையத்தில் விநியோகிக்கப்படுவதில்லை. சீட்டுகள் எங்கு,யாரால் விநியோகிக்கப்படுகின்றன என்றுகூடத் தெரியாத நிலை காணப்படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடந்த 4 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சருடன் தாம் கலந்துரையாடினோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ரயில் பெட்டிகளைப் பரிசோதிக்கும் அதிகாரம் ரயில் சேவையாளர்களுக்கு இல்லை எனவும், இதனால் விபத்துகள் ஏற்படவாய்ப்புள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாளிகாவத்தை ரயில் பாதை செப்பனிடும் பணிகள் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதென்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ராஜரட்ணத்துக்கு அமெ.நீதிமன்று 9 கோடி 28 லட்சம் டொலர் அபராதம்

கொழும்பு,நவ.11

அமெரிக்காவின் வரலாற்றிலேயே மிகப்பெரிய மோசடி வர்த்தகத்தில் ஈடுபட்ட இலங்கையரான ராஜ் ராஜரட்ணத்துக்கு, அமெரிக்க நீதிபதி கடந்த செவ்வாய்க்கிழமை, 9 கோடி 28 லட்சம் டொலர் அபராதம் விதித்துள்ளார்.

இந்த அபராதத்தை அமெரிக்க மாவட்ட நீதிபதி ஜெட் ரெகோவ் விதித்துள்ளார். இவரது மோசடி வர்த்தகத் திட்டம் சிவில் தண்டனைக்கு அப்பாற்பட்டது. இவரின் உடைமைகளில் ஒரு பகுதியை சுவீகரிப்பதற்கு வாய்ப்புண்டு என்று அவர் குறிப்பிட்டார்.

மோசடி வர்த்தகத்துக்கு எதிரான கடுமையான அபராதத்தொகை, பாதுகாப்பு மற்றும் பண்டமாற்று ஆணைக் குழுவால்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இருமாதகால விசாரணைக்குப் பின்னர், பாதுகாப்பு மோசடி, சதித்திட்டம் ஆகியவை தொடர்பான 14 குற்றச்சாட்டுகளில் இவர் குற்றவாளியென கடந்த மே மாதம் நீதிமன்றால் தீர்ப்பளிக்கப்பட்டது.

மோசடி வர்த்தகங்கள் மூலம் இவர் சுருட்டிய தொகையை விட மூன்று மடங்கு அதிகப்படியான தொகையே அபராதமாக விதிக்கப்படவேண்டுமென பாதுகாப்பு மற்றும் பண்டமாற்று ஆணைக்குழு பரிந்துரைசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# மாகாண மட்டக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.11

தேசிய சமாதானப் பேரவையின் வடபகுதிக்கான மாகாண மட்டக் கலந்துரையாடல் எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் யாழ்.நகர் பிள்ளையார் விடுதியில் நடைபெறவுள்ளது.

சகல மதத் தலைவர்கள் முன்னிலையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடபகுதி மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வடபகுதியிலுள்ள ஐந்து மாவட்டங்களிலிருந்து தலா ஐந்து பிரதிநிதிகள் வீதம் கலந்துகொண்டு மக்களது பிரச்சினைகள் தொடர்பாக விவாதிக்கவுள்ளனர். (ச-14)


## இந்தியா அர்ச்சனா அக்கடமி
அச்சுக்கலை பயிற்சி நெறி

தற்போது யாழ்ப்பாணத்தில் சிதானந்தா அக்கடமியால் எதிர்வரும் 12ஆம்,13 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) கச்சேரி முன்பாக YMCA இல் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சியானது துணிகளில் பிறின்ரிங் செய்யும் கைவழி முறையாகும். முற்றிலும் புதிய எளிய முறையில் சாறி, சுரிதார், ரி-சேர்ட் என அனைத்து விதமான துணிகளிலும் நீங்கள் விரும்பிய வர்ணத்தில் விரும்பிய டிசைனில் 28 விதங்களில் குறைந்த முதலீட்டில் வீட்டில் இருந்தபடியே செய்து அதிக வருமானம் பெறக்கூடிய பயிற்சி நெறியாகும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

முன்பதிவுகள் YMCA மண்டபத்தில் 10ஆம்,11ஆம் திகதிகளில்
மு.ப.9.00 - பி.ப. 4.00 மணிவரை நடைபெறும்.
தொடர்புகளுக்கு: 0719062847, 0775132255
(10216)(4-19-7)

## தேவை

நிறுவனம் ஒன்றில் பணிபுரிவதற்கு Computer Typing தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. யாழ்.நகருக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 4527 (10255)(2-6-25)

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Care
Hair and Pimple Clinic
முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 24,25 ஆகிய திகதிகளில்
முன் பதிவுகளுக்கு 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி சோமசுந்தரம் அவன்யூவில் நான்கு அறைகள், இணைந்த குளியலறைகள், சமையலறை மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0773742934 (10175) (2-6)

## வீடு விற்பனைக்கு

யாழ். இராசாவின் தோட்ட வீதியில் ரைல்ஸ் பதிக்கப்பட்ட புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0217902989,
0772720119
(10135)(3,5,8)

## விற்பனைக்கு

கொங்கிறீற் வேலித்தூண்கள் (7 அடி) விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0773296407
0215670350
(10256)(3,7,8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மாவட்ட செயலகத்தில் தேசிய ஒருமைப்பாட்டுமேம்பாட்டு உதவியாளராகக் கடமைபுரியும்
செல்வி ஜெனனி கணேசரட்ணம்
அவர்கள் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 07.11.2011 அன்று HNDE (Higher National Diploma In English) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இவர் மேன் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் வளமுடன் உயர்வடையப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
உதவி அரசாங்க அதிபர் (த.பீ) மற்றும் நிர்வாகக் கிளை உத்தியோகத்தர்கள்
யாழ்.மாவட்ட செயலகம்.
(10262)(3,7,8)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முத்தையா கனகலிங்கம்
(ஓய்வுபெற்ற களஞ்சியக் காப்பாளர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

தோற்றம் 09.06.1940
மறைவு 02.11.2009
திதி : 11.11.2011

எம்மையெல்லாம் ஆளாக்கிவிட்டு சென்றுவிட்ட
எமதுயிர் துடிப்பே காங்கேசன்துறையில் உதித்த செம்மலே
எம்முள்ளத்தில் நீங்கா உன் நினைவுகள்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
27, முத்துதம்பி ஒழுங்கை,
மானிப்பாய்.
(10193)(3,6,8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா மீது இலங்கை அறிவிப்பின்றி போர் தொடுப்பு

## மீனவர் தாக்குதல் குறித்து பாண்டியன் ஆவேசம்

சென்னை, நவ. 11

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் தொடுப்பதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக இலங்கை அரசு அறிவிக்கப்படாத போரை நடத்துகிறது - என்று இந் தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண் டியன் தெரிவித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்குப் பின்னர் தா.பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறுகையில்:

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர். மீன்பிடிக்கிறார்கள் என்பதற்காகவே சுடக்கூடிய ஒரே நாடு இலங்கை.

இதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக இலங்கை அரசு அறிவிக்கப்படாத போர் தொடுக்கிறது என்றே கொள்ளலாம். இந்தியாவின் நேச நாடு என்று கூறுவது இவ்வாறு நடந்து கொள்ளுமா?

மீனவர் மீதான தாக்குதலை தமிழகத்தின் பிரச்சினையாக மட்டும் பார்க்காமல் தேசியப் பிரச்சினையாகப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது மீனவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இத்தகைய தாக்குதல்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்- என்றார்.



இந்த வாரத்திலேயே இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, தமிழக மீனவர் மீதான தொடர் தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் ஜெயலலிதா கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடிதம் எழுதியிருந்தார்.

எனினும், மீனவர் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் தொடர்ந்தபடியே உள்ளது. முதல்வர் கடிதம் எழுதிய அடுத்த நாளே மீனவர் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# 39 பெண்களை மணந்து 160 பேருடன் ஒரே வீட்டில் வசிக்கும் அதிசய மனிதர்



இந்தியாவின் மிசோரம் மாநிலத்தில் 39 பெண்களை மணந்து 160 குடும்ப உறுப்பினர்களுடன் ஒன்றாக வசித்து வருகிறார் ஓர் அதிசய மனிதர்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மிசோரத்தில் உள்ளது பக் தவாங் டியாங்னுவாம் கிராமம். இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர் சையோனா (வயது - 67). விவசாயம், மர பொருள்கள் தயாரித்தல் உள்ளிட்ட தொழில்களை நடத்திவரும் சையோனாவுக்கு 39 மனைவிகள்.

முதலாவது மனைவியின் பெயர் ஜதியாங்கி (வயது - 71). இவருக்கு 7 குழந்தைகள். இறுதி மனைவி பெயர் வன்லால் சியாமி (வயது-31). இவருக்கு 5 வயது மகள் இருக்கிறாள். சையோனாவுக்கு 15 மருமகள்மார் உள்ளனர். 29 மகள்மார் திருமணமாகி, கணவருடன் தனியாக வசிக்கின்றனர்.

நான்கு மாடிக் கட்டடத்தில், 101 பெரியவர்களும், 59 சிறுவர்களும் ஒரே குடும்பமாக வசிக்கின்றனர். கடந்த 2000 ஆம் ஆண்டு சையோனா, கடைசித் திருமணம் செய்து கொண்டார். குடும்பத்தினர் அனைவரும் ஒரே சமையல் அறையில் சமைத்து ஒன்றாகச் சாப்பிடுகின்றனர்.

காலை உணவுக்கு 50 கிலோ அரிசியும், இரவு உணவுக்கு 35 முதல் 50 கிலோ தானியத்தையும் சமைக்கின்றனர். அத்துடன் ஒவ்வொரு நாளும் 25 கிலோ உருளைக்கிழங்கு, 15 கிலோ பருப்பு மற்றும் அதிகளவான அளவில் காய்கறிகள் இவர்களின் வீட்டுக்குத் தேவைப்படுகின்றன. மாமிசம் சமைத்தால், ஒரு நாளைக்கு 45 கிலோ மாமிசம் சமைக்கின்றனர். (வ)

# தமிழக மீனவரைப் பாதுகாக்க உடன் நடவடிக்கை அவசியம்

## மத்திய, மாநில அரசுகளிடம் மார்க்சிஸ்ட் வலியுறுத்து


இலங்கைக் கடற்படையின் தாக்குதல்களிலிருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கைக்கடற்படையால் அடிக்கடி தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும், சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர் நிகழ்வுகளாக இடம்பெறு கின்றன. இதனால் தமிழக மீனவர்கள் சொல்லொணா துயரத்திற்கு உள்ளாகியுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் கடு மையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்களின் வலைகளை இலங்கைக் கடற்படையினர் வெட்டிக்கடலில் மூழ்கடித் துள்ளனர். தொடர்ந்து மீன்பிடிக்க விடாமல் அவர்களைத் தாக்கி விரட்டியடித் துள்ளனர். இலங்கை கடற்படையின் இந்தத் தாக்குதலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கைக்கடற்படையினர் மீனவர்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதலை தடுத்து நிறுத்த மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை எடுக்காததன் விளைவாகவே இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்கின்றன. எனவே, தமிழக மீனவர்க ளையும், அவர்களது மீன்பிடித்தொழிலையும் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய இழப் பீட்டை வழங்கவும் மத்திய, மாநில அரசுகளிடம் மாநிலச் செயற்குழு வலியுறுத்துகிறது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)






ஊழலுக்கு எதிராக ரத யாத்திரை மேற்கொண்டு வரும் பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி, ராஜஸ்தானை வந்தடைந்தார். ஜோத்பூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. (வ)

# மும்பையில் பாதுகாப்பு தீவிரம்

மும்பை, நவ. 11

மும்பை தொடர் குண்டு வெடிப்பு தினத்தை முன்னிட்டு அசம்பாவித சம்பவங்கள் இடம் பெறுவதைத் தடுக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முக்கிய அமைப்புகளும், வர்த்தக அமைப்புகளும் தங்களது பாதுகாப்பை அறிமுகப் படுத்திக் கொள்ளுமாறும், உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் மும்பை நகரப் பொலிஸார் அறிவுறுத்தி உள்ளனர்.

எதிர்வருத் 13 ஆம் திகதி மும்பை தொடர் குண்டு வெடிப்பு நினைவு தினம். காவேரி பஜார், ஒபரா ஹவுஸ், தாதரில் உள்ள கடிதர்கானா ஆகிய இடங்களில் இதே நாளில் நடத்தப்பட்ட தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். (வ)

# ஈழத்தமிழருக்காக நாளை ஆர்ப்பாட்டம்: சென்னை மாநகரில் பதாகைகள் கிழிப்பு

## தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கண்டனம்

சென்னை, நவ.11

இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காக சென்னையில் நாளை சனிக்கிழமை நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்துக்காகக் கட்டப்படிருந்த பதாகைகள் கிழித்துச் சேதப் படுத்தப்பட்டுள்ளன.

இதை வன்மையாகக் கண்டித் துள்ளது ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ள தமிழக முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்.

இதுகுறித்து சங்கத்தின் மாநிலத் தலைவர் ச.தமிழ்ச்செல்வன், பொதுச் செயலாளர் சு.வெங்கடேசன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழக முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாநில மாநாட்டு முடிவின்படி இலங்கைத் தமிழர்களுக்கு வாழ்வுரிமை கோரி சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே நாளை சனிக்கிழமையன்று ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காகப் போக்குவரத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் மறைமலை அடிகள் பாலத்தின் ஓரப்பகுதியில் கட் அவுட், பதாகைகள் என்பன கட்டப்பட்டிருந்தன. இவற்றை பொலிஸ் அதிகாரிகள் மாநக ராட்சி அதிகாரிகளின் உதவியோடு அராஜகமாக அப்புறப்படுத்தி, கிழித்துச் சேதப் படுத்தியுள்ளனர்.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காகவும், தமிழர் வாழும் பகுதியின் சுயாட்சிக்காகவும், மத்திய அரசின் தலையீட்டைக் கோரி நடத்தப்படும் ஆர்ப்பாட்ட பதாகைகள் சேதப்படுத்தப் பட்டமை கண்டனத்திற்குரியது.

ஆதிக்க சக்திகள் வீதியில் பாதியை அடைத்து பதாகைகள் கட்டும்போது கண்களை மூடிக் கொண்டிருக்கிறது காவல் துறை. இப்போதும் சைதாபேட்டைப் பகுதியில் விதிமுறைகளை மீறி தனியார் நிறுவன பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

இந்தநிலையில் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் பதாகைகளை காவல்துறை சேதப்படுத்தியுள்ளது.

சீப்பை ஒளிப்பதால் திருமணத்தை நிறுத்திவிட முடியாது என்பதை காவல்துறையினரும் அவர்களுக்கு துணை போகும் மாநகராட்சி அதிகாரிகளும் புரிந்து கொள்ள வேண்டும். - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பிரளயத்தை ஆசிரியர்கள் டிசெம்பரில் எதிர்கொள்ள நேரிடும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் பொதுச் செயலர் கூறுகிறார்

கொழும்பு,நவ.11

ஆசிரியர் இடமாற்றத்தைப் புனிதப்போர் என்கிறார்கள். எதிர்வரும் மார்கழி மாதத்தில் மற்றுமொரு பிரளயத்தை ஆசிரியர்கள் சந்திக்கப் போகிறார்கள். அதற்கு இப்போதிருந்தே ஆசிரியர் சங்கங்கள் தயாராக வேண்டும்.

இவ்வாறு இலங்கையின் மூத்த தொழிற்சங்கவாதியும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளருமான த.மகாசிவம் சங்கத்தின் 37ஆவது தேசிய மாநாட்டில் உரையாற்றும் போது கூறினார்.

இந்த மாநாடு யாழ்ப்பாணம், நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் சங்கத்தலை வர் வி.ரி சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல சோதனைகளையும் வேதனைகளையும் சுமந்துதான் இவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது.

1960 களில் 20 மொழிவழித் தொழிற்சங்கங்கள் இருந்த போதிலும் இன்றுள்ள ஒரேயொரு மொழிவழி, இனவழி ஆசிரிய சங்கம், எமது தமிழர் ஆசிரியர் சங்கம் என்பதுதான் என்றால் மிகையில்லை.

இன்றைய கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன பதவியேற்று இதுவரைக்கும் எம்மைச் சந்திக்க நேரம் ஒதுக்கவில்லை.

இந்த அமைச்சர் சிறுபான்மைத் தொழிற்சங்கங்களை சந்திக்க நேரம் தரவில்லை. கல்வியமைச்சின் செயலாளருக்கு நேரடியாகச் சென்று அழைப்புக் கொடுத்தும் இன்னமும் அவர் வரவில்லை. இவர்களைக் கொண்டு கல்வி விடயங்களை வென்றெடுப்பது எப்படி?

கல்லில் நார் உரிப்பது போன்ற செயற்பாட்டில் ஆசிரியர் சங்கங்கள் செயற்பட வேண்டியுள்ளன.

நாம் கடந்த காலத்தில் நடத்திய போராட்டங்களையும் வெற்றிகளையும் அறிந்தவர்கள் பலர்.

மாணவர்களது கல்வியை மையமாக வைத்தே எமது ஆசிரியர் போராட்டங்களைச் செய்து வந்தனர்.

கல்வியில் சம வாய்ப்புக் கோரி யுத்தகாலத்தில் கூட நாம் போராட்டம் நடத்தத் தவறவில்லை.

கிழக்கில் புனிதப்போர் என்று கூறி ஆசிரிய இடமாற்றத்தை நடத்த வெளிக்கிட்டார் ஒரு பணிப்பாளர். தொழிற்சங்கங்களை அவர் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. இன்று விளைவை இன்று அவர் அனுபவிக்கிறார்.

ஆசிரியர் சக்தி மகத்தானது. ஆளுநருக்கு மேலே ஜனாதிபதி உள்ளார். அவருக்கும் மேலே இறைவன் உள்ளான் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

கஷ்டப்பிரதேசங்களுக்கு ஆசிரியர்களை இடம்மாற்றுவது வரவேற்புக் குரியது. ஆனால் நகருக்குள்ளேயே ஆசிரியர்களை இடமாற்றுவது தேவையற்ற ஒன்று.

வரலாற்றில் ஒரு பொதுச் செயலாளர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்தடவை. சுமப்பவனுக்குத்தான் பாரம் தெரியும்.

எனவே புதிய நிர்வாகத்தினர் சிறப்பாகச் செயற்பட எமது நல்லாசிகள். வருடத்தில் ஒரு நாள் கடமை லீவு தொழிற்சங்கக் கடமையில் ஈடுபடுவதற்கு சங்க உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. அதனைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை.

நாம் பெரும் போராட்டமொன்றுக்குத் தயாராக வேண்டிய சூழ்நிலை எம்முன் வந்துள்ளது. அதனூடாக எமது கோரிக்கைகளை வெல்வோம். சற்று ஸ்தம்பிதமடைந்திருந்த எமது சங்கம் மீண்டும் கொடிகட்டிப் பறக்க வேண்டும். என்றார். (ம)

# போக்குவரத்துப் பொலிஸாருக்கு நவீன வேகமாணிச் சாதனங்கள்

கொழும்பு,நவ.11

போக்குவரத்துப் பொலிஸ் பிரிவில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் பயன்பாட்டுக்கென நவீன தொழில்நுட்பத்துடனான வேகத்தை அளவிடும் ஐம்பது வேகமானிச் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கொள்வனவு செய்யப்படவுள்ள இச்சாதனம் ஒன்றின் விலை ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபா வரையில் இருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பயன்பாட்டிலுள்ள வேகமாணிச் சாதனங்களை விட இவை உயர் தொழில்நுட்பம் கொண்டுள்ளவை எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கிறது. அதிகளவில் வாகன விபத்துக்கள் இடம்பெறும் பிரதேசங்களில் அமைந்துள்ள பொலிஸ்நிலையங்களுக்குஇவை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-22)

# ஊழியர் நம்பிக்கை நிதிய சேமிப்பை மீளளிக்கும் கால எல்லை நீடிப்பு

## வழிவகைகள் குறித்து ஆராய்வு

கொழும்பு,நவ.11

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்கள் தத்தமது பெயரில் செலுத்தி வந்த சேமிப்பு வைப்புத் தொகையை மீளளிக்கும் கால எல்லையை 5 வருடங்கள் என்பதிலிருந்து 10 வருடங்களாக அதிகரிப்பதற்கான வழிவகை குறித்து அரசு தற்போது ஆராய்ந்து வருகிறது.

ஊழியர் நம்பிக்கை நிதிய உறுப்பினர்களின் சேமிப்பு வைப்புத் தொகை மீளளித்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் முன்வைத்த கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் பிரதி நிதியமைச்சர் கீதாஞ்ஜன குணவர்த்தன மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து, அவர் மேலும் தெரிவிக்கையில், நிதியத்தின் உறுப்பினர்களால் செலுத்தப்பட்ட சேமிப்புத் தொகையாக 132 பில்லியன் ரூபா தற்போது இந்நிதியத்தின் வசம் உள்ளது.

அதற்கென 8.5 வீத வட்டி வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது 9 மில்லியனுக்கும் அதிகமாக ஊழியர்கள் இந்நிதியத்தின் உறுப்பினர்களாக உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். (ம-ஞ)

# போர் பாதித்த கல்வி நிலையை உயர்த்த ஆசிரியர் சங்கம் ஒத்துழைக்க வேண்டும்

## வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இளங்கோவன்

யாழ்ப்பாணம், நவ.11

கடந்த 30 வருடகாலப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் கல்வி நிலையை உயர்த்த தமிழர் ஆசிரியர் சங்கம் ஒத்துழைக்கவேண்டும். வடக்கில் 3 மாவட்டங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. உங்கள் உதவியை இதற்கு பெரிதும் நாடுகின்றேன்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 37 ஆவது தேசிய மாநாட்டில் உரையாற்றிய வடமாகாணக் கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வேண்டுகோள் விடுத்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் 540 உதவி ஆசிரியர்களுள் 300 ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்த்துள்ளோம்.

உதவி ஆசிரியர்களுக்கு வடகிழக்கில் மட்டும் 3 ஆயிரம் ரூபா மாதாந்த வேதனமாகவும் நாட்டின் ஏனைய மாகாணங்களில் 6 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாகவும், கல்வியில் சம வாய்ப்பு மறுக்கப்படுவதாகவும் சங்கத் தலைவர் இங்கு கூறினார். அது உண்மை; ஆனால் இது தேசியமட்ட தீர்மானம் எனினும் ஆளுநரிடம் இதுபற்றி அறிவித்து உரிய தீர்வைப் பெற்றுத் தருவேன் என்றார்.

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் உரையாற்றுகையில்:

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானங்கள் பூரணமாக நடைபெற்றுவரும் இந்தவேளையில் கல்வியில் நீங்கள் கூடுதலான அக்கறையை, ஒத்துழைப்பைக் காட்டுவீர்கள் என நம்புகிறேன்.

குறிப்பாக வன்னிப் பிரதேச ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நாம் மட்டும் தனியாக எதனையும் பெரிதாகச் செய்துவிட முடியாது. எனவே தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உதவிகளைப் பெரிதாக எதிர்பார்க்கிறோம். என்றார்.

# தனது பாலியல் உறவு காட்சிகளை விநியோகித்த கொட்டடி வாசி கைது

யாழ்ப்பாணம்,நவ.11

தான் காதலித்ததாகக் கூறும் பெண்ணுடன் பாலியல் உறவு கொண்டு அதனைக் கைத்தொலைபேசி மூலம் படம் பிடித்து ஏனையோருக்கு விநியோகித்து வந்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சின்னராசா தனேஸ்வரன் (வயது-39) என்ற கொட்டடியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்.பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேரில் சென்று இவரைக் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக யாழ். தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்ததாவது:-

கொட்டடிப் பகுதியை சேர்ந்த சின்னராசா தனேஸ்வரன் என்பவர் வேலணையைச் சேர்ந்த பெண் ஒருவருடன் பாலியல் உறவு கொண்டு அதனைத் தனது கைத்தொலைபேசியில் பதிவு செய்துள்ளார். இது இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்துள்ளது. தான் உறவில் ஈடுபட்ட காட்சிகள் அடங்கிய வீடியோவை அவர் ஏனையோருக்கு விநியோகித்தும் வந்துள்ளார்.

நீலப்படம் விநியோகிப்பது போன்று 'சிடி'களில் பதிவு செய்தும் கொடுத்துள்ளார். வீடியோவில் காணப்படும் பெண் தற்போது வெளிநாட்டில் இருக்கிறார். சந்தேகநபர் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த ஆபாசக் காட்சிகளை அடுத்தவர்களுக்கு விநியோகித்து வந்துள்ளார்.

எமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நபரைக் கைது செய்தோம். அசிங்கமான பாலியல் காட்சிகளை விநியோகித்து பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என்ற முறைப்பாட்டின் கீழ் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளோம் என்றார். (உ-14)

# புதுக்காட்டுச் சந்தை புனரமைத்து பாவனைக்கு

பளை, நவ.11

யுத்தத்தின் போது முற்றாகச் சேதமடைந்து காணப்பட்ட பளை பிரதேச, புதுக் காட்டுச் சந்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு பொது மக்களின் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தை புனரமைக்கப்பட்டதையடுத்து சந்தைக்கு பெருமளவு உற்பத்திப் பொருள்கள் வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 வீதி, வடமராட்சி கிழக்கு செல்லும் வீதி ஆகியவற்றை ஒன்றிணைக்கும் சந்தியில் சந்தை அமைந்துள்ளதால் இங்கு பொருள்களை கொள்வனவு செய்ய வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# வலுவிழந்தோருக்கு இன்று கொடுப்பனவு

தென்மராட்சி,நவ.11

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 33 வலுவிழந்தோருக்கான மாதாந்தக் கொடுப்பனவு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயனாளிகள் இன்று வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தைச் சேர்ந்த 33 வலுவிழந்தோருக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-207)

# கடந்த எட்டு மாத காலங்களில் ரூ.696 கோடி ஏற்றுமதி வருவாய்

## கடந்த ஆண்டை விட 28 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, நவ.11

இந்த ஆண்டின் ஜனவரி முதல் ஒகஸ்ட் மாதம் வரையிலான காலத்தில் ஏற்றுமதி வருவாயாக 696.6 கோடி ரூபாய் கிடைத்துள்ளது என்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவிக்கின்றது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது நூற்றுக்கு 28.6 வீதமாக அதிகரித்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை சுட்டிக் காட்டுகிறது.

விவசாயத்துறை நூற்றுக்கு 13.6 வீதமும் தொழில் சார் உற்பத்திகள் நூற்றுக்கு 35.9 வீதமும் மற்றும் மீன்பிடித்துறை நூற்றுக்கு 15.3 வீதமும் என்ற வகையில் இந்த வருவாய் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியை மீண்டும் உலுக்கியது பூகம்பம்
## 7 பேர் சாவு; பலரைக் காணோம்; வீடுகள் சேதம்

அங்காரா,நவ.11

துருக்கி நாட்டை மீண்டும் உலுக்கியுள்ள பூமி அதிர்ச்சியில் குறைந்த பட்சம் 7 பேர் கொல்லப்பட்டனர்; பலரைக் காணவில்லை. இதேவேளை உடைந்து வீழ்ந்த மூன்று கட்டடங்களிலிருந்து 23 பேரை மீட்புப் பணியாளர்கள் உயிருடன் மீட்டுள்ளனர்.

துருக்கியின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட இந்தப் பூகம்பம் குறித்து துருக்கியின் பிரதி பிரதம அமைச்சர் பேசிர் அட்டாலே தெரிவித்ததாவது:- வான் நகரில் ஏற்பட்ட பூகம்பத்தினால் 25 வீடுகள் சரிந்து வீழ்ந்தன. அவைகளில் மூன்று வீடுகளில்தான் மக்கள் குடியிருந்தனர். கடந்த மாதம் ஏற்பட்ட மிகப்பெரிய பூகம்பத்தின் பின்னர் ஏனைய வீடுகளில் இருந்த மக்கள் வீடு களை விட்டு வெளியேறியிருந்தனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பூகம்பத்தில் தகர்ந்து போயுள்ள கட்டட இடிபாடுகளுக்கிடையில் சிக்குண்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றார் அவர்.



இடிந்து வீழ்ந்துள்ள இரண்டு ஹோட்டல்கள் மற்றும் தொகுதிக் கட்டடம் இருந்த இடங்களில் நேற்று மீட்புப் பணிகள் முழு வீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. இப் பகுதியில் 23 பேர் உயிருடனும் 7 பேர் சடலங்களாகவும் இடிபாடுகளுக் கிடையிலிருந்து மீட்கப்பட்டனர்.

இடிந்து வீழ்ந்த வேரம் ஹோட்டலில் பலர் தங்கியிருந்துள்ளார்கள். இவர்களில் பத்திரிகையாளர்களும் அடங்குவர். முன்னர் இடம் பெற்ற பூகம்பம் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக இவர்களில் பலர் இந்த ஹோட்டலில் தங்கியிருந்துள்ளார்கள். இவர்களுள் துருக்கியின் டோகன் பத்திரிகை நிறுவன பத்திரிகையாளர்கள் இருவரும் உள்ளனர் எனத் தெரியவருகிறது.

இதேவேளை ஜப்பானிய மீட்புப் பணியாளர் ஒருவர் இடிபாடுகளுக் கிடையிலிருந்து உயிருடன் மீட்கப்பட்டார். இவர் முன்னர் ஏற்பட்ட பூகம்பத்தின் போது மீட்புப் பணிகளுக்காக வந்திருந்தவர். அத்துடன் இன்னொரு மீட்புப் பணியாளரைக் காணவில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 23 ஆம் திகதி ஏற்பட்ட இந்தப் பூகம்பத்தில் 600 பேருக்கு மேல் கொல்லப்பட்டார்கள் என்று பிரதி பிரதமர் கூறினார். (ப)

## பூமிக்கு அருகே வந்த விண்கல்லை காணாது விஞ்ஞானிகள் ஏமாற்றம்

பூமிக்கு அருகே, அதாவது 2 லட்சத்து 2 ஆயிரம் மைல் அருகே வந்துவிட்டுப் போன பெரிய விண்கல்லைக் காணக் காத்திருந்த நாசா விஞ்ஞானிகள், இருளாக அந்த விண் கல் இருந்ததால் காண முடியாமல் ஏமாற்றமடைந்தனர்.

2005 ஒய்யூ 55 என்ற பெயருடைய அந்த விண்கல்லானது, செவ்வாய்க்கிழமை இரவு பூமியை நோக்கி வந்தது. இதையடுத்து விண்கல்லை ஆய்வு செய்வதற்காக நாசா விஞ்ஞானிகள் தயாராக காத்திருந்தனர். ஆனால் சக்தி வாய்ந்த தொலை நோக்கிகளால் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு விண்கல் இருளாக இருந்ததால் பார்க்க முடியாமல் நாசா விஞ்ஞானிகள் ஏமாற்றமடைந்தனர்.

அதேவேளை விண்கல் பூமியை நோக்கி வந்த சமயத்தில், நிலவின் வட்டப் பாதையில் அது இருந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ந)

## இளம் பெண்களின் சடலங்களை திருடி வீட்டை அலங்கரித்த ரஷ்யர்

மாஸ்கோ

கல்லறைகளில் இருந்து 29 இளம்பெண்களின் உடல்களைத் திருடி, பொம்மைகள் போல அலங்கரித்து அவற்றை வீடு முழுக்க வைத்திருந்த ரஷ்ய ஆராய்ச்சியாளர் அனாடலி மாஸ்க்வின் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரஷ்யாவில் வோல்கா ஆற்றை ஒட்டிய நிஸ்னி நோவ் கரட் பகுதியில் உள்ள கல்லறையில் மர்மமான முறை யில் இளம் பெண்களின் உடல் கள் காணாமல் போவதாகத் தொடர்ந்து புகார்கள் வந்தன. இதையடுத்து அந்தப் பகுதியை பொலிஸார் ரகசியமாக கண்காணித்ததுடன் கைரேகைகள், கால் தடங்களைத் தடயவியல் வல்லுநர்கள் மூலம் பதிவு செய்தனர். அதன் அடிப்படையில் தீவிர விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணைகளின் முடிவில் இதே பகுதியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் உடல் திருட்டில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, அவரது வீட்டில் சோதனை நடத்திய பொலிஸார் அங்கு கண்ட காட்சிகளால் பெரும் அதிர்ச்சியடைந்தனர்.



சோபா, கட்டில், தொலைக் காட்சி மற்றும் புத்தக அலுமாரி அருகே எனப் பல இடங்களிலும் சடலங்கள் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

விதவிதமான தொப்பிகள், ஆடைகள் அந்த உடல்களுக்கு அணிவிக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு 29 உடல்கள் அவரது வீட்டில் இருந்து மீட்கப்பட்டன.இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டார்.

வரலாற்று ஆய்வாளரான அவர் பல புத்தகங்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## கல்லறைகளில் இருந்து உடல் உறுப்புகள் பாகிஸ்தானிலும் திருட்டு

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் கதாப் மற்றும் ஷோரப் கோத் நகரங்களில் உள்ள இடுகாட்டில், 40 கல்லறைகள் இடிக்கப்பட்டு அவற்றிலிருந்து புதைக்கப்பட்டவர்களின் உடல் உறுப்புகள் திருடப்பட்டுள்ளன.

இவ்வாறு தோண்டப்பட்டவைகளில் பெரும்பாலானவை குழந்தைகளின் கல்லறைகளாக உள்ளன.

எதற்காக , யார் இந்தக் காரியத்தில் ஈடுபட்டனர் எனத் தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்த சிந்து மாகாண ஆளுநர் இஷ்ரத் உல் எபரத் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்கிடையே கல்லறைகள் தோண்டப்பட்ட தகவல் அறிந்த அந்தப் பகுதி மக்கள் அங்கு திரண்டு, உடல் உறுப்புக்கள் திருடப்பட்டவர்களின் ஆன்மாவுக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (ந)



லிபியாவின் இடைக்காலக் கவுன்சில் அரசில் உள்ள ராணுவத்தினருக்கு ஊதியம் வழங்கப்படாததால் அவர்கள் திரிபோலியில் போராட்டம் நடத்தினர். அவர்களுக்கு ஆதரவாக இடைக்கால பிரதமர் அப்துல் ரஹீம் அல்கெய்ப் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

## தலிபான்களை ஒடுக்கும் பிரிட்டிஷ் 'இளவரசி'

ஆப்கானிஸ்தான் தமது தலிபான்களை ஒடுக்கும் நடவடிக்கைக்கு பிரிட்டிஷ் இளவரசி கேட் மிடில்டனின் பெயரைத் தெரிவு செய்து சூட்டியுள்ளனர்.

இந்தப் பெயர் சூட்டப்பட்டது குறித்து ஆப்கானிஸ்தான் தேசியப் படையின் தலைவர் அப்துல் வஹீது கூறுகையில்; தலிபான்களை ஒடுக்கும் நடவடிக்கையில் எங்களுக்கு உறுதுணையாய் இருக்கும் பிரிட்டிஷ் படைக்கு நாங்கள் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம். எனவே முக்கியமான இந்த நடவடிக்கைக்கு அவர்களின் இதயங்களில் நீங்கா இடம் பிடித்திருக்கும் இளவரசிக்கு மரியாதை செலுத்தும் வகையில் நாங்கள் இந்தப் பெயரைச் சூட்டினோம் என்று விளக்கமளித்தார். (ந)

## ஆர்ட்டிக் கடல் ஐஸ்கட்டி முழுவதும் 2015க்குள் உருகி நீராகிவிடும்

### பிரிட்டிஷ் விஞ்ஞானி தெரிவிப்பு

லண்டன், நவ.11

2015க்குள் ஆர்ட்டிக் கடலில் உள்ள ஐஸ்கட்டி முழுவதும் உருகித் தண்ணீராக மாறிவிடும் எனக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கடல் ஆராய்ச்சி நிபுணரான பீற்றர் வதம்ஸ் என்ற விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

பூமியின் வடதுருவத்தில் உள்ள ஆர்ட்டிக் கடல் குறித்து கடந்தபல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வந்த அவரது ஆய்விலேயே ஆர்க்டிக் கடலின் ஐஸ் கட்டிகள் முழுவதும் விரைந்து உருகி வருவது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக பீற்றர் வதம்ஸ் தனது ஆய்வில் மேலும் தெரிவித்ததாவது:-

ஆர்ட்டிக் கடல் ஐஸ் கட்டிகள் உருகி வருவதற்கு சுற்றுச் சூழல் சீர்கெட்டு வருவதே காரணம். சமீபகாலமாக ஐஸ்கட்டி விரைந்து உருகுவது தெரியவந்துள்ளது. அவ்வாறு ஐஸ் கட்டி முழுவதும் உருகிவிட்டால் அங்கு வாழும் துருவக்கரடி உள்ளிட்ட உயிரினங்கள் அழியும் அபாயம் ஏற்படும் என்று எச்சரித்துள்ளார்.

ஆர்ட்டிக் கடல் ஐஸ் கட்டிகள் முழுவதும் 2030க்குள் உருகும் என்று பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா. குழு மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பாக ஆய்வு செய்த பல வேறு ஆய்வாளர்களும் ஏற்கெனவே அறிவித்திருந்தனர் .(ந)

## அணு ஆயுதங்களைத் தயாரிக்கிறது ஈரான்
## ஐ.நா. அணுசக்தி தொடர்பகம் உறுதிப்படுத்தியது

வியன்னா,நவ.11

ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு தொடர்பான சர்வதேச அணுசக்தி தொடர்பகத்தின் அறிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை வெளியானது. இதில் ஈரான் அணுசக்தி உற்பத்தியில் ஈடுபடுவது உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து , ஈரான் மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிப்பது குறித்து அமெரிக்கா ஆலோசித்து வருகின்றது .

கடந்த ஒருவார காலமாக, உலக நாடுகள் எதிர்பார்த்த, ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பு குறித்த ஐ.ஏ.இ.ஏ., அறிக்கை மொத்தம் 22 பக்கங்களுடன் வெளியானது. அந்த அறிக்கையில்,

ஈரான் கடந்த சில ஆண்டு [illegible] [illegible] தைப் பெற்று, தற்போது அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது. அத்துடன் அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லக் கூடிய ஏவுகணைகளையும் தயாரிப்பதற்கான பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் குற்றச்சாட்டுக்குத் தகுந்த ஆதாரங்கள், ஐ.ஏ.இ.ஏ.யின் உறுப்பு நாடுகள் மற்றும் ஈரானின் அணுசக்தி தொடர்பான அறிக்கை, ஐ.ஏ.இ.ஏ., ஈரானில் நேரில் நடத்திய ஆய்வுகள் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

இதனையடுத்து ஏற்கனவே கடந்த சில நாள்களாக மிரட்டல் மேல் மிரட்டல் விடுத்துக் கொண்டிருந்த அமெரிக்கா, தற்போது ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அதிகரிப்பது குறித்து ஆலோசித்து வருகிறது. பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளும் இதனுடன் சேர்ந்துள்ளன. ஒட்டுமொத்தமாக இவை அனைத்தும் சேர்ந்து, ஈரான் மீது மேலும் கடினமான பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்பதில் குறியாக உள்ளன.

இந்த அறிக்கையின் தீவிரம் குறித்து கவலை தெரிவித்துள்ள ரஷ்யா, இதனால், ஈரான் உடனான பேச்சுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும் என்றும் கூறியுள்ளது. இதேவேளை ஐரோப்பிய யூனியனும் இந்த அறிக்கை குறித்து கவலை தெரிவித்துள்ளது.

ஆனால் அணுசக்தி தொடர்பக அறிக்கையின் குற்றச்சாட்டுகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஈரான், தனது அணுசக்தி உற்பத்தியை நிறுத்தப் போவதில்லை என உறுதியாகக் கூறியுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பு சாகிராவின் பிளேற் கிண்ணத்துக்கான

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம்,நவ.11

கொழும்பு சாகிராக் கல்லூரி வருடாவருடம் நடத்தும் அழைக்கப்பட்ட பாடசாலைகளின் 19 வயது அணிகளுக்கு இடையிலான பிளேற் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன் ஆனது.

கடந்தவாரம் கொழும்பு சாகிராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு வெஸ்லி கல்லூரி அணி மோதிக் கொண்டது.

ஆரம்பம் முதலே இரு அணியினரும் சிறப்பான துடுப்பாட்டத்தையும் சிறப்பான பந்து பரிமாற்றங்களையும் வெளிப்படுத்திய வண்ணம் இருந்தனர்.

முதலாம் பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட ஆட்டம் மீண்டும் இரண்டாம்பாதி ஆட்டத்திற்காக ஆரம்பமான போது இரு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களை பெறவேண்டும் என்ற நோக்கோடு ஆட்டத்தினை வேகப்படுத்தி எதிர் அணியினரின் கோல்பரப்பினுள் நுழைந்த வண்ணம் இருந்தனர். ஆனால் இரண்டு அணியினரின் பின் கள வீரர்களால் தடுத்து ஆடப்பட்டது.

இரண்டு அணிகளும் கோல்கள் பெற சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அதனை தவறவிட்டனர். இதனால் ஆட்ட முடிவின் போது இரு அணிகளும் எதுவித கோல்களைப் பெறாத தினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக மேலதிக 6 நிமிடங்கள் வழங்கப்பட்டது. 3 நிமிடத்துக்குள் தனது அணிக்கான முதலாவது கோலினைப் போட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரரான யாழினியன் 6 நிமிடம் முடிவடைவதற்குள் இரண்டாவது கோலினையும் அடித்து தனது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். ஆட்டமுடிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுசம்பியன் ஆனது. (எ-23)

## 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவ கழகங்களுக்கு இடையில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

பிற்பகல் 4 மணிக்கு சென் அன்ரனிஸ் (மருண்) அணியை எதிர்த்து பாதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 4.55 மணிக்கு குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊறெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

## கிளிநொச்சி செயலகத்தின் போட்டிகள் அடுத்தவாரம்

யாழ்ப்பாணம்,நவ.11

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நலன்புரி சங்கத்தினால் மாவட்ட, பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் மற்றும் உள்ளக போட்டிகள் எதிர்வரும் வாரத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் உதைபந்தாட்டப் போட்டி முழுங்காவில் பொது விளையாட்டு மைதானத்திலும் மென்பந்து கிரிக்கெட் போட்டி பரந்தன் மத்திய விளையாட்டு மைதானத்திலும், உள்ளக விளையாட்டுப் போட்டி கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் இடம்பெறவுள்ளதுஎனப்போட்டிஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (எ-23)

## சென். ஜோன்ஸ் ஆசிரியர் அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.11

சென்.ஜோன்ஸ் கல்லூரி, ஆசிரியர் அணிக்கும், யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டம் கடந்த வாரம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (எ-23)



இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தினால் கடந்த 30 வருடங்களுக்குப் பின் நடத்தப்படும் கழகங்கள், பாடசாலைக் கழகங்களுக்கு இடையிலான சதுரங்கப் போட்டி நேற்று யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பமானது. மேற்படி போட்டியில் பங்குபற்றிய வீர வீராங்கனைகளைப் படத்தில் காணலாம். (எ-23)

## மெய்வன்மை பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,நவ.11

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான மெய்வன்மைப் பயிற்சி முகாம் நேற்று முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் ஆரம்பமாகியது.

நேற்று ஆரம்பமான மெய்வன்மைப் பயிற்சி முகாம் இன்றும் நாளை சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளது. மேற்படி பயிற்சி முகாமில் 30 உடற்கல்வி ஆசிரியர்கள் பங்குபற்றுகின்றனர். (எ-23)

## சமநிலையில் முடிவடைந்த உதைபந்தாட்டம்



யாழ்ப்பாணம்,நவ.10

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இரண்டு அணியினரும் 3:3 என்ற கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (எ-23)

### மட்டக்களப்பு உதைபந்தாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் மைலோ வெற்றிக் கிண்ணத்திற்கான 19 வயதுப்பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி 12, 13, 14ஆம் திகதிகளில் மட்டக்களப்பு கல்முனையில் இடம்பெறவுள்ளது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்டத்திலிருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இன்று மட்டக்களப்பிற்குப் பயணம் செல்கின்றது. (எ-23)

## உதைபந்தாட்டப் போட்டி இன்று கம்பர்மலையில்

யாழ்ப்பாணம், நவ.11

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.



இதில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (எ-23)

### உடுவில் கல்விக் கோட்ட உதைபந்தாட்டத்தில்

# கந்தரோடை தமிழ்க் கந்தையா மூன்றாம் இடத்தினைப் பெற்றது

வலி.வடக்கு, நவ.11

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் ஒரு அணி மற்றைய அணிக்குச் சளைத்தவர்கள் இல்லை யென்பதை நிரூபிக்கும் வகையில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் கோல் பெற எடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில் ஆட்டம் நிறைவு பெற இரண்டாம் பாதி ஆட்டத்தில் கோல் பெற வேண்டும் என்ற துடிப்புடன் இரு அணிகளும் களமிறங்கி மோதிக் கொண்ட போதிலும் இரு அணிகளுக்கும் கோல் பெறும் வாய்ப்பு அற்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் கந்தையா வித்தியாலயம் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து 4:3 கோல்கள் என்ற அடிப்படையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வென்றதன் வழியாக மூன்றாம் இடத்தைப் பெற்றது. (எ-86)

## வடமராட்சி வலய பாடசாலைகளின் உதைபந்தாட்ட இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,நவ.11

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 16,18 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

16 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இமையாணன் அ.த.க பாடசாலை அணி மோதவுள்ளது.

மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதவுள்ளது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி மோதவுள்ளது.

மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை அணியை எதிர்த்துப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதவுள்ளது. (எ-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சச்சினுக்கு நெருக்கடி கொடுக்காதீர்கள்

## ஊடகவியலாளரிடம் அணித்தலைவர் டோனி கோரிக்கை



100ஆவது சதமடிக்கும் விடயத்தில் சச்சினுக்கு நெருக்கடி தர வேண்டாம் என்று ஊடகங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் இந்திய அணித்தலைவர் டோனி.

சச்சின் 99 சதங்களை ஏற்கனவே பூர்த்தி செய்துள்ள நிலையில், அவர் எப்போது 100ஆவது சதத்தைப் பூர்த்தி செய்வார் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே அதிகரித்துள்ளது. ஊடகங்களும் இதுதொடர்பாகப் பல்வேறு செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே அணித்தலைவர் டோனி இவ்வாறு கூறியுள்ளார்.

"இந்திய அணிக்கு எவ்வித நெருக்கடியும் இல்லை. ஆனால் ஊடகங்கள் சச்சினுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றன. அவர் சிறப்பாக விளையாடி வருகிறார். நிச்சயம் 100ஆவது சதத்தையும் பூர்த்தி செய்வார். எவ்வித நெருக்கடியும் இன்றி அவரை 100ஆவது சதமடிக்க விடுவோம். தொடர்ந்து அவரைப் பற்றியே செய்தி வெளியிட்டுக் கொண்டிருந்தால் அவர் மீதான எதிர்பார்ப்பு மலையளவு உயர்ந்துவிடும்.''

''அவர் கிரிக்கெட் விளையாட வந்த இரண்டாவது ஆண்டில் தொடங்கி இதுவரை ஜொலித்துக் கொண்டுதான் இருக்கிறார். அவர் 100ஆவது சதத்தை அடிக்க வழக்கத்தைவிட கொஞ்சம் அதிக காலம் எடுக்கத்தான் செய்வார். எனவே பொறுத்திருந்து பார்ப்போம்'' என்றார் டோனி. (15)

# ஆர்வமுடன் இருக்கின்றோம்; ஆனால் விடமாட்டோம்!

சச்சினின் 100ஆவது சதத்தை எதிர்பார்க்கிறோம். ஆனால் அது எங்கள் அணிக்கு எதிராக இருக்கக் கூடாது என மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் டேரன் சமி கூறியுள்ளார்.

டெல்லியில் நடைபெற்று முடிந்த முதலாவது டெஸ்ட் போட்டியின் தோல்வி குறித்து டேரன் சமி கூறுகையில்,

''இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது கடினம். இருப்பினும் நாங்கள் நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். 2ஆவது இன்னிங்ஸில் நாங்கள் சிறப்பாகத் துடுப்பாட்டம் செய்து இருக்க வேண்டும். 2ஆவது இன்னிங்ஸில் நாங்கள் 250 ஓட் டங்கள் எடுத்து இருந்தால் இந்திய அணிக்கு 350 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயித்து இருக்க முடியும். ஆட் டத்தின் முடிவு வித்தியாசமாக இருந்து இருக்கக் கூடும்.

டெண்டுல்கர், லட்சுமண் ஆகியோர் ஆட்டத்தை எங்கள் பக்கம் இருந்து திருப்பி விட்டனர். நாங்கள் வித்தியாசமாக எதுவும் செய்யவில்லை. முன்னணி அணிகளுக்கு எதிராக ஆடும் போது வெற்றிக்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

அதனை நாங்கள் முதல் இன்னிங்ஸில் செய்தோம். ஆனால் 2ஆவது இன்னிங்ஸில் நாங்கள் சரியான முறையில் செயல்படவில்லை.

டெண்டுல்கரின் 100ஆவது சதத்தை ஆர்வமுடன் எதிர்பார்க்கின்றோம். ஆனால் அது எங்கள் அணிக்கு எதிராக இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம்''- என்றார்.

# இன்னும் நாம் சிறப்பாக விளையாடியிருக்க வேண்டும்

## அணித்தலைவர் டோனி!

முதல் இன்னிங்ஸில் இந்திய துடுப்பாட்டக்காரர்கள் சிறப்பாக விளையாடியிருக்க வேண்டும் என்று இந்திய அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த டோனி,

''இந்தப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தாலும், சிறப்பான செயற்பாட்டோடு இந்தத் தொடரை நாம் ஆரம்பிக்கவில்லை. முதல் இன்னிங்ஸில் சிறப்பாக விளையாடியிருந்தால் இந்தத் தொடரைச் சிறப்பாக தொடங்கியுள்ளோம் என்று எவ்வித தயக்கமுமின்றி சொல்லமுடியும். முதல் இன்னிங்ஸில் நாங்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடவில்லை. கடினமான ஆடுகளம் என்று சொன்னாலும், வீரர்கள் ஓரளவு போராடியிருந்தால் அது அவர்களுக்கு உதவியிருக்கும்.''

''பெரோஸ்ஷா கோட்லா மைதானம் கடினமான மைதானம்தான், ஆனால் மோசமானதல்ல. இந்த மைதானம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு உரிய மைதானம். அதனால் இங்கு ஓட்டங்கள் குவிப்பது கடினம்தான். ஆனால் 2ஆவது டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ள கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானம் வித்தியாசமானது. துடுப்பாட்டக்காரர் மற்றும் பந்து வீச்சாளர்கள் இருவருக்குமே சாதகமானதல்ல. துடுப்பாட்ட வீரர்களே ஓட்டங்கள் குவிக்க கடுமையாக உழைக்க வேண்டும். பந்துவீச்சாளர்கள் பொறுப்பாகவும், அதே நேரத்தில் துல்லியமாகவும் பந்துவீசினால் மட்டுமே விக்கெட்களை வீழ்த்த முடியும்'' - என்றார்.

இளம் பந்துவீச்சாளர்களை பாராட்டிய டோனி,

''ஆடுகளம் கடினமானதாக இருந்தபோதும் இளம் பந்துவீச்சாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். பிரக்யான் ஓஜா சிறப்பாக செயற்பட்டார். அஸ்வின் அறிமுக போட்டியிலேயே 9 விக்கெட் வீழ்த்தினார். இரண்டாவது இன்னிங்ஸில் உமேஷ் யாதவின் பந்துவீச்சில் முன்னேற்றம் தெரிந்தது. சேவாக்-கம்பீர் ஜோடி 2 இன்னிங்ஸ்களிலும் சிறப்பான தொடக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. இரண்டாவது இன்னிங்ஸில் மத்தியதர துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடியதால் வெற்றிபெற்றோம். அறிமுக போட்டியில் விளையாடிய அஸ்வின், உமேஷ் யாதவ் ஆகியோர் பெரிய அளவில் விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை''- என்றார்.

அஸ்வின், ஓஜா ஆகியோர் சிறப்பாக விளையாடியிருப்பதால் ஹர்பஜன் மீண்டும் அணிக்குத் திரும்புவதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா எனக் கேட்டபோது,

''பார்க்கலாம், ஓஜா சிறப்பாக விளையாடியுள்ளார். அஸ்வின் ஆட்டநாயகன் விருதைப் பெற்றுள்ளார்.'' என்றார் டோனி.

# நாங்கள் என்ன சளைத்தவர்களா?

## ஏட்டிக்குப் போட்டியாய் சுருண்டது ஆஸி.



தென்னாபிரிக்க மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதலாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 96 ஓட்டங்களுக்கும் ஆஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 47 ஓட்டங்களுக்குள்ளும் சுருண்டது. ஒரே நாளில் 23 இலக்குகள் சரிந்தன.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்து ஆஸ்திரேலிய அணி விளையாடி வருகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் ஆட்டம் நேற்று முன்தினம் கேப்டவுனில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸிற்காக 284 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. ஆஸ்திரேலிய அணி சார்பில் மைகல் கிளார்க் 151 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். ஷோன் மார்ஷ் 44, ஜோன்சன், சிடில் தலா 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். ஏனையோர் ஒற்றை இலக்கங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.


நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் ஆஸி அணி 55 பந்து பரிமாற்றங்களில் 214 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்திருந்தது. நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே ஆஸ்திரேலிய அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் ஸ்ரெய்ன் 4, பிலண்டர், மோர்கல் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமைந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ஜக்குஸ் றுட்லோப் 18, ஸ்மித் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். 73 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தநிலையிலிருந்த ஆபிரிக்க அணி 96 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து ஆஸியிடம் அடிபணிந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் தவிர்ந்த ஏனையோர் ஒற்றை இலக்க ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்து வெளியேறினர். பந்து வீச்சில் ஆஸி அணி சார்பில் வொட்ஸன் 5, ரைன் ஹரிஸ் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.


188 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது ஆஸ்திரேலிய அணி. ஆஸிக்கு ஆரம்பத்திலிருந்து தென்னாபிரிக்க அணி அச்சுறுத்தல் கொடுத்தது. ஆஸ்திரேலிய அணி 21 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்து தடுமாறியது. மிகவும் கேவலமான நிலையில் இருந்த ஆஸியை இறுதி இலக்குக்காக ஜோடி சேர்ந்த சிடில், நதன் லயோன் 26 ஓட்டங்களை 10 ஆவது இலக்குக்காகப் பகிர்ந்தனர். 18 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 47 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் ஆஸ்திரேலிய அணி இழந்தது. ஆஸ்திரேலிய அணி வீரர்கள் 4 பேர் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். சிடில் ஆட்டமிழக்காமல் 12, லயோன் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஆபிரிக்க அணி சார்பில் பிலண்டர் 5, மோர்கல் 3, ஸ்ரெய்ன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

236 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு நேற்றைய தினமே இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆபிரிக்க அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் ஒரு இலக்கினை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஜக்குஸ் றுட்லோப் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துள்ளார். களத்தில் ஸ்மித் 19, அம்லா 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாளாகும். (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி
அவர்களால் வடிவமைக்கப்பட்ட மனவளக்கலை யோகா பயிற்சிகள்

# முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா

இடம் : இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் மணிமண்டபம்
காலம் : 12.11.2011 மாலை 5.00 மணிக்கு இலவச அறிமுக உரை
13.11.2011 மாலை 5.00 மணிமுதல் 18.11.2011 திகதி வரை

காயகல்ப பயிற்சி, தியானம், உடற்பயிற்சி என்பன நடைபெறும்.

பயிற்சி வழங்குபவர்: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி K.ஜெயபால் (B.Sc) அவர்கள் (தமிழ்நாடு, இந்தியா)

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் 40 வருடங்களுக்கு மேலாக தொடர் ஆராய்ச்சியை மேற்கொண்டு குறுகிய நேரத்தில் தினந்தோறும் இலகுவாகச் செய்யக்கூடியதும், அற்புதமான பிரதிபலனை அளிக்க வல்லதுமான சித்தர் வழிவந்த காயகல்பப் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி, தியானப்பயிற்சி, அகத்தாய்வுப்பயிற்சி போன்றவற்றை முறையாகவும், நிறைவாகவும் பெற்றுக்கொண்டு பயன் பெறுங்கள்.

இப்பயிற்சிகளின் மூலம் நோய் வராமல் பாதுகாப்பதுடன் சோம்பல் நீங்கி, சுறுசுறுப்புடன், ஞாபக சக்தியை அதிகரித்து, சீரான கண் பார்வையுடன், இரத்த அழுத்த சமன்பாடு, இருதய நோயை ஆற்றுப்படுத்தி, பொருளாதார நிறைவு, குடும்ப அமைதி, பெண்களுக்கான மாதவிலக்குப் பிரச்சினையைக் குணமாக்கி மொத்தத்தில் திருவுடைய ஆற்றல் மிகு தோற்றப் பொலிவுடனும், மனநிறைவுடன் வாழ வழி காட்டும்.

ஏற்கனவே பயிற்சியைப் பெற்றவர்கள் ஆவலுடன் தொடர்ந்து பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். இந்த நிலையில் நீங்களும் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள இவ்வரிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

வாழ்க வளமுடன்.

★ பயிற்சிக்குக் கட்டணம் உண்டு.

தொடர்புகளுக்கு:
இல.16, லில்லி அவன்யூ,
வெள்ளவத்தை, கொழும்பு -06.
T.P.: 0115658412, 0112580711.

இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.

(சி-5643)(5,6,7)

## சைவ சமய பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் தரம் 6 முதல் தரம் 11 வரை சைவசமயம் கற்பிக்கும் சகல ஆசிரியருக்கும் தரம்–12,13 பிரிவுகளில் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான செயலமர்வு ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி முதல் பி.பகல் 3.30 மணிவரை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

(த)

## தெற்காசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் அது நிச்சயமாக நிறைவேறும். பொருளாதார அபிவிருத்தியின் மூலம் கிட்டும் பயன்கள் இயல்பாக கீழ் மட்டத்திற்குப் பெருகிச் செல்வதில்லை. இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள எமது அரசுகளின் சரியான தலையீடு அத்தியவசியமானதாகும். இவை அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நமது பிராந்தியத்தில் சமாதானமும் பாதுகாப்பும் அத்தியாவசியமானதாகும் – என்றார்.

(த-சி)

### விற்பனைக்கு

கொடிகாமம் A-9 வீதியில் 7 பரப்பு 2 குளியில் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778528173 (10303) (2-6-7)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



செல்வி நசிதா திருச்செல்வம்

07.11.2011 கொழும்பு BMICH இல் உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM) பட்டம் பெற்ற செல்வி நசிதாவை மேலும் பல பட்டங்கள் பெற்றுயரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, கொல்போ (அண்ணா), நிஷாலி (ஆசிரியர், அண்ணி), சேனுஜான் (மருமகன்)
6ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

(10316)(2-6-7)

## சேவை நலன் பாராட்டு



திரு. சரவணமுத்து மகேந்திரன்

[அதிபர், கிளி/கட்டைக்காடு அ.த.க.பா சாலை]



கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியராக, அதிபராக கடந்த 21 வருடங்கள் சேவையாற்றி (11.11.2011) இன்று ஓய்வு பெற்றுச் செல்வதனையிட்டு இவரது உன்னத சேவையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், கண்டாவளைக் கோட்டம், தருமபுரம்.

# மரண அறிவித்தல்



## திருமதி இராசதுரை அமிர்தராணி

நிற்சாமம், சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை அமிர்தராணி நேற்று (10.11.2011) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதர் - அன்னம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னட்டி - அருமை தம்பதியரின் மருமகளும், சத்தியேந்திரா (லண்டன்), சத்தியரஜனி (சுவிஸ்), சத்தியமதி (சமுர்த்தி உத்தியோகத்தர், வலி.மேற்கு பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தாயும், சுதா (லண்டன்), யுகதீசன் (சுவிஸ்), சிறீதரன் (விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் - பரந்தன்) ஆகியோரின் அன்பு மாமியும் சைதன்யா, சைதன்யன், சாகித்யன், தாமரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரநாதன், தவமணி மற்றும் மனோகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்லத்துரை, வீரசிங்கம், நல்லதம்பி, பழனி, பாலசிங்கம், நாகேஸ்வரி, லீலா, லலிதா காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் நல்லம்மா, ஜெகதாம்பிகை, இராசதுரை, மலர் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சங்கானை மேற்கு, நிற்சாமம்.

(சி/5/12) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோர்வேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட உள்ளது. முன்னாள் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ரிச்சார்ட் ஆர்மிடேஜின் தலைமையில் இந்த அறிக்கை வெளியிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை, ரத்து செய்யப்பட்டமை உள்ளிட்ட பல முக்கிய விவகாரங்கள் குறித்து அறிக்கையில் தகவல்கள் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## மனோ கணேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் மனோ கணேசனுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மாநகரசபை ஆட்சியை முன்னெடுக்க ஆதரவு வழங்குவது தொடர்பில் மனோ கணேசனுடன், ரணில் விக்ரமசிங்க இந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

ரணில் விக்ரமசிங்க லண்டன் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் மனோ கணேசனுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை என தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சுவாமிநாதன் குறிப்பிட்டுள்ளார். (த)

**தேவை**

நிறுவனம் ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.

தொடர்புகளுக்கு: 0759575703

**வீடு காணி விற்பனைக்கு**

குஞ்சர் கடைச்சந்தியிலிருந்து வடக்குப் புறமாக 100m தூரத்தில் 21½ பரப்புக்காணியும், வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0772336299

## சவேந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் அலி பேடன் தெரிவித்துள்ளார்.

மிகப்பெரிய அனைத்துலக கட்டமைப்பான ஐ.நா அமைதி மற்றும் நீதியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலுள்ளது என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

''மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மீதான போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து முழு அளவில் விசாரணை நடத்த அனுமதிக்க வேண்டியது ஐ.நாவின் கடமை. தனது குற்றங்களில் இருந்து தப்பிக் கொள்வதற்கு அவர் இராஜதந்திர விலக்குரிமையைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

போர்க்குற்றங்களிலும், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களிலும் ஈடுபட்ட சவேந்திர சில்வாவின் இராஜதந்திர விலக்குரிமையை ரத்துச் செய்து அவரது அறிமுக ஆவணத்தை நிராகரித்து, அவரை விசாரணை செய்வதற்கு ஐ.நா. ஒத்துழைக்க வேண்டும்'' என்று பத்து மனித உரிமை அமைப்புகளும் கேட்டுள்ளன. உலகெங்கும் 22 முன்னாள் இராணுவ அதிகாரிகள் இலங்கை அரசால் இராஜதந்திரப் பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இது பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் அனைத்துலக முயற்சிகளுக்கு இடையூறாக உள்ளது என்றும் இந்த அமைப்புகள் கூறியுள்ளன.

## ஹெரோயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார்.முதலில் சிக்கிய மாணவனை விசாரணை வளையத்துக்குள் இறுக்கியதன் மூலம் போதைப் பாவனையில் ஈடுபட்ட அவனது நண்பர்களின் விவரத்தைப் பொலிஸார் பெற்றுக் கொண்டனர். அவர்களும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

யாழ். நகரப் பகுதியைச் சேர்ந்த ஆண்கள் பாடசாலைகளில் கற்கும் சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களே பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

போதைப் பொருளுக்கு அடிமையான மாணவர்களில் ஒருவர் 14 வயதேயானவர் என்பதும் விசாரணையில் தெரியவந்தது.

அவர்கள் வழங்கிய தகவல்களில் இருந்து, யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்குப் போதைப் பொருள்களை விற்பனை செய்து வரும் கும்பல் ஒன்றைப் பொலிஸார் அடையாளப்படுத்தினர். நேற்றுக் காலையில் இருந்து மாலை வரை அவர்கள் நடத்திய அதிரடி நடவடிக்கை மூலம், அந்தக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர் மூலம் போதைப் பொருள் விற்கும் கும்பலை மடக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இவர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த அவர் உத்தரவிட்டார். பரிசோதனைகளின் பின்னர் பெற்றோர் அழைக்கப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டு மாணவர்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். எனினும் அடுத்து வரும் 6 மாதங்களுக்கு அவர்களை உளவள ஆற்றுப்படுத்தலுக்கு உட்படுத்துமாறும் அவர் உத்தரவிட்டார்.

இந்த மாணவர்களில் அனேகமானோர் ஆசிரியர்கள், அதிபர்கள் போன்ற உயர் பதவியில் உள்ளவர்களின் பிள்ளைகள் எனவும் தெரியவந்தது. (உ)

## மீனவர் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் இந்திய மத்திய அரசுக்கு வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடனடியானதும், அவசரமானதுமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை இருநாட்டுத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 45 நிமிட நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிகிறது. சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமருடனான சந்திப்பு சிறந்த முறையில் இருந்ததாகத் தெரிவித்துள்ளார். (சி)

## விழிப்புணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் வி.பி.சிவநாதன்.

''நாங்கள் எமது சமூதாயத்தை இந்தப் போதைப் பொருள் பாவனையில் இருந்து உடனடியாக மீட்டெடுக்க வேண்டும். இதற்கு ஒட்டுமொத்த சமூகமும் இணைந்து, கிராம மட்டத்திலிருந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்று வலியுறுத்தினார், வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அதிகாரியும் 'ஆறுதல்' தொண்டு நிறுவனப் பணிப்பாளருமான சுந்தரம் டிவகலாலா.

இது தொடர்பில் விரிவுரையாளர் வி.பி.சிவாதன் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களிடம் போதைப் பொருள் பாவனை என்பதை சமூகத்தை அழிப்பதற்கான நடவடிக்கையாகவே நோக்க வேண்டும். பாடசாலைச் சமூகத்தைப் பொறுத்த வரையில் அதிலும் யாழ்ப்பாணச் சமூகத்தின் கல்வித் தரத்தை வீழ்த்துவதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலைமை தொடருமானால் எதிர்காலத்தில் எமது கல்விச் சந்ததி இல்லாமல் போய்விடும் என்றே சொல்லலாம். இதனைத் தடுப்பதற்கு முதலில் பெற்றோர் விழிப்பாக இருக்க வேண்டும்.

பாடசாலைகளும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். களியாட்டங்கள் நடக்கும் இடமாகப் பாடசாலைகள் மாறிவிட்ட துரதிஷ்டமும் இந்த மண்ணில் இப்போது நடந்தேறுகின்றது. அவற்றைத் தவிர்த்து மாணவர்களின் நடத்தையில் பாடசாலைகளும் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

முன்னாள் கல்வி அதிகாரி டிவகலாலா மேலும் தெரிவித்ததாவது:-

எமது சமூகம் தற்போது பலவிதமான நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகி வருகிறது. அதன் ஒரு பகுதிதான் இந்தப் போதைப் பொருள் பாவனை. யாழ்ப்பாணத்தில் முன்னர் இல்லாத இத்தகைய பழக்கங்கள் இப்போது எப்படி வந்தன? ஏன் வந்தன? எங்கிருந்து வருகின்றன? என்பதை ஆராய வேண்டும்.

போதைப் பொருளுக்கு இளம் சமூகம் அடிமையாகிவிட்டால் அதனைப் பாதுகாப்பது கடினம். முழுச் சமூகமும் இது குறித்து உரத்துச் சிந்திக்க வேண்டும். இது தொடர்பில் கிராமங்கள் தோறும் சென்று பெற்றோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். குறிப்பாகத் தாய்மார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

சகல பாடசாலைகளிலும் நேரம் ஒதுக்கி, போதைப் பொருள் பாவனையின் கேடுகள் பற்றியும் துஷ்பிரயோகங்கள் பற்றியும் மாணவர்களுக்கு விளக்க வேண்டும் - என்றார். (உ)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு.த.மகாசிவம்**
(முன்னாள் பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

முன்னாள் பொதுச் செயலாளரின்
வாழ்த்துச் செய்தி

*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வரலாற்றில் முதன் முறையாக போட்டியின்றி பொதுச் செயலாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு சரா.புவனேஸ்வரன் அவர்கள் துடிப்பும், ஆளுமையும், செயற்றிறனும் உடைய ஒரு நிர்வாகி ஆவார். ஆசிரியர் களுடையதும் மாணவர்களினதும் நலன்களைக் குறிக்கோளாகக் கொண்ட எமது சங்கத்தின் கடந்த கால செயற்பாடுகளில் திரு.சரா.புவனேஸ்வரன் அவர்களுடைய பணியும் , பங்களிப்பும் அளவிட முடியாததொன்று.*

*தமிழர் ஆசிரியர்களுடைய அபிலாசைகளை சிறப்பாக நிறைவேற்றும் உன்னத பணிக்காக கடந்த 37ஆவது தேசிய மாநாட்டில் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சரா. புவனேஸ்வரன் அவர்களின் தொழிற் சங்கப்பணி சிறப்பாக அமைய வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகளைப் பெறவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.*

**சயன்ஸ் அக்கடமியின்வாழ்த்துச் செய்தி**

**உயர்திரு.சரா.புவனேஸ்வரன்**

**(விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)**

இலங்கைத் தமிழ் ஆசிரியர்களின் உரிமைக்காகவும் உயர்வுக் காகவும் குரல் கொடுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எனும் உயர்ந்த தொழில் சங்கப்பணிக்காக கடந்த 4.11.2011இல் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெற்ற 37 ஆவது தேசிய மாநாட்டில் தெரிவுசெய்யப் பட்டிருக்கும் எமது வழிகாட்டியான உயர்திரு சரா.புவனேஸ்வரன் அவர்களைப் பாராட்டுவதுடன் கல்விப் புலத்துக்கு அவர்தம் அளப்பெரும் பணிகள் மேன்மேலும் சிறப்புற இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

சயன்ஸ் அக்கடமி,
நல்லூர் அரியாலை.

ஆசிரிய உறவுகள்.

**கண்ணீர் அஞ்சலி**



**ஆறுமுகம் திருச்செல்வம்**
(மின் பாவனையாளர் சேவைப்பிரிவு-சுன்னாகம்)

எமது பிரிவின் பணியாளரும் அச்சுவேலியில் வசித்தவருமான ஆறுமுகம் திருச்செல்வம் நேற்று (10.11.2011) வியாழக்கிழமை திடீரென காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**துயர் பகிர்வோர்:**
மின் அத்தியட்சகர், சக ஊழியர்களும்.

**மரண அறிவித்தல்**



*திருமதி தர்மலிங்கம் காந்திமதி*

ஞ்தையிட்டிப்புலம், வித்தகபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் காந்திமதி நேற்று (10.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் சாந்தனாதேவி, கலாதேவி (கனடா), ரோகினிதேவி, மஞ்சுளாதேவி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் திரவியம், ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), ஸ்ரீரங்கநாதன், நாராயணமூர்த்தி(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் சுலக்ஷனன், நித்திலா, கபிநாத், திவ்வியா, ஷர்மி, தர்சிகா, திவானி, மிதிலா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப ஒரு மணிக்கு கொப்பிளாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வைத்திட்டிப்புலம், வித்தகபுரம்,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பினர் நாடு திரும்பினர்

அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும் நேற்றுக் காலை நாடு திரும்பினர்.

இந்தப் பயணத்தின்போது இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பல்வேறு தரப்பினருடனும் ஆராய்ந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார். இந்தசுற்றுப் பயணத்தின் போது முதலில் அமெரிக்கா சென்றிருந்த கூட்டமைப்பினர் அங்கு இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள், கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய நாடுகளின் பிரதி அரசியல்துறை அதிகாரி மற்றும் பிரித்தானியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை சந்தித்து தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர். (த)

# திடீர் இடமாற்றம் குறித்து அரச அதிபர்கள் அதிருப்தி

மொனராகலை மாவட்ட புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு அரச அதிபரும், இடமாற்றம் செய்யப்படவுள்ள மொனராகலை மாவட்ட அரச அதிபரும் தங்களுக்கான திடீர் இடமாற்றம் குறித்து கடும் அதிருப்தி அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராகவும், முல்லைத்தீவு மாவட்ட புதிய அரச அதிபராகக் கடமையாற்றிய பத்திநாதன் மொனராகலை மாவட்ட அரச அதிபராகவும், மொனராகலை மாவட்ட அரச அதிபர் மிஹிந்து குலசூரிய அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கும் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் சரத் ரவீந்திர சில்வா மன்னார் மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எதிர்வரும் திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலைமையிலேயே முல்லைத்தீவு அரச அதிபரும், மொனராகலை அரச அதிபரும் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேற்படி இரு அரச அதிபர்களும், அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் தங்களது திடீர் இடமாற்றம் தொடர்பாக அதிருப்தி தெரிவிக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த, மொனராகலை மாவட்ட அரச அதிபர் மிஹிந்து குலசூரிய:-

நான் மொனராகலை மாவட்ட அரச அதிபராக கடந்த ஒன்றரை வருடகாலமாகக் கடமையாற்றியுள்ளேன். இந்தக் காலகட்டத்திற்குள் அபிவிருத்தி உட்பட பல்வேறு சேவைகளை இம்மாவட்ட மக்களுக்காகச் செய்துள்ளேன். இறுதியில் என்னை அரச நிர்வாக அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக எனது அதிருப்தியை அரச நிர்வாக அமைச்சிடம் தெரிவிக்கவுள்ளேன்.

அதேபோன்று, மொனராகலை மாவட்ட புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு அரச அதிபர் பத்திநாதனும் இந்தத் திடீர் இடமாற்றத்தால் தாம் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிவித்தார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட அரச அதிபர் பத்திநாதன்:- இந்தத் திடீர் இடமாற்றமானது ஏற்கமுடியாத ஒன்றாக இருந்தபோதிலும், வேறு வழியில்லை. அரச உத்தியோகத்தர் என்ற வகையில் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டால், கட்டாயமாகச் செல்லவேண்டும் - என்றார் அவர். (த-சி)

# சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

கிளிநொச்சிப் பகுதியில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி மேற்படி சந்தேக நபர்கள் மூவரும் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் இரவு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று சந்தேக நபர்களுக்கும் வவுனியாப் பகுதியில் இடம்பெற்ற ஐந்து கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பிருப்பதாகவும், வவுனியா மாவட்ட நீதிமன்றில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்

மன்னார் மாவட்டத்தில் இரண்டு களவுகளுடன் இவர்களுக்குதொடர்பிருப்பதாகவும், மன்னார் மாவட்ட நீதிமன்றில் இவர்களுக்கெதிராக ஆறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே கிளிநொச்சியில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்களுக்குத் தொடர்பிருப்பது பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (10-06)

# பஸ் மோதியதில் படுகாயமுற்றவர் மரணம்

பயணிகள் பஸ் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று மரணமானார்.

இந்த விபத்துச் சம்பவம் யாழ். பிரதான வீதி மடத்தடியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் டேவிட் வீதியைச் சேர்ந்த பஸ்ரியாம்பிள்ளை மங்களதாஸ்(வயது -40) என்பவரே மரணமானார்.

படுகாயமடைந்த இவர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மரணமானார்.

யாழ். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் திருச்செல்வம் (மோகன்)

(மின்பாவனையாளர் சேவை நிலையம், சுன்னாகம்)



அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியை, பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் திருச்செல்வம் (மோகன்) நேற்று (10.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னமுத்து தம்பதியரின் மூத்த மகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், சிவனேஸ்வரன், புஸ்பலதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுசித்தா, கிருஷ்ணவேணி, பிரசாந், இந்துஜா, கிரிஷாந், திஷாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், கஸ்தூரி, பிரியா, சுதாகரன், குபேந்திரன், உதயன் ஆகியோரின் அன்பு மாமனும், தனுஜன், தர்சிகா, தனுசியா, இமாஷன், ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், குணசேகரம், சறோஜா, அருணகிரிநாதன், பரமநாதன், கமலாதேவி, சரோஜினிதேவி, சண்முகநாதன், லோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

# பிற்போடப்பட்டுள்ளது

12.11.2011 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த ஊர்காவற்றுறை பிரதேச சபையின் புதிய தலைமைச் செயலக கட்டடத் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திறப்பு விழா திகதி பின்னர்அறியத் தரப்படும்.

ஊர்காவற்றுறை பிரதேசசபை.

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் பயிற்சிமையம்.
Spoken English
veta®
Experts in English Training
ISO 9001:2000 INSTITUTION
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 10.00 a.m. Mon, Wed, fri 8.30 a.m. Sat, Sun 4.00 p.m. | Sat, Sun 1.30 p.m. Tue, Fri 8.30 a.m. Wed, fri 3.30 p.m. | Sat, Sun 8.00 a.m. Wed, fri 9.30 a.m. | 1st Batch Mon, Tue 3.30. p.m. |

இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலுங்கள்.

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, Tel. :021-227 0243 | கே. கே. எஸ் வீதி, Tel. : 021-320 7700 |

CHEMISTRY - 2012 A/L
By. க. சிவத்திரன் . B.sc (Hons)
மீள் பரீட்சார்த்திகளுக்குரியது
முதல் தடவை தோற்றுவோரும்
பங்குபற்றலாம்
1. Organic (Theory) sat & sun 3.30-4.30
ஆரம்பம் 13.11.2011 Sun
2. Inorganic (Theory) Sat & Sun 4.30-5.45
ஆரம்பம் 13.11.2011 Sun
3. Physical (Theory) Sat 12.15-2.30
ஆரம்பம் 03.12.2011 Sat
4. Model Paper Tue/Thur Sat 12.15-1.30
ஆரம்பம் 06.12.2011 Tue
5. Day class Mon, Tue, Wed, Thur, Fri Sat
NEW SCIENCE HALL

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவு பரீட்சை 2012 ஜனவரி
LL.B 2012/2013
மேற்படி பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு
இடம்:
யாழ்/முத்துத்தம்பி வித்தியாலயம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
காலம்: 12.11.2011
நேரம்: காலை 9 மணி
நுழைவுக்கட்டணம்: 500/=
T.P.: 0776073043 / 0777246 723

O/L மாணவர்களுக்கான
வரலாறு பகுதி I
வினா, விடைத் தொகுப்பு
By: S.ரிரா
அனைத்து முன்னணி புத்தகசாலைகளிலும் விற்பனையாகிறது.

கணக்கீடு
S.துரை
A/L 2012
கம்பனி
ஆரம்பம்
நாளை 4 p.m.
பங்குடைமை
நாளை 3 p.m.
A/L 2013
தொடங்கல்
நாளை 11 a.m.
5 p.m.
தவிர்ப்பு அனுமதி உண்டு.
யூனிவேர்சல்
கல்வி நிலையம்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
25% கட்டணக் கழிவு
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
அனைத்துப் பிரிவுகளுக்கும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500209
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 13A, Annai Teresa Lane, (Near Rambaikulam Girls Convent) Rambaikulam, Vavuniya. Tel: 024 324 5287

புதியதோர் உலகம் செய்வோம்
DCM
1ம் குறுக்குத் தெரு, யாழ்நகர்
கணக்கீடு AP.பகீரதன் B.B.A(Fin.Spl)

| A/L-2013 | A/L-2012 |
|---|---|
| கட்டுப்பாட்டுக் கணக்கு Sat, Sun 9 - 10 | பங்குடைமை முடிவுக்கணக்கு Sat, Sun 11 - 12 |

ஆரம்பம் - 12.11.2011 சனிக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.